NGAYAR MALAR

டோபர் '93 ரூ. 7/-

மங்கையர் மலர்



நவராத்திரி சிறப்பிதழ்

"எங்களுக்கும் நவராத்திரின்னா
ஆசைதான், ஆனால்...."

- கலந்துரையாடல்



* பேலமாமா ஸ்ரீ புவனேஸ்வரி

சுவாஸினி பூஜை!

'இறைவன் தான் படைத்த ஒவ்வொரு உயிரையும் பக்கத்திலேயே இருந்து தனித்தனியே கவனிக்க முடியாது என்பதால் தான் தாயைப் படைத்தான்' என்பது பிரபலமான வாக்கு. ஆம், தாய் அந்த அகிலாண்ட நாயகியின் அவதாரம். பெண் என்பவள் உலக உயிர்களைத் தன் கருவில் தாங்கி வளர்த்து உலகுக்குக் கொடுப்பதால் அவளே படைப்பின் ஜீவாதாரமாகிறாள். எனவே அவள் தேவியின் சொரூபம். பூஜிக்கத் தகுந்தவள்.

இறைவனைப் பூஜிக்கும் வகைகள் எத்தனையோ. ஸ்ரீவித்யா உபாசகர்கள் அவற்

றில் ஒன்றாக 'சுவாஸினி பூஜை'யை வைத்திருக்கிறார்கள். சர்வ லக்ஷணங்களும் பொருந்திய தாய்மையின் சொரூபமான பெண்களை அந்தப் பரமேஸ்வரியாக ஆவாஹனம் செய்து பூஜிப்பதே சுவாஸினி பூஜை. அதிலும் பெண்களின், சக்தியின் பண்டிகையான நவராத்திரியில் இந்தப் பூஜை செய்வது இன்னும் விசேஷம்.

இதனால்தான் பூஜ்யஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் மிகப் பெரிய அளவில் ஒவ்வொரு வருடமும் நவராத்திரி உற்சவத்தைக் குறிப்பாக சுவாஸினி பூஜையை முறைப்படி செய்து வருகிறார். மகாமேருவின் வடிவாகக் கோலத்தை அமைக்கிறார்கள். ஏழு ஜீவநதிகளான கங்கை, நர்மதை, காவிரி, கோதாவரி, கிருஷ்ணா, தாமிரபரணி மற்றும் பிரம்மபுத்திரா நதிக் கரைகளின் ஆற்று மணலைக் கொண்டு வந்து வஸ்திர காயம் செய்து சுவாஸினிகள் வரும் வழியில் தூவுகிறார்கள். அதன்மேல் பூக்களால் அலங்கரித்து பெண்களை அழைத்து வருகிறார்கள். தேவியின் பதினைந்து நித்தியா தேவிகளின் சொரூபமாக அவர்களை மூன்று முக்கோணங்களில் அமரச் செய்கிறார்கள். அவர்களுக்குச் சாமரம் வீசி, பன்னீர் தெளித்து, புத்தாடை அணியச் செய்து பூஜிக்கிறார்கள்.


''சுவாஸினியர்ச்சன ப்ரீதா'' என ஆதி சங்கரர் தேவியின் குணத்தை வருணிக்கிறார். எனவே தேவியை மாவிட ரூபத்தில் வணங்கும் அற்புதமான பூஜை இது. பதினாறு உபசாரங்கள் செய்த பின்பு அறுசுவை உணவு. அவர்கள் உண்டு களித்தபின் தாம்பூலம் தரிக்கச் செய்கிறார்கள். 'தாம்பூல பூரித முக்யை நம:' என்று நாமாவளி சொல்கிறதல்லவா?

இது மட்டுமல்ல. சுவாஸினியின் பாதம் பட்ட பாததூளியைச் சேகரித்துப் பூஜிக்கவும் செய்கிறார்கள்! சுவாஸினி பூஜையைப் போலவே 'பாலா பூஜை' என்பதும் நடைபெறுகிறது. கன்னிப் பெண்களான சிறுமிகளை அழைத்து அவர்களை அந்த 'பாலா திரிபுர சுந்தரி'யாக வரித்துச் செய்யப்படும் பூஜை இது.

ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் பெண்களுக்கு ஒப்புயர்வற்ற மேன்மையைத் தரும் இப் பூஜைகளை மட்டுமல்லாமல் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ சாந்தி துர்க்கா பூஜை, ஸ்ரீ அதர்வண பத்ரகாளி பூஜை, ஸ்ரீ நவசண்டிகா ஹோமம் போன்றவற்றையும் மிகப் பெரிய அளவில் செய்கிறார். கடைசி நாளன்று ஸ்வாமிகளின் இஷ்டதெய்வமான யோக மாயா ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்ரீ சக்ர ரதத்தில் வலம் வந்து பக்தர்களை மெய்மறக்கச் செய்கிறாள்.

''நாமெல்லோருமே ஸ்ரீவித்யா குலம் தான். பெண்களை அந்த புவனேஸ்வரியின் வடிவமாக பூஜிக்கும்போதே மனதிலே பெண்களை தெய்வ வடிவமாகப் பார்க்கிறோம். அதுதான் இந்த புண்ணிய பூமியின் கலாசாரம்'' என்கிறார் ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள்.

''சண்டி ஹோமம் ரொம்ப விசேஷமானது. மனித மனத்திலே அரக்க குணம் மிஞ்சும் போது சமுதாயத்திலே பல்வேறு இன்னல்கள் பிறக்கின்றன. தாங்க முடியாத துன்பம் மனித குலத்தை வாட்டுகிறது. இந்த நேரத்திலே மகிஷன் என்ற அசுரனை வீழ்த்திய சண்டி பரமேஸ்வரியைத் துதித்து அபயம் கேட்கும்விதமாக 'சண்டி ஹோமம்' செய்வது மகாவிசேஷம். சண்டிஹோமம் செய்து அந்த ரக்ஷையை அணிந்தால் அசுரனை வதைத்த அந்த மாகாளி நம்மையும் கொடும்





புதிய காம்ப்ளான் - விட்டாமில்க் தாய்மை யடையும் பருவத்தில் உணவின் குறை நிரப்ப விஞ்ஞான ரீதியாக தயாரிக்கப்பட்டது.

தாய்மையடையும் பருவத்தில், குழந்தையின் வளர்ச்சிக்குப் போதுமான ஊட்டச்சத்தை வழங்கும் உங்கள் உடலுக்கு... உணவின் குறை நிரப்பும் காம்ப்ளான் - விட்டாமில்க் தேவை.



நித்தம் இரண்டு கப் காம்ப்ளான் - விட்டாமில்க், காம்ப்ளானின் எல்லா நற் பயன்களையும், அதோடு இந்த கூடுதல் ஊட்டச் சத்துக்களையும் உங்களுக்கு வழங்கிடும்.

கூடுதல் ஃபாலிக் ஆஸிடு
கூடுதல் பால் புரதம் (22.2 கிராம்)
கூடுதல் வைட்டமின்கள் A, B_6, C
கூடுதல் இரும்புச்சத்து.
அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மங்கனீஷியம்.

இது உங்களுக்கும், சிசுவின் ஆரோக்கியத்திற்கும் அத்தியாவசியமானது.

நித்தம் பருகுங்கள்

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்®

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ.

GL/92/401 c TM



துன்பத்திலிருந்து காப்பாள். இது உறுதி'' என்கிறார் ஸ்வாமிகள்.

மனிதகுலம் தழைக்க, சமுதாயம் துன்பக் கடலிலிருந்து கரை சேரவே ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் ஒவ்வொரு வருடமும் மிகப் பெரிய அளவில் நவராத்திரி விழாவைக் கொண்டாடுகிறார். ஸ்ரீ வித்யா ஆராதனையில் பாரத தேசத்தில் ஸ்ரீபாஸ்கர ராயருக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்குபவர் ஸ்வாமிகள்தான் என்கிறார்கள்.

சென்னை அம்பத்தூர் ரெட்ஹில்ஸ் சாலையில் கங்கை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பாரத்வாஜ ஆச்ரமத்தில் இந்த வருடமும் ஸ்ரீ சாரதா நவராத்திரி மஹோத்சவம் 16.10.93 முதல் 25.10.93 வரை ஸ்ரீவித்யா பத்ததிபடி நடக்க இருக்கிறது.

– 'புவன்'

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன் :

பொருள் : முளை கட்டிய உணவு கடைசி தேதி : 15.10.'93

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

''சொட்டு நீலத்துடன்''
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன் தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு:

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில் நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக உறிஞ்சப்பட்டு இரண்டறக் கலந்து, ஆக்ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது. உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது. ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்று சான்றிதழ் பெற்றது உஜாலா. இது ஜோதி லேபாரட்டரீஸின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.



JYOTHY LABORATORIES
Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா

குருப்பெயர்ச்சியும் உங்கள் அதிர்ஷ்டமும்

(12.10.93 முதல் 10.11.94 வரை) சமீபத்தில் நடைபெற இருக்கும் குருப்பெயர்ச்சிக்கான 12 ராசிகளுக்குமான பலன்கள். ஆசிரியர் சிவமேகநாதன்.

விலை ரூ. 4.00

மனோசக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்

விலை ரூ. 10.00

புதிரான மனத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

விலை ரூ. 10.00

(இரண்டிற்கும் ஆசிரியர் - ஸ்வாமி. மூன்றும் - பதிப்பு - கீதா பிரசுரம் பிரஸ், 22, மங்கேஷ் தெரு, தி.நகர்., சென்னை - 17.)

பெற்றோர் - மாணவர் கையேடு

பெற்றோரும், குழந்தைகளும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள சிறு சிறு கட்டுரைகள் - ஆசிரியர் அல்ஹாஜ் அப்துல் பாரி.

விலை ரூ. 25.00

(நசீம் பிரதர்ஸ், 12, இரண்டாவது மெயின் ரோடு, சி.ஐ.டி. காலனி, சென்னை - 600 004.)

உங்கள் குழந்தை

பிரபல மருத்துவர் டாக்டர். ஜே. விஸ்வநாத் குழந்தைகளின் மனநல, உடல்நல காப்புப் பற்றி எழுதியுள்ளார்.

விலை ரூ. 15.00

(பூரம் பதிப்பகம், 59, ராஜா நாயக்கர் தெரு, சென்னை - 33.)

ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் மூன்றிலும் கொடுக்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பு, தொகுப்பு - எம். கணேச ஐயர்.

விலை ரூ. 3.00

ஸுந்தர காண்டம், நவரத்ந மந்த்ர மாலா

ஸுந்தர காண்டம் பாராயணம் செய்ய விரும்புபவர்களுக்கு, அதிலிருந்து ஒன்பது ஸ்லோகங்களும் பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

விலை ரூ. 5.00

(இரண்டும் கிரி பப்ளிகேஷன்ஸ், தி.நகர்., சென்னை - 600 017.)

12 ராசிகளுக்கும் குருப்பெயர்ச்சி

ஆசிரியர் காழியூர் நாராயணன்

விலை ரூ. 4.00

(ஸ்ரீ காமகோடி பப்ளிகேஷன்ஸ், 58/2 டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.)

ஸ்ரீவிநாயகர் புராணம்

பதினெட்டு புராணங்களுள் முதன்மையான விநாயகர் புராணம் முழுமையாகக் கூறப்பட்டுள்ளது. பூஜை செய்யும் முறைகள், பலதேசத்து விநாயகர் உருவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை ரூ. 30.00

(கிரி பப்ளிகேஷன்ஸ், 58/2 டி.எஸ்.வி. கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.)

பழங்களின் மருத்துவக் குணங்கள்

விலை ரூ. 6.00

புக் ஷெல்ஃப்



காய்கறிகளின் மருத்துவக் குணங்கள்

விலை ரூ. 7.00


(இரண்டிற்கும் ஆசிரியர் - டாக்டர் திருமலை. நடராசன். பதிப்பு - தமிழ்ச் செல்வி நிலையம், 43, சித்திரைக் குளம் வடக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.)

அழகுக்கு ஆராதனை

ஆதிசங்கரரின் சௌந்தர்ய லஹரியின் தமிழாக்கம் - இரா. பழனிசாமி.

விலை ரூ. 13.00

(பழநி பதிப்பகம், 2/38 அன்புக் காலனி, சத்யமூர்த்தி நகர், நந்தனம், சென்னை - 600 035.)



வேதங்களின் நாதங்கள்

வேதங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு எளிமையான தமிழ் நூல். ஆசிரியர் தங்கவயல் லோகிதாசனார்.

விலை ரூ. 25.00

எங்கள் தமிழ்மொழி

தமிழின் தனிச்சிறப்பு, வரலாறு, இலக்கியம் எனப் பல நிலைகளை விளக்குகிறார் தங்கவயல் லோகிதாசனார்.

விலை ரூ. 25.00

(இரண்டும் - பாண்டியன் பதிப்பகம், 20, எஸ். பி. சன்னதித் தெரு, இராயப் பேட்டை, சென்னை - 600 014.)

அஷ்டவர்க்க ஜாதகப் பலன்கள்

ஜாதகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு.

விலை ரூ. 17.00

பல்வேறு பிளாஸ்டிக் பொருள்களைத் தயாரிப்பது எப்படி?

விலை ரூ. 16.50

(இரண்டும் - தொகுப்பு மணி மேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. பதிப்பு - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர்., சென்னை - 600 017.)

இண்டர்வியூவில் வெற்றி பெறுவது எப்படி?

சுவையான எளிய தமிழில் யோசனைகள் கூறுகிறார் என்.சி. ஸ்ரீதரன்.

விலை ரூ. 20.00

(என்.சி. ஸ்ரீதரன், 4, III ரெஸிடென்ட் பார்க் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 600 020.)

கேசட்

திருமாலின் நாமமாயிரம்

விஷ்ணு சகஸ்ரநாமம் தமிழில். மொழி பெயர்ப்பு - ஆர். நரசிம்மன். பாடியவர்கள் - பம்பாய் சகோதரிகள். வெளியீடு, கீதா கேசட்ஸ், 58/2 டி.எஸ்.வி. கோயில் தெரு, சென்னை - 600 004.)

விலை ரூ. 32.00

பகவத் கீதா

இரட்டை ஆடியோ கேசட்ஸ். டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் இசையமைப்பில் 'பகவத் கீதா'வின் இரட்டை கேசட்களை ஜி.வி. பிலிம்ஸ் வெளியிட்டுள்ளது. பாடியுள்ளவர்கள் - பாலமுரளி கிருஷ்ணா, வாணி ஜெயராம், கலாவதி.

விலை ரூ. 55.00



உங்கள் வீடும் அரண்மனையாகலாம்!

'வீட்டைக் கட்டிப் பார்' என்பார்கள். நகர்ப்புறங்களில் சிறிய அடுக்கு வீடு கட்டுவதிலேயே மூச்சுத் திணறிவிடும் இந்தக் காலத்தில் அரண்மனை போன்ற சுவர்ப் பூச்சுகளும், குளுகுளுவென இருக்கும் அறைகளையும் எண்ணிப் பார்க்க முடியுமா எனப் பெருமூச்சு விடும் நடுத்தர வர்க்கத்தினருக்கு முடியும், கண்டிப்பாய் முடியும், உங்கள் வீடும் அரண்மனை ஆக முடியும்' என்கிறார் திருமதி சாந்தா மோகன்.

அசல் மார்பிளைப் போன்ற 'மாஜிக் மார்பிளினை' 'யோகிராம் சூரத்குமார் மார்பிள்ஸ்' (வெரய். ஆர். கே. மார்பிள்ஸ்) என்ற பெயரில் தமிழ் நாட்டினில் அறிமுகப்படுத்தியுள்ளனர் லெப்டினன்ட் கர்னல் மோகன், சாந்தா மோகன் தம்பதியினர்.

"இது ஒருவகை கலவைப் பூச்சுதான். ஆனால் சுவரில் வண்ணம் அடித்த பிறகு மார் பிள் பதித்தது போன் றிருக்கும். இத்தகைய வண்ண சுவர்ப் பூச்சு அரசர், பணக் காரர்களின் மாளிகைகளில் ஒன்பதாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. இதன் தயாரிப்பு இரகசியத்தை பல நவீன முன்னேற்றங்களுடன் இராஜஸ்தானைச் சார்ந்த திருமதி அபர்ஜிதா மிஸ்ரா கடந்த பல வருடங்களாக வட நாட்டினில் பயன்படுத்தி வந்தார். இராணுவத்தில் பணியாற்றிய நான் குழந்தைகளின் படிப்புக்காக தமிழ் நாட்டில் தங்க வந்தேன். மக்களுக்குப் பயன்படக் கூடிய புது மாதிரியான தொழிலை ஆரம்பிக்க நினைத்த எங்களுக்கு இந்தத் தொழில் மிகவும் பிடித்திருந்தது. ஆகவே இதனை நாங்கள் இங்கு ஆரம்பித்தோம்."

" 'மேஜிக் மார்பிள்' அசல் மார்பிளின் தோற் றத்தைப் பெற்றது. இது முற்கால ராஜாக் கால சுவர்க் கலவையின் ரகசிய புதுப்பிப்பு. இதனை

* சாந்தா மோகன்



பிரவுன் ரியாலம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் மட்டுமே அறிவர். ஒரிஜினல் மார்பிள் சதுர அடிக்கு ரூ. 80 வரை ஆகும். ஆனால் இதற்கு அடிக்கு ரூ. 18 - 20 வரைதான் ஆகும். புதுக் கட்டிடங்களானால் செங்கல் வைத்து, சிமெண்ட் பூசிய பிறகு இதனைப் பூசுவோம். பழைய கட்டிடங்களானால் சுவரினைச் சற்று தேய்த்து சுத்தம் செய்து பின்னர் இக் கலவையைப் பூசி விடு வோம். இப் பூச்சுக்குப் பிறகு எந்த ஒரு கட்டிடமும் புதுப் பொலிவினைப் பெற்று விடும். இதற்கான ஆட்களைக் கூட இராஜஸ்தானிலிருந்துதான் வர வழைக்கின்றோம்'' என்கிறார்கள்.

''வேறென்ன நன்மைகள் இதனால்?''

''பத்து வருட உத்திரவாதம் உடையது. பராமரிப்பு மிக மிக எளிது. தண்ணீர் விட்டுக் கழுவி விடலாம். சுவரில் கறை படிதல் குழந்தைகள் கிறுக்குதல் போன்ற பிரச்னையே இருக்காது.

கண்ணைக் கவரும் பல வண்ணங் களில் நேர்த்தியாய் இருக்கும். சிலர் இதனைப் பூசும் பொழுதே சுவரில் சித்திரங்கள் கூடக் கேட்கிறார்கள். அதனையும் செய்து வருகின்றோம். ஏஸி அறைகளில் இக் கலவையை சுவரில் பூச இயற்கையான குளிர்ச்சி கிடைப்பதுடன் மின்சாரச் செலவு 30% குறைந்து விடுகிறது. பூச்சி, காளான் கிருமி என்ற எந்தத் தொல்லையும் இராது.''

இதனை எங்கெங்கு பயன்படுத்து கின்றார்கள்?

''வீடுகள், மருத்துவமனைகள், சிற் றுண்டி சாலைகள், கம்ப்யூட்டர் அறை கள் ஆக எல்லா இடங்களிலும் இது உபயோகப்படுத்தப்படுகின்றது.''

வெளிநாடுகளில் இந்த நவீன கலவைப் பூச்சினை வரவேற்கின்றார்களா?

''தாய்லாந்து, பர்மா, இந்தோனே ஷியா, நேபாளம் போன்ற நாடுகளில் இது மிகவும் பிரபல்யமானதே.''

''பெண்ணாக இருந்து இந்த கட்டிட பூச்சு வேலையினை உங்களால் எந்த வகையில் நிர்வகிக்க முடிகின்றது?''

''ஆபீஸ் நிர்வாகம், மக்கள் தொடர்பு, கணக்கு போன்றவை என் பொறுப்பு. கட்டிட வேலை சூப்பர் வைஷன் போன்ற வெளி வேலை களை என் கணவர் சென்று கவனிப் பார். சற்று ஓய்வு நேரங்களில் கலவைகளின் மூலம் புதுப் புது டிசைன்களை உருவாக்குவோம்''

என்று புன்முறுவலித்தார் சாந்தா மோகன். சென்னை, கோடம்பாக்கம் புலியூரில் இருக்கும் இவரை 4836901 என்ற தொலை பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

– புவன்



ஆவின் நிறுவன மும், சென்னை மாவட்ட கேரம் அசோசியேஷனும் இணைந்து நடத்திய கேரம் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் செல்வி ஜி. ரேவதி முதலாவதாக வந்தார்.

ஆவின் மக்கள் தொடர்பு அலுவலர் திரு. க. சிவகாமி நாதன் முதலாவதாக வந்த செல்வி ஜி. ரேவதிக்குப் பரிசுக் கோப்பையை வழங்கினார்.









பெண்களுக்கேற்ற பயனுள்ள தொழில் நூல்கள்!

வீட்டிலுள்ள பெண்களுக்கு ஏற்ற தொழில்கள் 13.50; பனைப் பொருள்களும் பயன்களும் 5.50; இலாபம் தரும் இறால் வளர்ப்பு 15.00; பலவகைப் பற்பொடிகளும், வாசனைப் பொருள்களும் செய்யும் முறைகள் 11.00; கலப்புக் காளான் வளர்ப்பு முறைகள் 11.00; சிறிய அளவில் மீன் பண்ணைகள் நடத்துவது எப்படி? 18.00; சுயமாகத் தொழில் தொடங்க வழிகள் 20.00; சுயவேலைவாய்ப்பும், கலைத் தொழில்களும் 20.00; கலைத் தவணைத் தொழில்களும், கைசம்பாத்தியமும் 14.00; பல்வேறு தொழில்களுக்கான இயந்திரங்களும், மூலப்பொருள்களும் கிடைக்கும் முகவரிகள் (2,500 விலாசங்கள்) 26.00; பல்வேறு கமிஷன் தொழில்கள் மூலம் சம்பாதிப்பது எப்படி? 12.00; பல்வேறு பிளாஸ்டிக் பொருள்களைத் தயாரிப்பது எப்படி? 16.50; சிறுதொழில் செய்முறைகள் (82 தொழில்களைப் பற்றி) 34.00; காலத்திற்கு ஏற்ற தொழிலும் கை நிறைய வருமானமும் 25.00; பல பொருள்களின் தயாரிப்பு விஷயங்கள் 11.00; உயர்வடைய உன்னதத் தொழில்கள் 15.00; ஓய்வு நேரத்தில் சம்பாதிப்பது எப்படி? 15.00.

ஏற்றுமதி - இறக்குமதிச் சட்டம் 9.50; சுங்க வரிச் சட்டம் 9.75; உங்கள் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான வழிகள் (1500 உலக இறக்குமதியாளர்களின் விலாசங்களுடன்) 32.00; தோல் தொழில் முறைகளும் இறக்குமதியாளர் முகவரிகளும் 15.00; தொலைக்காட்சியின் கதை 17.00; ரேடியோ, டிரான்ஸிஸ்டர் அசெம்பிளிங் - மெக்கானிசம் 25.00; டேப் ரெக்கார்டர் அசெம்பிளிங் - மெக்கானிசம் 22.00; ஸ்டீரியோ ஆம்ப்ளிஃபயர், ரெக்கார்டு பிளேயர் மெக்கானிசம் - ரிப்பேரிங் 26.00; டெலிவிஷன் மெக்கானிசம் - ரிப்பேரிங் 25.00; வீடியோ மெக்கானிசம் - ரிப்பேரிங் 25.00; நீங்களே டெலிவிஷன் ஆன்டெனாக்களை நிறுவுவதும், பழுதுபார்ப்பதும் எப்படி? 15.00; மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்க்கான சட்டங்கள் 15.00; ரெப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷனர் மெக்கானிசம் - ரிப்பேரிங் 20.00; வீட்டு ஒயரிங் செய்வது எப்படி? 34.00; மோட்டார் சீலைவண்டிகள் 40.00; வெல்டிங் தொழிலைக் கற்றுக் கொள்ளுங்கள் 27.00; சைக்கிளை ரிப்பேர் செய்வது எப்படி? 14.00.

நீங்களே குழாய் ரிப்பேர்களைச் சரிசெய்வது எப்படி? 13.50; சுயமாகச் செங்கல் தயாரிப்பது எப்படி? 7.50; இலாபகரமாக முயல் வளர்ப்பது எப்படி? 15.00; கோழி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி? 10.00; தேனீ வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி? 9.00; பட்டுப்பூச்சி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி? 13.00; ஆட்டு, மாட்டுப் பண்ணைகளைப் பராமரிப்பது எப்படி? 25.00; இலாபகரமாகப் புறா வளர்ப்பது எப்படி? 18.00; வியாபாரத்தை விருத்தி செய்வது எப்படி? 11.00; வியாபாரத்தில் இலாபத்தைக் குவிப்பது எப்படி? 14.00; உங்கள் பணத்தைப் பங்கு முதலீடுகள் மூலம் பன்மடங்கு ஆக்குவது எப்படி? 12.00; மூலதனத்தைத் திரட்டுவது எப்படி? 14.00; பல்வேறு வட்டித் தொழில் செய்து சம்பாதிப்பது எப்படி? 13.00; வங்கிகளில் கடன் பெறுவது எப்படி? 15.00; அரசு தரும் மானியங்களையும், உதவிகளையும், சலுகைகளையும் பெறுவது எப்படி? 11.00; ஊனமுற்றோருக்கான உதவிகளும் அவற்றைப் பெறும் வழிமுறைகளும் 24.00; முன்னாள் ராணுவத்தினர் தொழில் கடன் பெறுவதற்கான வழிகளும் விவரங்களும் 15.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும் போது பணம் செலுத்தினால் போதும் (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி :

மணிமேகலைப் பிரசுரம்,
தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை, தியாகராயநகர்,
சென்னை - 600 017. போன் : 442926.
ஃபேக்ஸ் : 044-446082

உங்கள் குழந்தை நன்றாக எடை போடுவதற்கு சமவிகித ஊட்டச் சத்து அத்தியாவசியமானது.


குழந்தைகள் சும்மா எடை போட்டால் மட்டும் போதாது. அவர்கள் 'சரியான' முறையிலே எடை போட வேண்டும். குறைவாகவும் கூடாது, மிகவும் அதிகமாகவும் கூடாது. குழந்தைகள் 'சரியான' அளவில் எடை போட வேண்டுமானால் தசைகளையும், திசுக்களையும் வளர்ப்பதற்கும் ரத்த விருத்திக்கும் உதவக் கூடிய **புரோட்டீன்கள்** தேவை.

இந்த புரோட்டீன்களைப் பெறுவதற்குச் சிறந்த வழி **ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த உணவைத் தர** வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு **4 மாதங்கள் ஆன பிறகு** பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு உங்கள் குழந்தைக்குத் தேவைப்படுகிறது.

எனவேதான் தாய்மார்கள் **செரிலாக்கைத்** தேர்ந்தெடுக்கின்றனர். ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவான செரிலாக்கில் புரோட்டீன்கள் செறிந்துள்ள இரண்டு முக்கிய பொருட்களான பாலும் கோதுமையும் உள்ளன. கொழுப்புச் சத்து, கால்ஷியம் ஆகிய சத்துக்களும் சம அளவில் கலந்துள்ளன. மேலும் இதற்கு வைட்டமின்கள் A, D, E, B-காம்ப்ளெக்ஸ் மற்றும் C பலம் சேர்க்கின்றன.

இன்னுமொரு சிறப்பு, செரிலாக் இப்போது நெஸ்லேயின் **புரட்சிகரமான புதிய Z-லைன் என்ஸைமேட்டிக் முறைப்படி** தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகிறது. செரிலாக் மிக எளிதில் ஜீரணமாகிவிடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது. எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் செரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு புரோட்டீன்கள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை 'சரியான' முறையிலே எடை போடுவதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சமவிகிதத்தில் கலந்த திட உணவு இது.





இலவசம். செரிலாக் பேபி கேர் புத்தகம்


உங்கள் குழந்தையின் வயது/பிறக்கப் போகும் தேதி, உங்களுக்கு விருப்பமான மொழி ஆகிய விவரங்களை எமக்கு எழுதுக: செரிலாக், தபால் பை எண் 31, புது தில்லி - 110 035.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.

டாக்டர் பி. பி. ராஜன்

புகைக்காதீர்... புற்றுநோய்க்கு பலியாகாதீர்!




வாயில் புற்றுநோய் :

உடலில் உள்ள பல உறுப்புகளிலும் புற்றுநோய் வருவது போன்றே வாயிலும் அதிலுள்ள மற்ற எல்லாப் பாகங்களிலும் புற்றுநோய் உண்டாகிறது. மற்றெல்லா வியாதிகளையும் விட அதிகமாகப் புற்றுநோய் தென்படுவதால், மக்கள் இறப்பதற்கான காரணங்களில் புற்றுநோய் முதலிடம் வகிக்கிறது. அதிலும் வாயில் தோன்றும் புற்றுநோய் ஒரு கணிசமான விழுக்காடு அதிகமாக உள்ளது.

உலகிலேயே வாய்ப் புற்றுநோய் அதிகமாகத் தோன்றக் கூடிய பிரதேசம் தென்னிந்தியாவாகும்; அதிலும் குறிப்பாக, தமிழகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களாகும். இதற்கு முக்கியமான காரணம், இங்கு ஏற்பட்டிருக்கும் பழக்கவழக்கங்கள்தான். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, மற்றும் புகையிலையையும் சேர்த்து வாயில் போட்டு மென்று கொண்டிருக்கும் பழக்கம் தமிழ்நாட்டில் அதிகமாகக் காணப்படுகிறது. நெருப்பு இருக்கும் பக்கத்தை வாய்க்குள் வைத்துப் புகைபிடிக்கும் பழக்கம் ஆந்திர மாநிலத்தில் கிராமப்புறத்து மகளிர்க்கு உள்ளது. இம்மாதிரிப் பழக்கங்களுக்குத் தகுந்தாற்போல வாயில் பல இடங்களில் புற்றுநோய் உண்டாகிறது. உதட்டின்

இரு பக்கங்களிலும் வைட்டமின் சத்துக் குறைவால் புண்கள் ஏற்படலாம். நாளடைவில் அவைகள் புற்று நோயாக மாறலாம்.

வாயில் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்களை நாம் ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். நாக்கின் பக்கவாட்டிலும் கன்னத்தின் உட்பகுதியிலும் புற்றுநோய் உண்டாகக் காரணம், கூர்மையான பற்கள். சாதாரணமாக நாம் பற்களைத் துலக்கும் போது, மிருதுவான பற்பசை அல்லது பற்பொடியைத்தான் உபயோகிக்கிறோம். இதற்கு மாறாக, சிலர், கடினமான பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள். மணல், செங்கற் பொடி, கரித்தூள் போன்றவற்றைப் பயன்படுத்தி பல் துலக்குவதை நாம் நேரடியாகப் பார்க்கிறோம். இதுபோன்று கடினமான



பொருள்களை வைத்து பற்களைச் சுத்தம் செய்யும் போது அந்தப் பகுதி தேய்ந்து போய், பற்கள் கூர்மையாக ஆகி விடுகின்றன. பற்களைத் தேய்க்கும் முறையைப் பொருத்து, நாக்கின் பக்கமாகவோ அல்லது கன்னத்தின் பக்கமாகவோ பற்கள் கூர்மையாகி விடும். வாயின் மிருதுவான பாகங்கள் கூர்மையான பற்களின் மேல் பட்டு புண் ஏற்படுகிறது. நாம் பேசும் போதும் சாப்பிடும் போதும் ஏற்படும் அசைவில் வாயின் மிருதுவான பாகங்கள் மீது கூர்மையான பற்கள் பட்டு புண் உண்டாக ஏதுவாகிறது. பல் நன்றாக வெள்ளை நிறமாக வேண்டுமென்று, சிலர் அமிலம் கலந்த ரசாயனப் பொருட்களை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்கிறார்கள். இதனாலும் பற்கள் கரைந்து கூர்மையாகி விடுகின்றன. இதைத் தவிர, அடிபட்டோ அல்லது சொத்தை ஏற்பட்டோ பல்லின் ஒரு பாகம் உடைந்து விட்டால், பல்லின் கூர்மையான பாகம் வாயின் மற்ற பாகங்களில் குத்திக் கொண்டிருக்கும்.

நாம் தூங்கும் போது சாதாரணமாக அடிக்கடி உமிழ்நீரை விழுங்கிக் கொண்டே இருப்போம். இரவில் வாயில் சுரக்கும் உமிழ்நீரை விழுங்கும் போது நாக்கும் கன்னமும் அசைய நேரிடுகிறது. அச் சமயத்தில் வாயிலுள்ள கத்தி போன்ற கூர்மையான பற்கள் குத்தி நாக்கில் கன்னத்தில் புண் ஏற்படலாம். இந்த மாதிரி கூர்மையான பற்களை உடனடியாகத் தேய்த்து கூர்மை மழுங்கச் செய்வது மிகவும் அத்தியாவசியமான கடமையாகும்.

வாயில் புற்றுநோய் உண்டாக வேறு காரணங்கள் :

சொத்தை ஆவது அல்லது வேறு காரணத்தால் கெட்டுப் போன பற்களின் வேர்களில் சீழ் பிடித்து அது அப்படியே இருந்தால் இந்தச் சீழ்க்கட்டிகள் எலும்பையும் சுற்றியுள்ள மற்றப் பாகங்களையும் தாக்கி நாளடைவில் புற்றுநோயாக மாற்றி விடும். அடிபட்டு நிறம் மாறிய பற்களாலும் சொத்தை அதிகமாகப் பரவி பற்கூழ் மூலமாக நோய்க் கிருமிகள் தாடையின் உள்பகு

திக்குச் சென்று விடுவதாலும் அது நாளடைவில் புற்றுநோயாக மாறுகிறது.

சிலர் அதிகக் காரமான உணவு வகைகளையே விரும்பிச் சாப்பிடுவார்கள். அதிகக் காரமான உணவு வகைகளை உண்ணும் போது வாயின் உட்பகுதியிலுள்ள மிருதுவான பாகங்களில் எரிச்சல் உண்டாகிறது. குறிப்பாக, ஆந்திர மாநில மக்கள் அதிகக் காரமுள்ள உணவு வகைகளையே விரும்புவார்கள். இதுவும் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது.

பால்வினை நோய் காரணமாக வாயில் புண்கள் தோன்றுகின்றன. இப் புண்கள் நீண்ட நாட்களுக்கு ஆறாமல் இருந்தால், அவைகளும் புற்றுநோயாக மாறி விடுவதைக் காணுகிறோம்.

பொதுவாக புகைபிடிக்கும் பழக்கம் பரவலாக இருப்பதை நாம் காணலாம். அவர்கள் புகையை உள்ளே இழுக்கும் போது, முதலாவதாகப் புகை படும் இடம் வாயின் மேல் பகுதியிலுள்ள அண்ணம் (பேலட்) என்ற பகுதியாகும். இந்தப் புகை மிருதுவான அந்தப் பாகத்தை அடிக்கடி தாக்கிக் கொண்டிருக்கும் போது, அங்கே ஒருவிதமான உறுத்தல் உண்டாகி வாய்ப் புற்றுநோய் உண்டாகிறது. புகை பிடிக்கும் பழக்கம் உள்ள சிலர், கடைசி வரையில் பீடி அல்லது சிகரெட்டை வாயில் வைத்து புகை இழுப்பதால் உதட்டில் சூடு படுகிறது. திரும்பத் திரும்ப உதட்டின் மேல் சூடு படுவதால் அந்த இடத்தில் எரிச்சல் ஏற்பட்டு, பின்னர் புற்றுநோய் உண்டாகிறது.

இவைகளையெல்லாம் ஆராய்ந்து வாய்ப் புற்றுநோய்க்கு முக்கியமான காரணங்கள் ஐந்து என்று கூறுவார்கள்.

1. கூர்மையான பற்கள் (sharp teeth)
2. வாயில் சீழ் வருதல் (sepsis)
3. கார வகை உணவுகள் (spiced food)
4. பால்வினை நோய் (siphilis)
5. புகை பிடித்தல் (smoking)


இந்த ஐந்து காரணங்களும் எஸ் என்ற ஆங்கில எழுத்தை முதலாவதாகக் கொண்டிருப்பதால், வாய்ப் புற்றுநோய்க்கு ஐந்து எஸ் காரணம் என்று கூறுவார்கள்.

தொன்றுதொட்டு நம் தமிழகத்தில் வெற்றிலை போடும் பழக்கம் இருந்து வருகிறது. வெற்றிலையைப் பற்களினால் அதிகமாக அரைத்துக் கொண்டு இருப்பதால் பற்கள் தேய்ந்து கூர்மையாகி சதையைக் குத்தி புண் உண்டாகிறது. புகையிலை போடும் பழக்கமுள்ளவர்கள் அதை கன்னத்தில் உட்பக்கமாகவோ அல்லது நாக்கிற்கும் அண்ணத்திற்கும் நடுவிலோ அதிக நேரம் வைத்திருப்பார்கள். எந்த இடத்தில் புகையிலையை அதிக நேரம் வைத்துக் கொண்டு இருக்கிறார்களோ அந்த இடத்தில் புற்றுநோய் உண்டாகிறது. ஆந்திர மாநிலத்தில் கிராமப்புறங்களிலுள்ள பெண்கள் அதிகாலையில் எழுந்து வெளியே செல்லும் போது சுருட்டு பற்றவைத்துக் கொண்டு புகைப்பார்கள். அவர்களிடம் உள்ள கொடிய பழக்கம் என்னவென்றால், நெருப்பு எரியும் சுருட்டின் பக்கத்தை வாயின் உள் பக்கத்தில் வைத்துக் கொண்டு புகைபிடிப்பார்கள். இதனால் புகையின் தாக்கம் மட்டுமில்லாமல், வாய்க்குள்ளே அதிகமான சூடும் உண்டாகிறது. இவர்களிடத்தில் புற்றுநோய் வாயின் மேல் பாகத்தில் பரவலாகத் தென்படுகிறது.

மேற்கூறிய பல காரணங்களால் வாய்ப் புற்றுநோய் வருவதால், ஒழுங்கான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வெற்றிலை பாக்கு புகையிலை உபயோகிப்பதைத் தவிர்த்து புகை பிடிப்பதைத் தவிர்த்து வாயை சுத்தமாக வைத்துக் கொள்வதாலும் பல் துலக்குவதற்கு மிருதுவான பொருள்களை உபயோகிப்பதாலும் அதிகக் காரமான உணவு வகைகளைத் தவிர்ப்பதாலும், புற்றுநோய் வராமல் நாம் தடுத்துக் கொள்ளலாம்.


ஏதாவது ஒரு காரணத்தால் வாயில் புண் ஏற்பட்டால், அதுவும் பத்து நாட்களுக்கு மேல் ஆறாமல் இருந்தால், கண்டிப்பாக அது புற்றுநோயின் அறிகுறியா என்று சோதித்து தேவையான சிகிச்சை மேற்கொள்வது அவசியம். புற்றுநோய் ஏற்படக் காரணமாக உள்ள பழக்கத்தைத் தவிர்த்தும் வாயைச் சுத்தமாக வைத்துக் கொண்டும் ஆரம்பத்தில் புற்றுநோயைக் குணப்படுத்தி விடலாம். அப்படியும் குணமாகாவிட்டால், அறுவை சிகிச்சை மூலமாக முழுமையாகக் குணப்படுத்தி விடலாம். இவைகளையெல்லாம் தாண்டி புற்றுநோய் அதிகமாகி விட்டால், கதிர்வீச்சு மூலமோ அல்லது அறுவை சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு மூலமோ அதன் வேகத்தைக் குறைக்கலாம். புற்றுநோய் தென்பட்ட பிறகு அதை முறையான சிகிச்சை மூலம் குணப்படுத்தாவிட்டால், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்வதே அரிதாகும். ஆகவே இக் கொடிய நோயின் தடுப்பு முறைகளை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

தொகுப்பு : கே. எஸ். பத்மநாபன்



முழு கத்தரிக்காய் கருக்காமல் சுடுவதற்கு இது சுலபமான வழி. காஸ் அடுப்பின் மீது தோசை சுடும் கல்லைப் போட்டு அதன்மீது முழு கத்தரிக்காயை வைக்கவும். பின்பு அதை ஒரு பாத்திரத்தினால் மூடி சிறிதுநேரம் கடவைத்து எடுத்தால் கத்தரிக்காய் கருக்காமல் உள்ளே நன்றாக வெந்து இருக்கும்!

- மஞ்சுதேவன்


புதிய உன்னதமான
SANTOOR
மேனியின் இளமைத்
தோற்றப்பொலிவின்
ரகசியம்.
ஸந்தூர்
மஞ்சளும் சந்தனமும் கலந்த சோப்
LKA-16123-TAM




நான் பிரெஸ்டீஜ் அல்டிமேட் வாங்கியதற்குக் காரணம் என்ன தெரியுமா?

என் மனைவியின் பாதுகாப்பு என்னை பொறுத்தவரை மிகவும் முக்கியமானது.


"மனைவியை நான் ரொம்பவும் போற்றிப் பாதுகாப்பதாக சிலர் என்னைக் குறை கூறுகின்றனர். ஆம், இது உண்மைதான். அதனாலேயே நான் பிரெஸ்டீஜ் அல்டிமேட் வாங்கினேன்.

பிரெஸ்டீஜ் அல்டிமேட்டின் பிரத்தியேக பாதுகாப்பு அம்சங்கள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. எப்போதும் காணும் ஸேஃப்டி வால்வுகள் தவிர, இதில் பிரெஸ்டீஜின் நூதன கண்டுபிடிப்பான காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம் [ஜி ஆர் எஸ்] உள்ளது வெயிட் வால்வில் அடைசல் இருந்தால் ஜி ஆர் எஸ் உடனே செயல்பட்டு அதிக பிரஷரை கீழ்நோக்கி பாதுகாப்பாக வெளியேற்றும்.



ஜிஆர்எஸ்


பிரெஸ்டீஜில் மட்டும் உள்ள மற்றொரு பிரத்தியேக அம்சம் - டபிள் லாக்கிங் ஸிஸ்டம். இதனால் பிரஷர் பாதுகாப்பான நிலைக்குக் குறையும் வரை குக்கரைத் திறக்க முடியாது. பாதுகாப்புக்கான புதுயுத்திகள் பிரெஸ்டீஜில் வந்து கொண்டே இருக்கின்றன. என் மனைவியின் பாதுகாப்பைப் பற்றி என்னைப் போலவே பிரெஸ்டீஜுக்கும் ஆழ்ந்த அக்கறை இருப்பதை இது நிரூபிக்கவில்லையா?"


டபிள் லாக்கிங் ஸிஸ்டம்

TTK தயாரிப்பு

பிரெஸ்டீஜ்
அல்டிமேட்

MAA COMMUNICATIONS 2073-92 TAM



வாழ்க்கை ஒரு கொலு படி

ஆண்டுக்கு ஒரு முறை தான் கொலு வருகிறது என்றாலும் ஆழ்ந்து நோக்கினால் நித்தம் நித்தம் நம் வாழ்வில் எத்தனை வகைக் கொலுப் படிகள் என்று ஆச்சரியப்படத் தோன்றுகிறது. 'நாடகமே உலகம், நாம் அனைவரும் அதில் வரும் பாத்திரங்கள்'' என்று துவங்கும் ஷேக்ஸ்பியரின் பிரபலமான நாடக வரிகளில் மனித வாழ்க்கையைப் பலப் பலப் பருவங்களாகப் பிரித்து அதை நாடகத்துடன் ஒப்பிடுகிறார். அதே போல நம் நவராத்ரி கொலுப்படிகளின் அமைப்பைப் பார்க்கும் போது அது நம் வாழ்வின் பல பருவங்களோடு ஒத்துப் போவது மிக ஆச்சரியமான விஷயம்!

வாழ்க்கையின் முதல் படி :

கொலுப் படிகளில் கடைசியாக இருக்கும்''படி'' மனித வாழ்க்கையின் முதல் படியான குழந்தைப் பருவம். ஒரு தெய்வ வழிபாடோ, வேண்டுதலோ, யாகமோ முடிவு பெறும் போது அதன் பலன் குழந்தைகளைச் சார்கிறது. மாதா பிதா செய்த புண்ணியமே மக்கள் என்பது சொல் வழக்கு. எனவே கொலுப் படிகள் தெய்வ பொம்மைகளில் துவங்கினால் கூட அவை முடியும் கடைசிப்படியே மிகவும் முக்கியம் வாய்ந்தது. நித்திய பூஜைகளும், கோலங்களும், நைவேத்தியப் படைப்புகளும் கடைசிப் படிக்குப் பக்கத்தில்தான். அவ்வளவு ஏன்? மேல் படியில் சரஸ்வதி இருந்தாலும் புத்தகங்களை அடுக்குவது கடைசிப் படிக்கு

அருகில்தானே? இதே போல் மனித வாழ்க்கையில் பெரியவர்கள் உயர்வான நிலையில் இருந்தால் கூட குழந்தையே தெய்வத்திற்கு சமமாகக் கருதப்படுகிறது. பிரணவம் ஓதிய முருகக் குழந்தை ''தகப்பன் சாமி'' ஆகவில்லையா?

இப் பருவம் கட்டுப்பாடு அற்றது. களங்கம் அற்றது. கற்கும் ஆற்றல் எல்லை இல்லாமல் கொண்டது. தவழ்வதும், அமர்வதும், நிற்பதும், நடப்பதும் குழந்தையின் விடாமுயற்சியினைக் காட்டும் படிகள். பொம்மைக் கொலுவின் கடைசிப் படியும் கட்டுப்பாடு அற்றது. சொழிகளும், கிலிஞ்சல்களும், பழுக்கா சாமான்களும், பாசி மணி பொம்மைகளும், மெழுகுப் பழங்களும் கொலுவிருக்கும் இப் படியில். வரம்பு மீறி தரையிலும் இப்படி வழிந்து போய், பார்க், பீச், கிராமம், மலைவனம், சாலை விதிகள் என்று பரவி நிற்கும். குழந்தையின் கற்பனை வளத்தையும், கட்டுப்படா விடுதலை உணர்வையும், திட்டத்திற்கும் சட்டத்திற்கும் உட்படா சுய வளர்ச்சியையும் கட்டிக்காட்டும் படியே கடைசிப் படி. சில வீடுகளில் வாழ்க்கைப் படியும், கொலுப் படியும் ஒன்றாக இணைந்தது போல கடைசிப் படியில் குழந்தையின் விளையாட்டுச் சாமான்களே நிறைந்திருப்பது இன்னும் அழகு!

2. படி, படி நான்காம் படி :

வாழ்க்கையின் இரண்டாம் படியில் நிற்பவர்கள் சிறுவர்கள், சிறுமியர்கள். இப் பருவம் முழுவதும் நிறைய படிகள். பள்ளியில் சேர்ப்பதற்காகப் பெற்றோர் படிப்படியாய் ஏறி இறங்குவது, சேர்ந்த பின் பிள்ளைகள் வாழ்வில் படிப்படியாய் முன்னேற வேண்டும் என்று சதா அவர்களை ''படி, படி'' என்று விரட்டுவது, பிள்ளைகளோ வீட்டில் படிப்பதாய் பாவனை செய்தாலும் வம்படிப்பதில், பிரம்படிபடுவதில், வாகனப் படிகளில் பிரயாணிப்பதில், அடுப்படியில் எட்டிப் பார்ப்பதில், இப்படிப் பல படிகளில் தங்கள் கவனத்தைச் சிதற விடுகிறார்கள். வீட்டுக்குள் ஒரு வட்டம், பள்ளிக்குள் ஒரு வட்டம், நண்பர்களுடன் ஒரு வட்டம் என்று தங்களை வட்டங்களுக்குள் இருத்திக் கொள்கிறார்கள்.

கொலுவில் மேலிருந்து நான்காவது படி இச் சிறுவர் சிறுமியர் பருவத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு. பலவித பொம்மைகள் இருந்தாலும் அவை ஒவ்வொன்றும் ஒரு குழுவாக இருக்கும் இப் படியில். மேலும் பலவித ரசனைகளையும் இங்கு காணலாம். கண்ணனுடன் ஆறு கோபிகைகளின் நடன செட், கிரிக்கெட் செட், திருமண செட், பாம்பாட்டி, பாம்பு செட்,



வகுப்பறை செட் என்று இப் படியில் பல விதக் கலைகளை வெளிப்படுத்தும் பொம்மைகள் சிறியவையாக இருப்பதால் நிறைய இருக்கும்.

3. கவனத்தைக் கவரும் மூன்றாம் படி :

இந்த மூன்றாம் படி விசேஷமானது. கொலுப்படியிலும் இது மூன்றாவது, வாழ்க்கைப் படியிலும் மூன்றாவது. எவ்வளவு பொருத்தம் பாருங்கள்! இப்படி வாழ்க்கையில் குழந்தைப் பருவத்திற்கும் பெரியவர்கள் பருவத்திற்கும் இடையிலான இளைஞர் பருவம். எனவே அந்தனை இளமைத் துடிப்பையும், அதற்கே உரிய வக்கரங்களையும், புரட்சிகளையும், ஆக்கபூர்வ சிந்தனைகளையும் இப் பருவத்தில் மட்டுமல்ல, இந்த மூன்றாம் படியான கொலுப்படியிலும் காணலாம். பள்ளிப் பருவத்தில் கடைசி மூன்று வருடங்களை மிகவும் சீரியஸாகப் படித்து விட்டு கல்லூரிக்குள் நுழைந்து விட்டால் இவர்கள் உலகம் தனி. கேலியும், கிண்டலும், சீண்டலும், சிணுங்கலும் இவர்கள் மொழி. காதல் வயப்படுவதும், அது கைகூடாவிட்டால் ஒரு கவிதையில் அழுது விட்டு அடுத்த காதலுக்குத் தயாராவதும் இவர்கள் பொழுதுபோக்கு. விதவிதமான பட்டப் பெயர்கள் சூட்டுவார்கள். சக மாணவ மாணவிகளுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் கூட! புத்தராக வரும் மாணவர் கூட மோகினி வலையில் விழுவது இக் கல்லூரிப் பருவத்தில்தான்.

அதைக் காட்டத்தான் இப் படியில் கொலு வைக்கும் போது இடப்பற்றாக் குறையோ, அல்லது உயர வித்தியாசமோ தெரியாது. பொம்மைகள் நிற்க வைக்கப்பட்டிருப்பது மிகவும் விநோதமாக இருக்கும். விவேகானந்தருக்குப் பக்கத்தில் மோகினி பொம்மை, காந்திக்கு அருகில் பிள்ளையார் பொம்மை, ஒரு பக்கம் சீதை இருக்க மறு பக்கம் சூர்ப்பனகையோடு நிற்கும் தர்மசங்கட ராமர் (குறவன் பொம்மை உடைந்து விட்டதாம்) முருகருக்குப் பக்கத்தில் வாட்ச்மேன் பொம்மை (இரண்டு பொம்மையும் ஒரே உயரம் என்பதால்). இன்னும் இளைஞர்கள் பெயர் வைக்க உதவியாக ஒட்டைச்சிவிங்கி, குதிரை, சண்டைக் கோழி, காளை மாடு, ராஜபாளையும் நாய் இப்படிப் பல விலங்குகள். இவை படியில் ஓரத்தில் இருந்தாலும், இவற்றின் பல குணங்கள் மனிதர்களிடையே நடுநாயகமாக இருப்பதை இவை உணர்த்துகின்றன.

4. பொறுப்பைச் சுமக்கும் படி :

இளமையை அடுத்து திருமணம் என்ற பந்தத்தில் மனிதன் விழுந்து விட்டால் அவன் பொறுப்புமிக்க இல்லத் தலைவன் ஆகிறான். கைபிடித்த மனைவி இல்லத் தலைவி ஆகிறாள். தங்களை கவனிக்க நேரம் இருக்கிறதோ இல்லையோ, வளரும் தங்கள் குழந்தைகளை, இவர்கள் கல்வியை, இவர்கள் எதிர்காலத்தை, இவர்கள் இல் வாழ்க்கையை கவனிக்க என்று படிப்படியாக பெற்றோர்களின் பொறுப்பு விரிந்து விடுகிறது. அது மட்டுமல்ல, இவர்களின் வயதான பெற்றோர்களையும் கவனிக்க வேண்டியுள்ளது. சில வீடுகளில் பெரியவர்கள் அனுசரணையாக, சில வீடுகளில் அவர்களே ஒரு பிரச்னையாக - இப்படிப் பல பிரச்னைகளில் மாட்டிக் கொள்ளும் பெற்றோர் பருவம் வாழ்வின் நான்காம் பருவம் எனலாம்.

கொலுப் படியிலும் குடும்ப சமேதராக இருக்கும் பொம்மைகளை இரண்டாம் படியில் பார்க்கலாம். ராமர், சீதை மட்டுமல்லாமல் சகோதரர்களையும், நட்பையும் காக்க வேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் பரத, லக்ஷ்மண, சத்ருக்ன, ஆஞ்சநேயர் சமேதராக ராமர் காட்சி தருவார். மனித வாழ்க்கையில் பலருக்கும் பலவித சோதனைகள் வரும் என்பதைக் காட்ட தசாவதாரக் காட்சி வரும். ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு கதை என்பதற்கு இதைவிடச் சிறந்த காட்சி எங்கு உள்ளது? ஆண்களுக்கு ஆறுபடை வீடு என்றால் பெண்களுக்கு அஷ்டலக்ஷ்மி என்று பொம்மைகள் வரிசையாக உண்டு. இப் பருவத்தில் ஆண்கள் இரு குடும்பம் நடத்தும் ஒரு சங்கடம் நேர்வதையும் ருக்மிணி சத்யபாமா சமேதரான கிருஷ்ணரும், வள்ளி தெய்வானை உடன் முருகரும் காட்சி தந்து சிரிக்கின்றனர்.

பணம், வசதி இருந்தும் தனித்து நிற்கும் பெண்களைப் போல் லக்ஷ்மியும், சரஸ்வதியும் இருக்க, சந்நியாசியாக வாழ்ந்த ராகவேந்திரர், விவேகானந்தர் பிரமச்சாரியாக வாழும் ஆண்களை உணர்த்தி காட்சி தருகின்றனர். காமதேனு பொம்மை கூட குடும்பத்திற்காக வேலைக்குப் போய் பணம் சம்பாதிக்கும் பெண்ணையும், கற்பக விருட்சம் கூட புகுந்த வீட்டிற்காக பிறந்த வீட்டுச் செல்வத்தை வாரிக் கொட்டும் மருமகளையும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டத் தானோ?

5. முதலும் மூலமுமான படி :

கொலுப்படியின் ஆரம்பப் படி முதல் படி. இதில் நடுவில் வைக்கப்படும் பொம்மை மூலாதாரமான கணபதி. வாழ்க்கைப் படியில் முழுவதும் நிறைந்த படி, கடைசிப் படி, முதுமை. ஆனால் முதியவர் அல்லவோ வீட்டின் மூத்த முதல்வர்? அவர் வழி வந்தவர்கள் அல்லவோ படிப்படியாக மகன், பேரன், கொள்ளுப் பேரன் என்று வளர்ந்து வருபவர்கள்? எனவே வாழ்க்கைப் படியில் இவர்கள் கடைசிப் படியில் நின்றால் கூட மரியாதை, கவுரவம் முதலில் இவர்களுக்குத்தான். வீட்டிலுள்ள அனைவரும் மதிக்கும் தாத்தாவைப் பிள்ளையாருக்கு ஒப்பிட்டால், காசு, பணம், நகை, வரவு, செலவு என்று அனைத்தையும் அதிகாரத்துடன் கட்டியாளும் பாட்டியை கஜலக்ஷ்மி என்றோ ஆதி பராசக்தி என்றோ அழைக்கலாம்.

கொலுப்படியின் தெய்வத்தன்மை அதன் முதல் படியில் வைக்கப்படும் கலசத்தால் வருகிறது. வாழ்க்கைக் கொலுவிலும் குடும்பச் சொத்து என்கிற ஜடப்பொருளே அக் குடும்பத்தை ஆட்டிவைக்கும் சூத்ரதாரி. கலசம் வெள்ளியாகவும் இருக்கலாம்; பித்தளையாகவும் இருக்கலாம். தெய்வ பொம்மைகள் கைக்கு எட்டாத உயரத்தில் இருப்பது போல் வீட்டுப் பெரியவர்களும் இளையவர்களுக்கு எட்டாமல் இருக்கிறார்கள். கடைசிப் படி பேத்தி முதல் படி பாட்டியிடம் போக முடிவதில்லை. போனாலும் பாட்டி முகம் சுளிக்கிறாள். இரண்டாம் படி பேரன் கணக்கு சொல்லிக் கொள்ள கஷ்டப்பட்டு ஐந்தாம் படி ஏறி வந்தால் தாத்தா ''உச்'' என்கிறார். டீ.வி. நியூஸ் கேட்க முடியவில்லையாம். மூன்றாம் படி கல்லூரி மாணவி பாட்டியை கர்னாடகம் என்று ஒதுக்க, நான்காம் படி மருமகள் மாமியாரை ''சரியான பிடுங்கல்'' என்கிறாள்.


ஆக பல வீடுகளில் மரியாதை என்ற போர்வையில் முதியவர்களை உயரத்தில், தவறு, தவறு தூரத்தில் வைத்து விடுகிறோம். சில வீடுகளில் அவர்களே எட்டிப் போய் நின்று விடுகிறார்கள். உடைந்து போன ஸ்வாமி பொம்மைகளை கூடையில் போட்டு கொலுப்படிகளுக்கு அடியில் மறைத்து வைப்பது போல ஆதரவற்ற முதியவர்களையும் பயன்படாத பெரியவர்களையும் முதியோர் இல்லங்களில் முடக்குவதும் எவ்வளவு நிஜம்?

கொலு 10 நாட்கள் ஜாம் ஜாம் என்று நடந்து முடிந்து விடும். ஆனால் அதன் தாக்கம் நம் வாழ்வில் தினம் தினம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

– லக்ஷ்மி சங்கர்

உலர்ந்த ஆரஞ்சுத் தோலின் புகை கொசுக்களை விரட்டும். போகிற போக்கில் பழத்தைவிட ஆரஞ்சுத் தோலுக்கு டிமாண்ட் அதிகமாகலாம், அதிலிருந்து கொசுவத்திச் சுருள் தயாரிக்க ஆரம்பித்தால்!

– மாலினி ரவி



பகடையாட்டமா? பாதுகாப்பா?

உங்கள் சேமிப்பை எங்கே டெபாசிட் செய்யப் போகிறீர்கள்?

பங்கு மார்க்கெட்டில் பயன்படுத்தும் ஒரு நிதி நிறுவனத்திலா?

அல்லது

லாரிகளுக்கு நிதியுதவி செய்து வெற்றிகரமாக இயங்கும் ஒரு நிதி நிறுவனத்திலா?

சில நிதி நிறுவனங்கள் உங்கள் டெபாசிட் தொகையைப் பங்கு மார்க்கெட்டில் பயன்படுத்துகின்றன. ஆனால் இதில் அவை வெற்றி பெறுகின்றனவா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. காரணம் பங்கு மார்க்கெட் நிலையாக இருப்பதில்லை.

ஸ்ரீராம் நிறுவனங்கள் அப்படியல்ல. அவை நிலையான தொழிலான லாரிகளுக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கின்றன.

- லாரி போக்குவரத்துத் தொழில் ரொக்க அடிப்படையில் நடைபெறுகிறது.
- அதில் கிடைக்கும் வருமானம் லாரியின் பராமரிப்புக்கும், அதன் உரிமையாளரின் தேவைக்கும் போதுமானதாக இருக்கிறது.
- அதனால் லாரி உரிமையாளர் வாங்கிய கடனைக் குறிப்பிட்ட தவணைகளில் திருப்பிச் செலுத்தி விடுகிறார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் பெற்றுள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள் கொடுத்த கடனைத் திருப்ப வசூலிப்பதில் 100% வெற்றியைப் பெற்று வருகின்றன.

இந்நிறுவனங்கள் தொடர்ந்து 25% டிவிடெண்ட் அளித்து வருகின்றன.


ஸ்ரீராம் நிறுவனங்களின் டெபாசிட்தாரர்களின் எண்ணிக்கை 1,50,000. அவர்கள் எவரிடமும் கேட்டுப் பாருங்கள். அவர்களுடைய தேர்வு ஸ்ரீராம் நிறுவனங்களாகத்தான் இருக்கும்.

உங்கள் தேர்வு?

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம்-சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், மூன்றாவது மாடி,
4, லேடி தேசிகாச்சாரி ரோடு, மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
போன்: 74960/77463/73768/76804/73456.



ADWAVES/SGC/4585 A

✱ மீரா ✱ சியாமளா சிவராமன்



பட்டுப்புடவை....

இந்த வார்த்தையைச் சொன்னாலே பெண்களுக்குக் கொஞ்சம் கிளுகிளுப்பாகத் தான் இருக்கும். வாங்குகிறோமோ இல்லையோ பளீரென்ற வண்ண காம்பினேஷன்களோடு வழுவழுவென மென்மையாக நம் முன்னே விரிந்து படும் போது கனவில் மிதப்பது போல இருக்கும். அதற்குக் காரணம் அழகுணர்ச்சியாகக் கூட இருக்கலாம்.

திரிபுவனம் பட்டுப் புடவையின் மேல் ரொம்ப நாளாக யோசனை. அதைப் பற்றி நிறையபேர் சொல்கிறார்களே, அந்தப் பட்டில் மட்டும் என்ன சிறப்பு என உறுத்திக் கொண்டுதான் இருந்தது. நவராத்திரி அதுவுமாக பட்டுப் புடவையைப் பார்க்கா விட்டால் எப்படி? கும்பகோணத்துக்குப் படையெடுத்தோம்.

கும்பகோணத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது திரிபுவனம் கிராமம். உள்ளே நுழையும் போது எந்த வித்தியாசமும் இல்லாமல் எல்லா இந்தியக் கிராமங்களின் வாசனையோடுதான் இருந்தது. அதே மண்வீடுகள், தாழ்வாக மேலே வேயப்பட்ட கூரை, எளிய மக்கள், அரை டிராயரோடு சிறுவர்கள்....

கடைத்தெருப் பக்கம் திரும்பியவுடன்... அடேங்கப்பா இது கிராமமா என ஆச்சர்யம்... வரிசையாக பட்டுப்புடைவைக் கடைகள். வண்ணம் இறைக்கும் பட்டுப் புடைவைகள். வித்தியாசமான அனுபவம்.

திரிபுவனம் பட்டுக் கூட்டுறவு சங்கம் அரசாங்கத்தின் கீழ் பதிவு செய்யப் பெற்றது. 1955 - ல் ஆரம்பிக்கப்பட்டாலும் 75 - லிருந்து தான் வளர்ச்சியே. தனியார்களிடம் இருந்து கொண்டு நெசவு செய்து வறுமையில் வாடிக் கொண்டிருந்த நெசவாளர்களையெல்லாம் ஒன்று சேர்த்தார் அப்போது மேலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நடராஜன். இன்று நூற்றுக்கும் மேற்பட்ட நெசவாளர்களின் வாழ்வில் ஒளி வீசுகிறது. திரிபுவனம் புடைவையைப் போல செழிப்பை அவர்கள் வாழ்விலும் பார்க்க முடிகிறது.

''நாங்க ரொம்ப நாளா ஒரே தறியில்தான் புடைவை செஞ்சு கொடுத்துக் கஷ்டப்பட்

புடவைக்குப்





டுக்கிட்டிருந்தோம். மொதலாளி கூலியும் சரியா கொடுக்க மாட்டாரு. ரொம்பக் கஷ்டப்பட்டுகிட்டு இருந்தோம். இப்போ கவர்ன்மெண்ட்ல இன்னொரு தறியும் வாங்கிக் கொடுத்திருக்காங்க. ரெண்டு தறியில் போட ஆரம்பிச்சுட்டோம். குடும்பம் மொத்தமும் உழைக்கிறோம்.

சந்தோஷமா இருக்கிறோம்'' என்கிறார் சரோஜா.

இங்கே 45% மேல் பெண்கள்தான் சொஸைட்டி மெம்பர்களாக இருக்கிறார்கள்.

''ஒரு புடைவை நெய்ய பதினஞ்சு நாள் ஆகும்'' என்ற சகுந்தலாவிடம் ''எப்போ சமையல் எல்லாம் செய்வீங்க'' என்று கேட்டால் சிரிக்கிறார்.

''காலையில் ஆறு மணிக்கு தறியில் உக்காருவோம். எட்டு மணி வரை செய்துட்டு எழுந்து டிபன் செய்து சாப்பிடுவோம். திரும்பி சாப்பாடு செய்யத்தான் எழுந்திருப்போம். ராத்திரி ஒன்பது வரைக்கும் நெய்வோம்'' என்கிறார்.

கூடவே மகன். ''என்னப்பா படிக்கிறே?''

''போன வருஷம் அஞ்சாவது வரைக்கும் படிச்சேங்க. அம்மாவுக்கு ஊடு பாவு போட இந்த வருஷம் நின்னுட்டேன்'' என்கிறான். பெருமூச்சுடன் விடை பெற்றோம். கடையில் 'ஜேஜே' என்று முகமதிய பெண்மணிகளின் கூட்டம். இப்போது ஏதேனும் பண்டிகை வருகிறதோ என நினைத்தோம்.

கூட்டுறவுத் தனி அலுவலர் மற்றும் இயக்குநரான வி.சி. கணேசன்,


''இல்லீங்க... இன்னிக்குச் சனிக்கிழமை இல்லையா. சுற்று வட்டாரத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் எல்லாம் வந்து வாங்குவாங்க. வெள்ளிக்கிழமைகள்ள நிறைய இந்துக்கள் வருவாங்க. அன்னிக்கு மஞ்சள், லெமன்யெல்லோ, அரக்கு பார்டர் பட்டுப்புடைவைகள் நிறைய விற்கும்'' என்று சிரித்தார்.

திரிபுவனம் பட்டுப்புடைவைக்கு என்ன தனிச் சிறப்பு? மேலாளர் நடராஜன் முழுக்க முழுக்க இந்த நிறுவனத்தின் ஆரம்ப நாளிலிருந்து இருப்பவர். அவர் விளக்கினார் -

''இரண்டு மூன்று விஷயங்களில் திரிபுவனம் புடைவைகள் மற்ற புடைவைகளிடம் இருந்து வித்தியாசப்படுகிறது. அதே பட்டு நூல்தான், அதே ஜரிகைதான் ஆனால் நெய்யும் விதம் வேறாகிறது. பட்டுப் புடைவைகளில் இரண்டு + ஒன்று என மூன்று முறுக்கேற்றி இழைகளைத் தயார் செய்கிறோம். அதேபோல வார்ப்பும், ஊடுபாவும் ஒரே மாதிரி

பாந்தமாய்ப் பொருந்தி...

❖ சரோஜா குடும்பத்தினருடன்



❖ கணேசன்



இழைகள்தான். சாதாரணமாக ஊடு பாவிற்கு இழைமுறுக்கு குறைந்திருக்கும். ஆனால் நாங்கள் இரண்டிற்கும் ஒரே மாதிரி நூலை உபயோகிப்பதால் புடைவை மேற்பரப்பை பார்த்தீர்களானால் ஒரே 'சவளா'க பளபளப்புடன் இருக்கும். இந்தத் தன்மையினால் ஃபினிஷிங் அற்புதமாக இருப்பதோடு, ஃபைன் குவாலிட்டி கிடைக்கிறது. அதிக நாளும் நீண்டு உழைக்கும்'' என்று ஒரு புராணமே பாடி விட்டார். இதையே அங்கு புடைவை வாங்க வந்திருந்த மீனா வல்லவராயன், 'குடும்ப ஆரோக்கியத்த விளையாட்டா எடுத்துக்கலாமா?' பாணியில் கேட்டார் -

''பட்டுப் புடைவையின் உடல் என்ன வெயிட்ல இருக்கோ அந்த காத்திரம்தான் ஜரி வரணும்? அத பாக்க வேண்டாமோ? ஜரிகை வெயிட்டாகவும், உடல் மெலிசாகவும் இருக்கிறதாலதான் கொஞ்ச நாளானா ரெண்டும் பிரிபிரியா வந்துடறது. அந்தப் பிரச்னை திரிபுவனம் புடைவையில் இல்லை.''

''அப்படீன்னா ஜரிகைக்கும் தனி கவனம் செலுத்தறீங்களோ?'' என நடராஜ னிடம் கேட்டபோது அவருக்கு ரோஷம் வந்துவிட்டது. ''கொண்டு வாங்கப்பா அந்தச் சேலைகளை'' என உத்தரவிட தலைமை விற்பனையாளர் துளசிராமன் 'ஜகஜகா' வென ஜொலிக்கும் டிஷ்யூ புடைவைகளையும், பெரிய பெரிய பார்டர்கள் கொண்ட புடைவைகளையும் கொண்டு வந்து குவித்து விட்டார்.

''இதையெல்லாம் பாருங்க பாருங்க'' என நம் கையில் திணித்தார் நடராஜன். ஜரிகை நிறைய இருந்தாலும் எல்லாம் புடைவையோடு ஒட்டிப் பாந்தமாக....

''அதேதான் நானும் சொல்ல வந்தேன். பட்டை பட்டையாக ஜரிகை இருந்தாலும், எங்கள் புடைவையில் அது பாந்தமாக இழைந்திருக்கும். காரணம் நாங்க ஐந்து இழைக்கு ஒரு இடத்தில் 'காலி விட்டு கட்றது' என்று சொல்வோம், அந்த வகையில் பின்னி எடுக்கிறோம். ஆனால் மத்த புடைவைகள்ள மயிலோ, யானையோ அப்படியே ஜரிகைய இந்தப் புள்ளிக்கும், அந்தப் புள்ளிக்கும் இணைத்து மொத்தமா எடுத்துடுவாங்க. அது கொஞ்ச நாள்ள தூக்கிக்கும். இந்த இழைபின்னி எடுக்கறதால இந்தப் புடைவைகள்ள அந்தப் பிரச்னையில்ல. அதனாலதான் எவ்வளவு 'ரிச்' ஜரிகை இருந்தாலும் அது இழைந்து ஓடும்.

அதே போல இன்னொரு தனிச்சிறப்பு இருக்கு திரிபுவனம் புடைவைகள்ல. காஞ்சிபுரம் புடைவைகள்ள தலைப்பை 'பெட்னி' முறையில சேர்ப்பாங்க. சாதாரணமாக தலைப்பு தனியா, உடல் தனியா நெய்து ரெண்டுத்தையும் இணைப்பாங்க. நாங்க அப்படியில்ல. கலர் குடுக்கும் போதே பாடிக்குத் தனியா, பார்டருக்குத் தனியா கலர் குடுத்துட்டு அப்புறம், நெய்ய ஆரம்பிக்கிறோம். அதனால் ஒன்னு போல நிற்கும். இழை பிரியறதுக்கு சான்ஸே இல்லை'' என்கிறார்.

கும்பகோணத்தில் பிரபலமாக உள்ள சியாமளா சிவராஜும் இவர் சொன்னதை ஆமோதிக்கிறார்.

''நானே இவங்களுக்கு ஒரு நடமாடும் பிரசாரகி. நான் திரிபுவனம் புடைவைகள் தான் கட்றேன். எத்தனை வருஷமானாலும் கலரும் மாறாது. என் பெண் கல்யாணத்துக்கு இப்போ வாங்கத்தான் வந்திருக்கேன். இவங்ககிட்டே சில குறைகளும் இருக்கு. இப்போ வர்ற புடைவைகளிலெல்லாம் நிறைய டிசைன்ஸ், ப்ளவுஸோடு புடைவை என பட்டுப்புடைவைகள்ள நிறைய மாற்றங்களைப் புகுத்தி இருக்காங்க. ஆனா இவங்க அப்படியே பழமையான வழக்கங்கள்ளதான் இருக்காங்க'' என்கிறார்.

இதை வி.சி. கணேசனும் ஒத்துக் கொள்கிறார். காரணம் திரிபுவனம் புடைவைகள் கும்பகோணம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், மதுரை, நாட்டுக்கோட்டைச் செட்டியார் பகுதிகளில்தான் பிரசித்தம்.

''காரணம் இதனுடைய 'ரிச்'னெஸ். 'வனசிங்காரம்'னு ஒரு டிசைன் இருக்கு.



● நடராஜன்



அது முழுக்க முழுக்க ஜரிகையாலேயே காட்டு விலங்குகளை நெய்யற புடைவை. இதைச் செட்டியார்கள் கல்யாணப் புடைவையாக வாங்குவார்கள். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வியாபாரம் செய்து கொண்டிருந்ததால் நாங்க அப்படியே இருந்துட்டோம். இப்போ சென்னை மற்றும் வடக்கே மார்க்கெட் பிடிக்கணும்னு நினைச்சிருக்கோம். அதனால் அவங்களுக்கு ஏற்ற மாதிரி விலை குறைவான புடைவைகளைத் தயாரிக்க ஆரம்பிச்சிருக்கோம்'' என்கிறார்.

பட்டுப் புடைவைகளை ஆயிரக்கணக்கில் பணம் கொட்டி வாங்குகிறோம். ஆனால் சில சாயம் ஒன்றுக் கொன்று ஏறி பல்லிளிக்கும்போது வயிற்றெரிச்சலாக இருக்கிறதே... துளசிராமன் இதைப் பற்றிக் குறிப்பிடும் போது -

''நாம புடைவை வாங்கும் போதே சில கலர்களைத் தவிர்க்கலாம், கடுக்காய் பச்சை, ராணி பிங்க், ரோஸ் இதெல்லாம் சாயம் போகும். ஆனால் இவை பளீரென்று இருக்குமே என விரும்பி வாங்குபவர்கள் தண்ணீர் படாமல், வியர்வை படாமல் வைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி இடங்களுக்குத் திட்டமிட்டு கட்டிக் கொண்டு போனால் பிரச்னை இருக்காது'' என்கிறார்.

''அதே போல பட்டுப்புடைவை பாதுகாப்பதற்கு ஸ்பெஷலாக ஏதாவது சொல்லுங்களேன்'' என்றோம்.

''புடைவையை எப்போதும் இழுத்துக் கட்டி வைக்க வேண்டும். நிறைய பேர் விசேஷங்களுக்குக் கட்டிக் கொண்டு போய் விட்டு அவிழ்த்துப் போட்டு விடுவார்கள். பிறகு மடித்து வைத்து விடுவார்கள். அப்படி இல்லாமல் கொஞ்சம் விசேஷ அக்கறை எடுத்துக் கொண்டால் பட்டுப் புடைவைகளை புதுப் பொலிவோடே வைக்கலாம். வெளியில் சென்று வந்தவுடன் புடைவையை அவிழ்த்து ஓரலாக மடித்து காற்றாட போட்டு விட வேண்டும். பிறகு அதை மடித்து, புதுப் புடைவைக்கு குறுக்கே நூல் கட்டியிருப்பார்களே அதே போல கட்டி வைத்தோமானால் எத்தனை நாளானாலும் 'விண்'ணென்று இருக்கும். இதற்கெல்லாம் ஓரிரு நிமிடங்கள்தான் செலவாகும். ஆனால் பலன் ஆண்டுக்கணக்கில் இருக்கும்'' என்கிறார்.

''நிறைய பேர் இங்கேயிருந்து காஞ்சிபுரம் போய் தறி நெய்கிறவர்கள் இருக்கிறார்கள் போலிருக்கிறதே?''

''ஆமாம் இதனால் எல்லாம் இழப்பு ஏற்படுவதில்லை. எங்களை நம்பி நூற்றுக் கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு எப்போதும் வேலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. எங்களுடையது அரசாங்க அமைப்பு. அதனால வாணிகப் போட்டி, விலை குறைத்து அதனால் தரம் குறைத்தல் என்பதெல்லாம் வருவதற்கும் சாத்தியமே இல்லை. திடீர்னு விலையேற்றினால் பதில் சொல்லியாக வேண்டும். அதனால எங்களுடைய புடைவையின் தரத்தை நாங்க எப்போதும் பாதுகாத்து வருகிறோம். விலையும் நிர்ணயிக்கப்பட்ட விலைதான்'' என்கிறார் நடராஜன்.

நடராஜனின் வாழ்க்கை பட்டுப் புடைவைகளோடே இழைந்து விட்டது. எங்கே எந்த ஊருக்குப் போனாலும் பட்டுப் புடைவைகளின் மேல்தான் இவருக்குக் கண். யார் எந்த வண்ணச் சேர்க்கை செய்திருக்கிறார்கள் என்று பார்ப்பாராம். விக்டோரியா மஹாராணி, இந்திரா காந்தி போன்றவர்களுக்குப் புடைவைகள் அளித்ததையும், ராஜீவ் காந்திக்கு இங்கு நெய்து போர்த்திய சால்வையை அவர் கூடி நின்ற கூட்டத்தில் பிரித்துக் காண்பித்து அதில் நெய்யப்பட்டிருந்த காமராஜர், இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி படங்களை பாராட்டிப் பேசியதையும் பெருமையோடு குறிப்பிடுகிறார்.


பட்டுப் புடைவை வாங்குபவர்களுக்கு எத்தனையோ அதைப் பற்றிய மலரும் நினைவுகள் போல, அதை செய்யும் இடத்திலிருந்து, தயாரித்து விற்கும் இடம் வரை தான் எத்தனை சுவாரஸ்யமான விஷயங்கள். வண்ணமிகு பளபளப்பான கதைகளை அவை பேசுகின்றன!

- மஞ்சுளா ரமேஷ்

அஸ்வினி மஸில் ஆயில்

மூட்டு வலி, சுளுக்கு மற்றும் இதர வலிகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது.





உபயோகிப்பவர்களின் அபிப்பிராயம் :

"இப்போது எனக்கு 62 வயது. கடந்த 10 ஆண்டுகளாக மூட்டுவலியால் அவதிப்பட்டுவந்தேன். பல மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் பயன் அளிக்கவில்லை; வலியும் தணியவில்லை. மார்க்கெட்டில் "அஸ்வினி மஸில் ஆயில்" வந்திருப்பதைக் கண்டதும், அதை வாங்கி தவறாமல் உபயோகித்து வருகிறேன். இப்போது மூட்டுவலி பெருமளவில் குறைந்துள்ளது. இன்னும் சில நாட்கள் தொடர்ந்து உபயோகித்தால், வலி நீங்கி பூரண குணம் ஏற்படும் என்று நம்புகிறேன். அஸ்வினி மஸில் ஆயில் தயாரிப்பாளர்களுக்கு என் மனமார்ந்த நன்றி".


கோகா ஜெகன்மோகன் ராவ், அட்வகேட் & நோட்டரி,
மாருதி மந்திர் காம்ப்ளெக்ஸ், இலக்கத்தர், ஐதராபாத்.

பாக்கிங் மற்றும் தபால் செலவுகள் உட்பட
ரூ.30/- க்கு D/D மூலம் நேரடியாக அனுப்பி வைத்தால்
மூன்று 25 ml. மஸில் ஆயில் பாட்டில்கள்
அனுப்பி வைக்கப்படும்.

தயாரிப்பாளர்கள்:
அஸ்வினி ஹோமியோ பார்மஸி
பூனாபேட், ஹைதராபாத் 500 018

அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில் தயாரிப்பாளர்களின் மற்றுமோர் தயாரிப்பு

**இல்லந்தோறும்
இருக்கவேண்டிய வலி நிவாரணி**



இருக்கும் சங்கடங்களை விட இல்லாத கவலை ஜாஸ்தி...

நண்பர் வீட்டினுள் நுழையும் பொழுதே மாமியின் குரல் சத்தமாகக் கேட்டது.

''இந்த வீட்ல ஒன்னுஞ் சரியில்லை... அதது... அதது வேகத்துல போயிண்டு இருக்கு... நான் ஒருத்தி 'புத்து' மாதிரி உட்கார்ந்துண்டு இருக்க வேண்டியது தான்...''

மிகவும் பழக்கமான நண்பர் வீடு என்பதால் உள்ளே போய்ச் சோபாவில் அமர்ந்தேன். என் டாக்டர் நண்பர், சேகர் வீடு அது.

''எங்க அவர் உள்ள இருக்காரா?''

''அவர் ஏன் வீடு தங்குறார்? நல்லா எங்கப்பா ஒரு டாக்டருக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வெச்சார். ராத்திரியில்ல பகலில்ல... வீடு தங்குறதில்ல... அவங்களுக்கு அவசரம்... இவங்களுக்கு இழுத்துடுச்சுன்னு வந்து கூட்டிண்டு போயிடுறா... இவரும் ஓடிடுறார்...''

மாமியின் முகத்தில் உண்மையான வருத்தம். பாவம். எதிர் சோபாவில் அமர்ந்தார்.

''உங்க பொண்ணுஇருப்பாளே!'' நான்.

''அவ அப்பாவைவிட ஒருபடி மேல... காலையிலிருந்து 'டைம் டேபிள்' போட்டுண்டு வெளியில போயிடுறா... காலையில இந்தி டூஷன். அப்புறம் ஸ்கூல்.... அஞ்சரை மணிக்கு கராத்தே... அப்புறம் டான்ஸ் கிளாஸ்.... சாப்பிடுற நேரத்துக்குத்தான் வீட்ல பாக்கலாம்.''

அவர்கள் கொடுத்த வாசனையான காப்பியை சாப்பிட்டுக் கொண்டே கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.


ஏகப்பட்ட வருத்தங்கள். தான் தனியாகவே வீட்டிலிருக்க வேண்டியிருக்கிறது; பொழுதே போக மாட்டேனென்கிறது; ஒருவருக்கும் அவர்களைப் பற்றி அக்கறையில்லை... வாழ்க்கையையே வெறுத்து விட்டிருந்தார்கள்.

சமாதானமாய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியில் இறங்கி நடந்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. இவ்வளவு சிறந்த டாக்டர் சேகர்

அன்புள்ள பாலிஸிதாரரே


உங்களுக்கு சிறந்த முறையில் சேவை நல்க எல்ஐசி-க்கு உதவிடுவீர்!

1




பத்திரங்களைப் பராமரித்துப் பேணுதல்: [illegible]

2




பிரீமியம் தொகை செலுத்துதல்: [illegible]

3




காலம் கடந்த பாலிசிகளை புதுப்பித்தல்: [illegible]

4




நியமனம்/அசைன்மென்ட் (உரிமை மாற்றம்): [illegible]

5



பாலிசியை இடம்விட்டு இடம் மாற்றிக்கொள்ளுதல்: [illegible]

6



முகவரி மாற்றம்: [illegible]

7



உரிமை கோருதல் (க்ளைம்ஸ்): [illegible]

8




உங்கள் வயதிற்கான நிரூபணம்: [illegible]

9



உங்கள் பாதுகாப்பு தேவைகளை மறு பரிசீலனை செய்வதும்: [illegible]

10



உங்களுடைய பாலிசி குறித்து ஏதாவது விளக்கமோ/உதவியோ தேவையெனில்: [illegible]

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

காப்பீடு செய்து பாதுகாப்பு பெறுவீர். ஆயுள் காப்புக்கு இணையில்லை என்பீர்.

NPS-6/93 TAM

மனைவி இவ்வளவு வருத்தமாய் இருக்க முடியுமா?

அவர்கள் உண்மையான வருத்தத்தில் இருந்ததை என்னால் உணர முடிந்தது. ஏன் இப்படி வருத்தம்? மேலும் யோசித்தேன். டாக்டர் சேகரின் மனைவிக்கு என்ன கவலை?...

நகரிலே நல்ல ஏரியா. சொந்தமான வீடு. நல்ல கார். படித்த, நன்கு சம்பாதிக்கும், அழகான கணவன். எனக்குத் தெரிந்து மனைவி மீது உயிரையே வைத்திருப்பவர். கெட்ட பழக்கங்கள் ஏதுமில்லாதவர். ஒரே பெண். படுகெட்டிக்காரி. ஊனம், ஈனம் ஏதுமில்லை. படிப்பு மட்டுமின்றி எல்லாவற்றிலும் நன்கு பரிமளிப்பவள். குடும்பத் தகராறு, அது இது என்று எந்தப் பிரச்னையும் இல்லை. இருந்தும்.... கவலைப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஒரு காரணமிருக்கிறது...., 'யாரும் வீடு தங்குவதில்லை. தன்னோடு இருக்கவில்லை'. இந்த நினைப்பு அவர்களை மிகவும் அரித்துக் கொண்டிருக்கிறது.

அவர்களைச் சந்தித்து ஒரு வாரமிருக்கும். 'டெலிபோன் பில்' கட்டக் கிளம்பி பஸ் ஸ்டாண்டில் நிற்கையில் கணேசனைப் பார்த்தேன். இவரும் நண்பர்தான். ஒரு தனியார் நிறுவனத்தில் கிளார்க்காய் இருக்கிறார்.

''ஹலோ கணேசன், எங்க இப்படி பஸ் ஸ்டாண்டுல....!''

''பாங்க் வரைக்கும் போகணும். பணம் கட்டணும் அதான்.''

''நான்தான்... பஸ்ல போறேன். உங்களுக்கு என்ன? உங்க ஸ்கூட்டர் இருக்கோல்லியோ!''

''தோ... தோ... நான் இன்னும் ஸ்கூட்டர் வாங்கல்ல.''

''ஏன் உங்க கம்பெனில லோன் குடுப்பாங்களே!''

''இல்ல.... எங்க கம்பெனில கிடையாது....''

''சே! என்ன கம்பெனி சார் உங்களது. வேலை மட்டும் வாங்குறாங்க...''

''அப்படிச் சொல்லாதீங்க. வண்டி இல்லன்னா என்ன...? நடந்துட்டுப் போறோம். உம்புக்கும் 'எக்ஸர்சைஸ்' மாதிரி ஆக்கப் பாருங்க...'' சிரிக்கிறார். நான் விடவில்லை. தொடர்ந்து கேட்டேன்,

''சம்பளமும் கம்மியாத்தான் இருக்கும். கஷ்டம்தான். ஆமா... உங்க மனைவி படிச்சவங்கதானே! வேலைக்குப் போறாங்களா?''

''இல்லை... அவங்களுக்கு அது பிடிக்கல்ல...''

''என்ன சார் இது? இந்தக் காலத்துல ரெண்டு பேர் சம்பாறித்தாலே பத்தாது... உங்க மனைவி என்ன டான்னா?''

பஸ் வந்தது இருவரும் ஏறிக் கொண்டோம். பேச்சைத் தொடர்ந்தோம்.

''அவுங்க வேலைக்குப் போகலைன்னா என்ன?... அதுவும் நல்லதுக்குத்தான். குடும்பத்தை கவனிக்கக்குறாங்களே! அதுவும் தேவையானதுதானே?'' சிரித்தார்.


பாங்குக்குள் அவசரமாய் நுழைந்தோம். பின்னே! மணி ஒன்றாகப் போகிறதே! கவுண்டர் மூடிவிட மாட்டார்களோ! நான் அங்கிருந்த ஒரு சேரில் அமர்ந்து கொண்டேன். நண்பர் கணேசன் 'கியூ'வில் நின்றார்.

அவர் முறை வந்து கவுண்டருக்குள் கையை விடும் பொழுது மணி ஒன்றாகி விட்டது என்று கவுண்டரை மூடப் போனார்கள்.

கடிகாரத்தில் மணியைப் பார்த்துவிட்டு ஏதும் சொல்லாது திரும்ப எத்தனித்தார். என்ன நினைத்தாரோ அந்த 'கவுண்ட்டர் பெண்'! கணேசனை அழைத்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

கணேசன் சொல்வது தூரத்திலிருந்து என் காதில் விழுந்தது.





"கரெக்ட்தாங்க... இன்னைக்கு நான், நாளைக்கு வேறொருவர்... இப்படியே தினம் தினம் யாராவது உங்களுக்கும் ஒரு நாளைப் போல கவுண்ட்டர் டயத்துக்குப் பிறகு ஆகிடுமில்லியா?"

இவரின் இந்த அணுகுமுறைதான் இவரின் சந்தோஷத்திற்குக் காரணமோ!

டாக்டர் சேகர் மனைவிக்கு இருக்கும் சந்தோஷங்களை லிஸ்ட் போட்டது போல, இவருக்கு, கணேசனுக்கு இருக்கும் கஷ்டங்களை லிஸ்ட் போட்டுப் பார்க்க மனது விழைந்தது.

நிரந்தரமில்லாத தனியார் கம்பெனி வேலை. கைக்கும் வாய்க்கும் சரியாய்ச் சம்பளம். வாடகை வீடு. ஸ்கூட்டர் இல்லை, பிரிஜ் இல்லை. அதிக சேமிப்புகளும் இல்லை.

இவ்வளவும் இல்லாமலும்... 'ஓவர் டைம்' பார்த்து, அதிக நேரம் ஆபீசில் தங்கிப் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம்.

இருந்தும், மகிழ்ச்சி, சந்தோஷம், சிரிப்பு எப்படி சாத்தியம்?

ஆக எவ்வளவு சந்தோஷத்திலும், ஒருவரால் வருத்தத்தைக் கண்டு பிடித்து கவலைப்பட முடிகிறது. இன்னொருவரால் சிரமங்களூடேயும் நல்லவற்றைப் பார்த்து நிம்மதியாக இருக்க முடிகிறது.

தமிழிலே ஒரு நல்ல பாடல் ஒன்று உண்டு. கவிஞர் கண்ணதாசன் எழுதியது.

"தெய்வம் என்றால் அது தெய்வம்.
இல்லை என்றால் அது இல்லை."

அது போலத்தான் மனநிறைவும், நிம்மதியும் இருக்கிறது என்று நினைத்தால் அது இருக்கும். இல்லை என்று நம்பினால் அது இல்லாமலேயே போகும்.

எல்லாவற்றிற்கும் காரணம் நமது கண்ணோட்டமும் மனமும்தானே!

நண்பர் டாக்டர் சேகர் மனைவி சொல்வதையே எடுத்துக் கொள்வோமே.

அவர்களுக்கு இருக்கும் அத்தனை நல்ல விஷயங்களையும், கணவர் செய்யும் சமூக சேவையையும், அதனால் கிடைக்கும் நல்ல விஷயங்களையும் அவர்கள் பார்க்கத் தவறி விட்டார்கள். அவர்கள் மகள் தன் நேரத்தை எத்தனை அழகாக திட்டமிட்டு உபயோகப் படுத்துகிறாள்!

எத்தனை பெண்கள், தங்களுக்கு நேரமே கிடைக்கவில்லை என்று ஏங்குகிறார்கள். இந்தச் சூழலையே ஏன் டாக்டர் மாமி உபயோகமானதாக மாற்றக் கூடாது.

நாம் இப்படிச் செய்வதால் முதலாவதாக, நாம் உற்சாகமாக இருக்க இயலும். இரண்டாவது. உடல் ஆரோக்கியம் கெடாது. சந்தோஷமான மனம் ஆரோக்கியத்திற்கு நல்லது. மூன்றாவதாக நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு நம்மைக் கண்டால் எரிச்சலோ சங்கடமோ வராது. எதையும் எதிர்மறையாக பார்பவர்களை யாருக்குத் தான் பிடிக்கும்?

ஆகையால், இயன்றவரை எல்லா விஷயங்களிலும், நடப்புகளிலும், மனிதர்களிலும், செய்திகளிலும் நல்லவற்றைத் தேடுவோம். அவற்றைக் காண்பதில் இன்பம் கண்டு, மன நிறைவோடு வாழ்வோமே!

– எஸ். எம். வள்ளியப்பன்

முற்றும் பாதுகாப்பானது. அதன் முக்கிய கவர்ச்சியம்சம் இதுவே!

சில்ப்பா

ஸ்டிக்கர் திலகம்



சுத்தமான சுகாதார முறையில் வடிவம் பெற்றது. கச்சிதமாக வெட்டப்பட்ட வடிவம். ஆய்வுக்கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட, பாதுகாப்பான கோந்து கொண்டது. சருமத்திற்கு மென்மையானது, பாதுகாப்பானது. கோந்து சீராக பரவியுள்ளதை உறுதிப்படுத்துகிறது. உன்னத வெல்வெட் ஃபினிஷ். பட்டுப்போன்ற மென்மையான வெல்வெட், சில்ப்பா ஸ்டிக்கர் பிந்தியின் தனிச் சிறப்பு. அசல் குங்குமத்தின் அழகையும், கவர்ச்சியையும் தருகிறது.

டிப்ஸ்
அண்ட்
டோஸ்
தயாரிப்பாளர்கள் மூலம்



everest/93/SH/65-tml



சிதாவைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. அழுது அழுது கண்கள் வீங்கியிருந்தன. பச்சைத் தண்ணி கூட பல்லில் காட்டி இரண்டு நாளாச்சு என்றனர் உடன் இருந்தவர். வேதனை இருக்காதா! பெத்த பிள்ளை வீட்டை விட்டுப் போய் நாலு நாள் ஆச்சு. எங்க இருக்கான், என்ன ஆனான்னு தெரியலை. இருக்கானா, இல்லையா என்றே பயமா இருக்கே. ஒன்றை பத்தாய்ச் சொல்லி மகிழும் ஊர் உலகம் வேடிக்கைப் பார்க்கின்றதே. வீட்டை விட்டு 14 வயதுப் பிள்ளை ஓடும் அளவிற்கு என்ன நடந்து விட்டது.


''ஏன் இப்படி தலையும் வேஷமுமாய் இருக்கிறாய். ஒழுங்காய் டிரஸ் செய்து கொள். நன்றாய் படி. ப்ரண்ட்ஸ், ப்ரண்ட்ஸ் என கண்ட நேரத்தில் சுற்றாதே'' என்ற கட்டுப்பாடுகள் கடுமையாய் தெரிந்ததே காரணம்.

''நானா உங்களைப் பெத்துக்கச் சொன்னேன். ஏதோ நான் பிறந்தேன். என்ன பெரிசா செய்துட்டீங்கன்னு சும்மா பீத்திக்கறீங்க. இனிமே எனக்கு ஒன்றும் நீங்க செய்ய வேண்டாம்'' என்ற ப்ரதீப் நான்கு நாளாய் காணவில்லை. தேடாத இடமில்லை

தன்னை முரடனாகவும், சண்டைக்காரனாகவும் காட்டிக் கொள்ளுதல், காலேஜில் தன்னைப் பார்த்தாலே எல்லோருக்கும் பயம் எனச் சொல்லி பெருமிதம் அடைதல், பெற்றோரை மிரட்டி தனது ஆசைகளை சாதித்துக் கொள்ளுதல், 'ராகிங்' என்ற பெயரில் சக மாணவர்களை மிரட்டி தரம் தாழ்த்திக் கொள்ளல், சிகரெட், குடி இவையெல்லாம் வீரம் என எண்ணி தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் இவையெல்லாம் பருவமே நீ சற்று கோரமாய் விளையாடுவதால் தானோ?

அவசரப்பட்டு ஓடிப் போய் நிகழும் திடீர் திருமணங்கள். வளர்ந்த சிறுவன் ஒருவன் பருவ வேகத்தினால் வளர்ந்த சிறுமியை பிடித்துக் கொண்டு 'இது தெய்வீகக் காதல். முடிந்தால் ஒன்றாய் வாழ்வோம். இல்லையேல் மடிவோம் என வசனம் பேசுவதும் 'மூட்டை தூக்கி வேலை செய்து பிழைப்போம்' என உறுதி கொள்வதும் பின்னர் வாழ்வில் வாடி வதங்குவதும் பருவமே உந்தன் புயல் சீற்றத்தினாலா. ஏனெனில்

பருவமே,



எங்கள் குழந்தைகள் அப்படி எல்லாம் கூறுபவர்கள் அல்ல. இங்குள்ள இந்தியக் குழந்தைகள் பெற்றோரின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்பவர்கள்.

எட்டாம் வகுப்பில் காதல் கடிதம் எழுதி மகிழும் பெண் குழந்தைகள். காலேஜுக்குப் போவதே அலங்காரம் செய்யவும், அரைகுறை ஆடை அணியவும் என நினைக்கும் சில வளர்ந்த குழந்தைகள் இவர்களுக்கெல்லாம் பொல்லா பருவமே உன் சதிதான் காரணம். தாயன்பும், பெண்மையும் உயர்த்திப் போற்றப்படும் எங்கள் நாட்டில் கல்வி அறிவு பெற்று விடும் காரணத்தால் எங்கள் பெண் குழந்தைகள் தன்னம்பிக்கை, சுதந்திரம் என்ற பெயரில் ஊர் சுற்றித் திரிவார்களா என்ன? நிச்சயம் அப்படிச் செய்ய முடியாது. ஆனால் உனக்கா, எனக்கா என பருவமே நீ எங்கள் கலாச்சார பண்புகளோடு சவால் விட்டு ஓரிரு சதவிகிதம் வெற்றியும் பெற்று விடுகிறாய்.

போதைப் பொருள் என்ற விஷத்தினை எங்கள் தவிர்களுக்குக் கொடுக்கிறாய். குரு பக்தி கொண்ட எங்கள் சமுதாயத்தில் வகுப்புகளில் கூச்சலும், கிண்டலும் கொட்டச் செய்கிறாய். தமாஷாக உன் வலையில் மாட்டிக் கொள்ளும் மாணவ, மாணவியர் வாழ்வை உன் நீ நாக்குக்கு பலியாக்குகிறாய்.

மேல்நாடுகளில் உன் ஆக்கிரமிப்பு அதிகம். அந்தத் தைரியத்தில் இங்கும் இடம் பிடிக்க நினைக்கின்றாயோ? பஸ் ஸ்டாண்டுகளிலும், ஹோட்டல்களிலும், தியேட்டர்களிலும், கடற்கரைகளிலும் உன் ஆதிக்கம் அதிகம் இருக்கத்தான் செய்கின்றது. வெளிநாடுகளில் 14-15 வயது நிரம்பியதும் அவர்கள் தானே வேலைக்குச் சென்று சம்பாதித்து, முடிந்தால் படித்து வாழும் நிலையினை இங்குள்ள பெற்றோர்கள் தன் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டும் என்று கனவிலும் நினைத்துப் பார்ப்பார்களா என்ன? இங்கு அன்பே உலகம். தன் மக்களே ஒருவருக்குச் செல்வம். இதை உணராதவர் இல்லை எங்கள் நாட்டின் 'டீன் ஏஜ்' சமுதாயம். ஏதோ உன் இழுப்புக்கு வருவது போல்

பருவமே

தோற்றமளிப்பது கண்டு நீ வெற்றி கொண்ட தாய் எண்ணி மமதை கொள்ளாதே. விழித்துக் கொள்கிறார்கள் இன்றைய எங்கள் கண்மணிகள்.

35% வாங்கி தேர்வு பெற்றால் உள்ளத்தில் நிறைவும் இராது, வாழ்க்கைப் போட்டிகளில் வெற்றியும் கிட்டாது என அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அவுட்டிங், பார்ட்டி போன்ற நிகழ்ச்சிகள் சிநேக மனப்பான்மையையும், வலுவான சமுதாயத்தை உருவாக்கவும் என அவர்கள் உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை 'பருவமே' நீ உணர்ந்து கொள்.

பத்திரிகைகளில் வரும் செய்திகளும், சுற்று வட்டார நிகழ்ச்சிகளும் எங்களின் இளம் சிங்கங்களை சிந்திக்க வைப்பது போல்லா பருவமே உனக்கு ஒரு முடிவு கட்டத்தான்.

ஏதோ சிறு வயது குறும்புகள் இருக்கலாம். ஆனால் குணத்தில் கோளாறுகளே இல்லை என பிற நாடுகள் எங்கள் நாட்டினை கண்டு பொறாமைபடும் விதத்தில் வருங்காலம் அமையப் போவது உறுதி. எங்களின் முன்னேற்றப் பாதையில் ஆங்காங்கே சறுக்கல்கள் சற்று நேரலாம். அதனால் தலைகுப்புற விழுந்து விட மாட்டோம். தெரிந்து கொள்.

ஸ்டிரைக், பொதுச் சொத்து சேதம், தேவையற்ற போர்க் கொடி, பெற்றோர்களை விரோதிகளாய் பாவித்தல், அவர்களை ஏமாற்றுவதாய் நினைத்து பின் தானே ஏமாறுதல் போன்ற மாயஜால வித்தைகளை விஷப் பூச்சிகளாய் கொண்டு வளரும் செடிகளான எங்கள் குழந்தையை அழிக்க முனையும் பருவமே உன்னை நல்ல குணங்கள் என்ற மருந்துகளுக்கு அதிக சக்தி ஊட்டி உன்னை அழித்திடுவோம். அல்ல, அல்ல உன்னை அழிப்பதல்ல எங்கள் வேலை. உன்னை ஆக்கபூர்வமாய் மாற்றிடுவோம்.

அதிக திறமை இவ் வயதில் தான் வெளிப்படும் என்ற காரணத்தை அறிந்து தானோ இவ் வயதினரை நீ அதிகம் தாக்குகின்றாய். இதோ பார் உன்னை எதிர்த்து நாங்கள் போடும் திட்டங்களை. பெற்றோர்களே வாருங்கள் நாம் திட்டம் தீட்டி செயல்படுத்தி நம் நாட்டின் வருங் காலத்தை ஒளிமயமாய்ச் செய்வோம்.

1. உணவு கூட ஒரு முக்கிய காரணம் தான். எனவே நம் குழந்தைகளுக்கு அதிக மசாலா, கொழுப்பு உணவு வகைகளைத் தவிர்த்து பயறு, தானிய வகை உணவுகள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளை அளிப்போம்.

2. வல்லாரை கீரையினால் செய்யப் படும் மாத்திரைகளை தினமும் 2-2-2 அல்லது 2-0-2 என்றவாறு கொடுத்து வர நினைவாற்றல், அறிவுக் கூர்மை மிகுந்து படபடப்பு, கோபம், வேகம், முறையற்ற போக்கு நீங்கி விடும்.

3. இவ் வயதில் கண்டிப்பாய் ஒரு கலையை கற்றுக் கொடுப்போம். வீணை, பாட்டு, வயலின், மிருதங்கம், கிடார், பியானோ என விரும்பியதை கற்கட்டும். கலை மொழி பேதமற்றது.

4. நமக்குக் கூட்டு முயற்சி வேண்டும். கூட்டு முயற்சி கூடுதல் சக்தி அல்லவா. ஒரே காலனியைச் சேர்ந்த பெற்றோர்கள் சங்கம் அமைத்து அக் காலனி குழந்தைகளுக்கு டென்னிஸ், கிரிக்கெட், பாஸ்கெட்பால், வாலிபால் போன்றவற்றை முறையாய் கற்றுத் தர ஆசிரியரை அமர்த்துங்கள்.

உடற்பயிற்சி வகுப்புகளை நடத்துங்கள்.

கலை வகுப்புகளை நடத்துங்கள்.

குறிப்பிட்ட பாட வகுப்புகள் நடைபெறச் செய்யுங்கள்.

மாதம் ஓரிருமுறை நல்ல சான்றோரை அழைத்து பேசச் செய்யுங்கள்.

நல்லதோர் இடத்திற்கு உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லுங்கள்.


இவையெல்லாம் ஒரு குழந்தைக்கு எட்டு வயதிலிருந்தே கிடைக்க வேண்டும். இப்பொழுதைய காலத்தில் குழந்தையை எட்டு வயதிலிருந்தே அதிக கவனம் கொள்ள வேண்டி உள்ளது.

வருடத்திற்கொருமுறை போட்டி, பரிசு என இல்லாமல் அன்றாடம் கவனிக்கப்பட வேண்டிய பயிர்கள் அவர்கள். சற்று கவனம் குறைந்தாலும் பூச்சி அழித்து விடுகின்றதே. நம்முடைய இன்றைய கூடுதல் உழைப்பு நாளைக்கு நமக்கு மகிழ்ச்சி அளிக்கப் போவது உறுதி. எனவே சோர்வு கொண்டு துவண்டு விடாதீர்கள்.

எத்தனை டியூஷன் வைத்தும் பிள்ளை படிக்கவில்லையே, பஸ் ஸ்டாண்ட் ரோமியோக்களால் பலர் அவதிப்படுகின்றனரே என்ற வேதனைகளுக்கு முடிவு கட்டுவோம்.

இத்தகைய கூட்டு முயற்சிகள் பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுனர்களை ஒவ்வொரு காலனியும் உருவாக்கும். அன்பும், அறிவும்தான் நம்முடைய ஆயுதங்கள். எதிர் கால இந்தியா வளமுடையதாகவே, பண்பாளர்களைக் கொண்டதாகவே திகழும்.

– டாக்டர். கமலி ஸ்ரீபால்




விசேஷத்திற்காக முதல் நாள் செய்த வடை மிஞ்சிவிட்டது. மறுநாள் மோர்க் குழம்பு செய்து அது பொங்கி வரும்போது வடைகளைப் போட்டேன். அன்று மோர்க் குழம்பு வடை உனக்கு, எனக்கு என்று பறந்து விட்டது!

– விமலா தியாகராஜன்

எப்போதும் கடவுள் பொம்மைக்குக் கிராக்கி உண்டு!

சர்வோதய சங்கங்கள் இணைந்து நடத்தும் நிறுவனங்களில் சென்னை அண்ணா சாலையில் உள்ள காதி கிராமோத்யோக் பவன் பிரபலமானது. அதில் ட்ரஸ்டியாக இருப்பதோடு, பொம்மைகள் விற்பனைப் பிரிவில் நேரடியாகவும் பணிபுரியும் திருமதி ருக்மணி பொம்மை வாங்குபவர்களின் மனப்போக்கை விவரிக்கிறார்...

"மற்ற மாதங்களில் எப்படியிருந்தாலும் நவராத்திரி சமயத்தில் இங்கே பொம்மை வாங்க வர்றவங்க பெரும்பாலும் மண் பொம்மைகளைத்தான் வாங்குவார்கள். வேறு பொம்மைகளை வாங்க நினைத்திருந்தாலும் வரும் பெரியவர்கள், "கொலுன்னா



மண் பொம்மைகள் வைப்பதுதான் சிறப்பு" என்று அறிவுரை சொல்வார்கள்.

அந்தந்தக் காலச் சூழலுக்குத் தகுந்த மாதிரி மேல்மருவத்தூர் செட், டீ.வி. செட், கிரிக்கெட் குழு போன்ற பொம்மைகளை விற்போம். இவை பரபரப்பாக விற்றுப் போகும். இந்த வருடத்திற்குப் பாட்டுக் கச்சேரி, யானைகள் மியூசிக், ஜிப்ஸி ட்ரம் செட், விண்வெளி ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துகிறோம். இவற்றையெல்லாம் செய்வது காஞ்சிபுரம், கொசப்பேடு ஆகிய இடங்களில் உள்ள கலைஞர்கள்.

என்னதான் நவீன பொம்மைகளை அறிமுகப்படுத்தினாலும் கடவுளர் பொம்மைகளுக்கு உள்ள கிராக்கி குறைவதேயில்லை. முக்கியமாக சில வருடங்களுக்கு முன் நாங்கள் விற்ற ராமாயண செட்டுக்கு நிறைய டிமாண்ட். 21 காட்சிகள் கொண்ட அந்த செட்டின் விலை சுமார் ஆயிரம் ரூபாய்.

அதுபோன்ற செட்களை இப்போது எங்களால் விற்க முடிவதில்லை. இப்போது கூட அவற்றிற்கு எக்கச்சக்க டிமாண்ட் இருந்தாலும், அவற்றைக் கைவினைஞர்கள் செய்தால்தானே நாங்கள்

அவற்றை வாங்கி விற்க முடியும்? இதற்குக் காரணம் அந்தக் கலைஞர்கள் பேப்பர் பல்ப்புக்கு மாறிவிட்டார்கள். பேப்பர் பல்ப் பொம்மைகளில் லாபம் அதிகமிருக்கிறது. பெரிய பொம்மைகளைக் குறைந்த செலவில் தயாரிக்க முடிகிறது. அதுமட்டுமல்ல மிக லேசான எடையைக் கொண்டிருப்பதால் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களுக்குக் கொடுக்க இந்த வகை பொம்மைகளையே வாங்குகிறார்கள். மண் பொம்மை செய்யச் சூளையெல்லாம் தேவை. பேப்பர் பல்ப் பொம்மைகளுக்கு அதுபோன்ற அவசியமில்லை.

பேப்பர் பல்ப்பிலேயே விதவிதமான செட்களைச் செய்யலாமே என்று கேட்கலாம். அது சுலபமல்ல. மண்ணில் உருவாக்குமளவுக்கு பேப்பர் பல்ப்பில் சிறிய உருவங்களில் தெளிவு சுளிவுகளைக் காட்ட முடியாது.

நவராத்திரி கொலுவுக்காக பொம்மை வாங்க வருபவர்கள் மண் பொம்மைகளோடு கூடவே ஒரிரு லக்னோ பொம்மை செட்களையும் வாங்கிச் செல்வது வழக்கம். ஓர் அட்டைப் பெட்டியில் 12 விதப் பறவைகள் சிறிது சிறிதாக வடிவமைக்கப்பட்டிருக்கும். இதன் விலை சுமார் 14 ரூபாய்தான் (1962 இல் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டபோது இதன் விலை ஒன்றரை ரூபாய்தான்). இந்தியாவின் வெவ்வேறு பணியாளர்கள், பெண்களாலான பாண்ட் இசைக் குழு ஆகியவையும் இதேபோல் லக்னோவிலிருந்து வருகின்றன. இவற்றையும் பீங்கான் பொம்மைகளையும் நவராத்திரிக்குப் பின்னும் ஷோ-கேஸில் வைக்கலாம் என்ற டூ-இன்-ஒன் நோக்கத்தோடு வாங்குகிறார்கள்.

மண் பொம்மைகளில் கூட கல்கத்தாவில் உள்ள குர்னி, நதியா போன்ற இடங்களிலிருந்து உருவாக்கப்பட்டு வரும் பொம்மைகளில் நிறைய கலைத்திறன் இருக்கும். கங்கைக் கரை மண்ணின் ராசியோ என்னவோ? இதோ பாருங்கள், சின்னதாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்தச் சிற்பியின் கைகளில் நரம்புகள் தெரிவது கூட இயற்கையாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

என்னதான் காலம் மாறினாலும் நம் பண்பாட்டை நமக்கு நினைவுபடுத்துவது இதுபோன்ற பண்டிகைகள்தான். நவராத்திரி தொடங்குவதற்கு ஒரு மாதம் முன்பே ஆரம்பித்துவிடும் எங்கள் பொம்மைக் கொலுக் கண்காட்சிக்குப் பெருகிவரும் சந்தோஷமான மக்கள் கூட்டம் இதை நிரூபிக்கிறது.''

— அருண் சரண்யா


உங்கள் மழலைச் செல்வம் அவனது
மென்மையான மிருதுவான உலகம்.
அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல்
திட உணவும் அவனைப் போலவே
மிருதுவாக இருக்கட்டும்.
Nestlé
NESTUM
Baby Cereal
Weaning Food
Rice
mix with milk
இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுதில்லி-110016
நெஸ்டம்
எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

தினசரி

இப்போதெல்லாம் பலர் வீடுகளில் பன்னிரண்டு மாதங்களுமே கொலுவைப் பார்க்க முடிகிறது. ஷோ-கேஸ்களைத் தான் குறிப்பிடுகிறோம். இவற்றை நன்கு வைத்துக் கொள்வதும் ஒரு கலைதான். அவற்றில் வைக்கப்படும் பொருட்கள் கூட ஒருவரது ரசனைக்கு எடுத்துக்காட்டுதான். கொஞ்சம் அசந்தால் சாவி, பத்திரிகைகள், கைப்பை போன்ற பொருள்கள் கூடச் சில வீட்டு ஷோ-கேஸ்களில் இடம்பெற்றுவிடும். அப்படி இல்லாமல் தங்கள் வீட்டு ஷோ-கேஸ்களில் அக்கறை கொண்ட சில பெண்கள் அதைப் பற்றியும், அதில் வைக்கப் பட்டுள்ள சில பொருள்களைப் பற்றியும் தங்கள் நினைவலைகளை இங்கே எழுப்புகிறார்கள்.



திருமதி லட்சுமி முத்துசாமி :

"எங்கள் வீட்டு ஷோ-கேஸ்களில் உள்ள இயந்திர மனிதனைக் கீழே இறக்கி விட்டுக் கீ கொடுத்தால் பேசியபடியே நடந்து வருவான். அதேபோல் குரைக்கும் நாய் பொம்மையும் உண்டு. இவை போன்று

கொலு

பல பொம்மைகளை வாங்கித் தந்தது கலிபோர்னியாவில் இருக்கும் எனது ஒரே நாத்தனார்தான். அவள் வாங்கித் தந்த தென்னவோ என் மகனுக்கும், மகளுக்கும் தான். ஆனால் நானோ அவர்களுக்குக் கொஞ்ச நேரம் அந்த பொம்மைகளை விளையாடக் கொடுத்துவிட்டு, அவற்றை வாங்கிப் பூட்டி வைத்து விடுவேன். வேறொன்றுமில்லை. வருங்காலத்தில் சொந்த வீட்டில் பெரிதாக ஷோ-கேஸ் உருவாக்கி, அதில் இவற்றையெல்லாம் அலங்காரமாக வைக்க வேண்டும் என்ற ஆசையில்தான். வருடங்கள் கழிந்தன. சொந்த வீட்டில் ஷோ-கேஸ் உருவாக்கிய போது ஏற்கெனவே இருந்த பொம்மைகள் அளவுக்குத் தகுந்த மாதிரி தடுப்புகளை எழுப்பினோம். ஷோ-கேஸ் கச்சிதமாக அமைந்துவிட்டது.''




திருமதி சரஸ்வதி சங்கரன் :

"தினமும் நான் பெருமையும், வருத்தமும் படுவது ஷோ-கேஸில் உள்ள இந்தத் தங்க மெடலைப் பார்த்துத்தான். ராணிமேரிக் கல்லூரியில் பொருளாதாரத்தை முக்கிய பாடமாக எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். நானும் என் நெருங்கிய தோழியும் சரியான அசடுகள் - கல்லூரியில் படிப்பதோடு மட்டுமே நிறுத்திக் கொண்டோம்; அரட்டை, கலாட்டாவெல்லாம் கிடையாது. அதிக மதிப்பெண்கள் வாங்குவதில் அவளுக்கும் எனக்கும் இடையே கடுமையான போட்டி நிலவும். கடைசியில் வென்றது நான்தான். 1977 ஆம் ஆண்டு அப்போதைய கல்வி அமைச்சர் அரங்கநாயகம் கையால் கல்லூரியில் பொருளாதாரத்தில் முதலில் வந்ததற்காக இந்த மெடலைப் பெற்றேன். அதுசரி, இதைப் பார்க்கும் போது வருத்தம் ஏன் ஏற்பட வேண்டுமென்கிறீர்களா? இவ்வளவு நன்றாகப் படித்த


திருமணத்திற்கு வேண்டிய அனைத்து ரக
பாத்திரங்கள் மற்றும் சமையல் உபகரணங்கள்
உங்களது இல்லத்திற்கு தேவையான எவர்சில்வர், பித்தளை, அலுமினியம் மற்றும் அனைத்துரக சமையல் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லரை விலையிலும் கிடைக்கும். திருமணம் மற்றும் வீட்டு விசேஷங்களுக்கு தேவையான சாமான்கள் அனைத்தும் உங்கள் தேவைக்கேற்ப செய்து பாக்டரி விலையில் அளிக்கப்படும்.
தயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளர்
தி கோல்டன் மெட்டல் கார்ப்பரேஷன்
79, தைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 600 003. போன் : 561723/561724
WITH BEST COMPLIMENTS FROM சுந்தர் லாட்ஜ் போன்: 563252/564224


பெங்காலி காட்டன் புடவை
கட்டிண்ட வேளை உடனே வேலை
கிடைச்சிடுச்சி
வெங்கடகிரி புடவை கட்டிண்ட
யோகம் இடம் நிச்சயமாயிடுத்து
பெங்கால், வெங்கடகிரி புடவைகள்
வாங்க ராசியான இடம்
Sunday Shop
பிக்னிக் பிளாசா, லஸ்
சென்னை-4.
ஸண்டே ஷாப்




எனக்கு ஏதாவது வங்கியொன்றில் நிச்சயமாக வேலை கிடைக்கும் என்று நம்பினேன். அந்த விருப்பம் நிராசையாகி விட்டது. அதுதான் வருத்தம்.

ஷோ-கேஸில் உள்ள இந்த நாய் பொம்மை நாற்பது ஆண்டு களுக்கு மேலாக எங்கள் வீட்டுக் கொலுவில் இடம்பெற்றிருக் கிறது. மிகவும் சின்னதாக இருந் தாலும் இந்த நாய் செய்யப்பட் டுள்ள நேர்த்தித் திறன் அற்புத மாக இருக்கும். அதுமட்டுமல்ல, இதைப் பார்க்கும்போதெல்லாம் இதை எனக்குக் கொடுத்த என் பாட்டியின் நினைவு வரும். அவரது பாசமும், ''வாழ்க்கை யிலே முன்னுக்கு வரணும்னா கடுமையாக உழைக்கணும்'' என்று அடிக்கடிக் கூறும் அவரது உபதேசமும் ஞாபகத்தில் எட்டிப் பார்க்கும்.''

செல்வி லட்சுமி :

''நாய் என்றாலே எனக்கு அலர்ஜி. தெருவில் காத தூரத்தில் நாய் வந்தாலே நான் முடிந்தவரை நடையை எட்டிப் போடுவேன். அதிசயமாக என் தோழிகள் குழுவில் உள்ள அத்தனை பேருக்குமே நாய் என்றால் ஆகாது. இப்படிப்பட்ட நான் சில வருடங்களுக்கு முன் 'பென்ஜி' என்ற திரைப்படத்தில் ஒரு நாய் செய்த கலகங்களையும், குறும்புகளையும் பார்த்த போது பிரமித்துப் போனேன். இதைப் பார்த்த என் அப்பா, ''இனியாவது நாய்களைக் கிட்டே சேர்ப்பியா?'' என்றார். ''ஊஹூம். பென்ஜி நாயை மட்டும்தான் சேர்ப்பேன்'' என்றேன். அதற்கு ஓரிரு வரு டங்கள் கழித்து அலுவலக செமினார் தொடர்பாக அப்பா அமெரிக்கா செல்ல நேர்ந்தது. அங்கு பிரபலமான ஒரு பொம் மையை எனக்கு வாங்கி வந்தார். அது ஒரு நாயின் பொம்மை. கழுத்தில் பென்ஜி என்ற எழுத் துக்கள் பொறிக்கப்பட்ட டாலர். அதற்குப் பிறகு தினமும் ஒரு முறையாவது ஷோ-கேஸைத் திறந்து இந்தப் பொம்மையின் மெத்து மெத்தென்ற உடலைத் தொட்டுப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது.

செராமிக் கண்காட்சியில் வாங்கப்பட்ட இந்தப் பெரிய பீங்கான் குதிரைச் சிலையையும்



எனக்குப் பிடிக்கும். இதை ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் தேசிங்கு ராஜா, ஜோன் ஆஃப் ஆர்க், ட்ரோஜன் போர், கிளியோபாத்ரா படத்தில் குதிரைக்குள் மறைந்து வந்து பிறகு வெளிப்படும் போர் வீரர்கள் ஆகிய காட்சிகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வரும். என் கற்பனா சக்தியை இந்தப் பொம்மை நிறையத் தூண்டுகிறது.''

திருமதி உஷா தியாகராஜன் :

''இயற்கைக் காட்சிகள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஊட்டி, பெங்களூர் ஆகிய இடங்களிலுள்ள பசுமையில் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறேன். முன் பிருந்த வீட்டில் இயற்கையழகு கொஞ்சும் காட்சிகள் அடங்கிய படங்களைச் சுவரில் மாட்டியிருந்தேன். ஆனால் இப்போதிருக்கும் ஃப்ளாட்டில் ஆணிகள் அடிக்கக் கட்டுப்பாடு. பார்க்கும்போதெல்லாம் மனத்திற்கு நிம்மதியளிக்கும் இந்தப் படங்களைப் பரணில் வைக்கவும் மனமில்லை. யோசித்தேன். ஷோ-கேஸில் இதுபோன்ற பெரிய படங்களை வைக்கக் கூடாது என்று சட்டமா என்ன? வைத்து விட்டேன். இதில் ஒரு படத்திலுள்ள ''நம் எல்லோருக்குமே தனிமை தேவைப்படுகிறது - கனவு காணவும், அதில் நிம்மதி காணவும்'' என்ற வாசகங்கள் எனக்கு மிகவும் ஏற்றவை. மனத்தில் பாரம் ஏறும்போதெல்லாம் இந்த இயற்கைக் காட்சியைச் சில நிமிடங்கள் பார்ப்பேன். பாதித் துயரமாவது தீர்ந்து விட்டது போன்ற உணர்வு ஏற்படும்.''

– ஜி. எஸ். எஸ்.



மோர்க் குழம்புக்கு அரைக்கும்பொழுது ஒரு ஸ்பூன் கடுகைச் சேர்த்து அரையுங்கள். வடுமாங்காய் வாசனை அடித்துக் கொண்டு மோர்க் குழம்பு பிரமாதமாக இருக்கும்.


– சந்திரா




பண்டைக்காலத்தில்
மன்னர்கள் இதற்காகவே
போர் தொடுத்திருப்பார்கள்.

சப்பாத்திக்கு ஏற்ற ஸைட் 'டிஷ்'

பொதுவாக நாம் வடநாட்டுக்காரர்களைப் போல் கோதுமையை நம் சாப்பாட்டில் அதிகம் சேர்த்துக் கொள்வதில்லை. காரணம்? இதை அலசி, ஆராயும் போது சிலர் கூறுவார்கள். "இங்கிருக்கும் கோதுமை நன்றாக இல்லை. அதான் செய்யறதுக்கு மனசு வரலை" என்று. இன்னும் சிலருக்கு சோம்பேறித்தனம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட மிக, மிக முக்கியமான காரணம் என்னவென்றால் நாம் செய்யும் பொரியல் வகைகள் ரொட்டிக்குப் பொருத்தமாக இல்லை என்பதுதான். நம்மவர்களுக்கு பூரி, சப்பாத்தி என்றாலே நினைவுக்கு முதலில் வருவது 'உருளைக் கிழங்கு' ஒன்றுதான். மற்ற காய்கறிகளையும் கொண்டு, சப்பாத்திக்கேற்றபடி எப்படித் தயாரிப்பதென்பது பற்றிப் பார்ப்போம்.



பருப்பு வகைகள் :

பருப்பு வகையை எடுத்துக் கொண்டோமேயானால் நாம் செய்யும் கட்டிப் பருப்பை விட, நன்றாக வேக வைத்து தண்ணீர் அதிகம் சேர்த்த பருப்புதான் நன்றாக இருக்கும். (நம் சாம்பாரும் நன்றாகவே இருக்கும். ஆனால், 'அது சப்பாத்திக்கு எப்படி இருக்குமோ?' என தொட்டுப் பார்ப்பதில்லை) மைசூர் பருப்பு, கடலைப் பருப்பு, பாசிப்பருப்பு, உளுத்தம் பருப்பு இவைகளுடன் அதிகம் வெங்காயம் சேர்த்து வேக வைத்து, பச்சை மிளகாய், பூண்டு போட்டுத் தாளித்து விட்டால் கமகமவென இருக்கும். இவைகள் கெட்டியாக இருக்கலாம்.

பயறு வகைகள் :

இதில் கொண்டைக் கடலையும், பட்டாணியும் முதலிடம் வகிக்கிறது. இவைகளைக் குக்கரில் நன்றாக வேக விட்டு, கரம் மசாலா எல்லாம் போட்டு டால்டா ஊற்றித் தாளிக்க வேண்டும். இப்படிச் செய்தால் 'சுக்கா' ரொட்டி என்றாலும்

கொண்டா, கொண்டா எனக் கேட்கச் சொல்லும். இது தவிர பாசிப் பயறு, தட்டான், உளுந்து வகைகளை இடைக்கு, இடை சேர்த்துக் கொள்ளலாம். இவைகள் எல்லாவற்றுக்குமே மசாலாவோடு பூண்டும், இஞ்சியும் அரைத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காய்கறிகள் :

காய்கறிகளை நாம் செய்யும் விதத்தில் தண்ணீர் சேர்த்து அவியலும், பொரியலுமாக வைத்தால் நன்றாக இருக்காது. முடிந்தவரை எண்ணெயில் அப்படியே பொரிக்க வேண்டும். மசாலாவில் தேங்காயைத் தவிர்க்க வேண்டும். கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், இன்னும் நம்மால் முடிந்தவரை எந்தக் காய்கறியையும் லேசாக நறுக்கி உள்ளுக்குள் நமக்குப் பிடித்தமான மசாலா நிரப்பி, பொரித்து சப்பாத்தியுடன் சாப்பிட்டால் தேவாமிர்தமாக இருக்கும்.

சட்னி, ஊறுகாய் :

பருப்பு வைத்துச் சாப்பிடும் போது ஏதாவதொரு சட்னி, ஊறுகாய்கள் தேவைப் படும். எனவே சீசனுக்கேற்றபடி மாங்காய், எலுமிச்சை, இன்னும் உங்களுக்குத் தெரிந்த ஊறுகாய் வகைகளைச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். சட்னியிலும், புதினா, தக்காளி, மல்லி என மாற்றி, மாற்றிச் செய்து கொள்ள வேண்டும்.

ஸாலட் :

இது அவரவர் ருசிக்கேற்றபடி வெங்காயம், தக்காளி, மிளகாய், காரட், வெள்ளரி எனச் சேர்த்துக் கொள்ளலாம். தேவைப்பட்டால் தயிரிலும், அல்லது எலுமிச்சை சாறு பிழிந்தும் தயாரிக்கலாம். ஆனால் இது இல்லாவிட்டால் சப்பாத்தி சாப்பிட்ட திருப்தி வராது.

நான் வடநாட்டில் இருபத்தைந்து வருடம் இருந்தவள். முதலில் எனக்கும் ரொட்டி, சப்பாத்தி என்றால் அலர்ஜியாகத்தான் இருந்தது. ஆனால் இப்போ... ரொட்டி ஒருவேளைக்காவது கட்டாயம் வேண்டும் என்ற நிலை. அந்த அனுபவத்தில் சிறு யோசனை :

சப்பாத்தி செய்வதற்கு அரைமணி நேரம் முன்பு மாவைப் பிசைந்து வைத்து, பின் சப்பாத்தி செய்தால் ரொட்டி 'பன்' போல் மிகவும் மிருதுவாக இருக்கும். மிருதுவாக இருக்க வேண்டும் என்பதற்காக அடிக்க, புடிக்க என்பதெல்லாம் தேவையில்லை.

– அஞ்சலி மாரியப்பன்



பச்சைக் கீரைகள் முக்கியமான தாதுக்கள் மற்றும் வைட்டமின்களின் உறைவிடமாகத் திகழ்வதால், உடல்நலக் காப்பு உணவுப் பொருட்கள் என வகைப் படுத்தப்பட்டுள்ளன. கீரைகளில் இரும்பு, கால்சியம், வைட்டமின் ஏ (கரோட்டனாக) வைட்டமின் சி மற்றும் குறிப்பாக ரைபோஃப்ளோவின் மற்றும் ஃபோலிக் அமிலத்துடனான பி-காம்ப்ளெக்ஸ் வைட்டமின்கள் ஆகியவை பெருமளவில் உள்ளன. இவற்றில் புரோட்டீனும் உள்ளது. இந்தப் பசுந்தழைக் காய்கறிகளை தானிய - பயறுக் கலவையுடன் சேர்க்கும்போது இது உணவிலுள்ள புரோட்டீன் தரத்தை உயர்த்துகிறது. பச்சைக் கீரைகள் வலுவான எலும்புகளையும், ஆரோக்கியமான பல் மற்றும் ஈறுகளையும் உருவாக்க உதவுகின்றன.



ருக்மிணி பார்த்தசாரதி

கடையில் எதிர்பார்த்த அளவு கூட்டமில்லை. மைதிலியும் நீளமான லிஸ்ட் கொடுத்திருக்கவில்லை. எல்லா சாமான்களுமே ஒரு சின்ன பிளாஸ்டிக் கூடையில் அடங்கி விட்டன.

கைக் கடிகாரத்தைப் பார்த்தார் முகுந்தன். மூன்றுதான். சரியாக நாலரை மணிக்குள் கடக்கட டிபன் பரிமாறுவாள் மைதிலி. நாலே காலுக்கு வீடு போய்ச் சேர்ந்தால் போதும்.

சட்டென்று, ''கோபியைப் போய்ப் பார்த்தால் என்ன?'' என்று நினைத்துக் கொண்டார்... கோபி இருப்பது இந்த ஏரியாவில்தான். வீட்டு அடையாளம் கூடச் சொல்லியிருந்தாரே! போய்ப் பார்த்து விடலாம் என்று நிச்சயித்தவர் கணநேரம் தயங்கினார். டெலிபோன் செய்து விட்டுத்தான் போக வேண்டுமோ? கோபி குடும்பத்தோடு எங்காவது வெளியே போயிருக்கலாம்... இல்லை, குடும்பத்தோடு வீட்டிலேயே உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கலாம்... திடீரென்று போய் நின்றால் அது நாகரிகமாயிருக்காது.

ஆனால், ''நீ எப்போது வேண்டுமானாலும் வா, முகுந்தா!'' என்று கோபி சொல்லியிருந்தது நினைவுக்கு வர, அவர் தீர்மானித்தார்.

கோபி... அதாவது கோபிநாத்... பள்ளியிலும், பின் கல்லூரியிலும் க்ளாஸ் மேட்... அதன் பிறகு வாழ்க்கைப் பாதைகள் பிரிந்தன. அவர் அரசாங்க அதிகாரியாக இந்தியாவில் பல்வேறு மாகாணங்களில் பணி புரிந்து விட்டு, ஓய்வு பெற்றபின் சென்னை வந்து செட்டிலாகி விட்டார். கோபியோ சென்னையிலேயே வேலை தேடிக் கொண்டு பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். ஒருநாள் லைப்ரரியில் கோபியைத் தற்செயலாகப் பார்த்தார் முகுந்தன். அத்தனை வருடப் பிரிவிற்குப் பிறகும் சில நிமிடங்களிலேயே ஒருவரையொருவர் அடையாளம் புரிந்து கொண்டார்கள். அருகிலிருந்த ஹோட்டலில் காப்பி குடித்துக் கொண்டே குசலம் விசாரித்துக் கொண்டார்கள்... அவரைப் போலவே, கோபிக்கும் ஒரே மகன்! மணமாகி விட்டது! அவரைப் போலவே, ஒரு பேரன், ஒரு பேத்தி...

பள்ளியிலும் கல்லூரியிலும் ஏற்பட்ட நெருக்கம் மறுபடியும் தோன்றி வளரப் பெற்றாற் போல் உணர்ந்தார் முகுந்தன். இருவரும் விலாசம் பரிமாறிக் கொண்டார்கள்.... ''கட்டாயம் வா முகுந்தா! எப்போது வேண்டுமானாலும் வா! நானும் வரேன்!'' என்றார் கோபி.

கோபியின் வீட்டைக் கண்டுபிடிப்பது அப்படியொன்றும் கஷ்டமாக இல்லை. முன் பக்கம் நன்கு வளர்ந்த இரண்டு அசோக மரங்கள்... அடர்ந்து படர்ந்த ஒரு வேப்ப மரம்... சற்று உள்ளடங்கினாற்போல், கச்சிதமான வீடு... பின்பக்கம் கட்டாயம் பழ மரங்கள் இருக்கும்... தென்னை மரமும் தான்.

தோட்டத்து 'க்ரில்' கதவைத் திறந்த போது அது ''க்ளிங்'' என்று ஒலியெழுப்பிற்று. உள்ளே நுழைந்து அதை மூடிய போது வீட்டின் வாசல் கதவு திறக்கும் சத்தம்

நண்பர்கள்



வேண்டும்



புது பாட்டிலிலுள்ள கெட்சப், தேன், டால்டா, நெய், எதுவானாலும் சரி, தங்கு தடையின்றி வெளிவர, ஒரு 'ஸ்ட்ரா'வை பாட்டிலில் செலுத்துங்கள். இதன் வழியாக வரும் காற்று, பாட்டிலிலுள்ள பொருளைச் சுலபத்தில் வெளிக் கொணரும்.

- திருமதி காந்தாமணி

கேட்டது. ''முகந்தா! வா, வா! உள்ளே வா!'' கோபியின் குரலில் சௌஜன்யமும், மகிழ்ச்சியும் இணைந்து ஒலித்தன.

அந்த வரவேற்பும், நண்பர் முகத்து முறுவலும் சந்தோஷத்தைத் தந்தன... ஹாலுக்கு வந்தார் முகுந்தன்... ஒரு சோபாவில் அமர்ந்தார்.

''நீ வந்ததில் எத்தனை சந்தோஷம் தெரியுமா எனக்கு? காலேஜ் நாட்கள் திரும்பி வந்த மாதிரி இருக்கு, முகுந்தா!''

''எனக்கும் அதே சந்தோஷம்தான் கோபி... அதனால்தான் கிடைச்ச கொஞ்ச நேரத்தை வீணாக்காமல் உன் வீடு தேடி வந்தேன்!''

''கிடைச்ச கொஞ்ச நேரமா? அப்படியானால், சாவகாசமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டாயா?''


''நாலு மணி வரையில் ஃப்ரீதான்... அதற்குப் பிறகு கிளம்பிடணும்... வீட்டில் மைதிலி காத்திருப்பாள்...''

''மிஸஸ் முகுந்தன் சௌக்கியம் தானே?''

''ஓ! மைதிலி சௌக்கியம்தான்!''

''ஒரு நிமிஷம் இரு!'' என்று உள்ளே சென்றார் கோபி.

தம்மைச் சுற்றிப் பார்த்தார் முகுந்தன். ஆடம்பரமில்லாமல், அதே சமயம் கலைக் கண்ணோடு அலங்கரிக்கப்பட்ட ஹால்..



நடுநாயகமாக இரண்டு புத்தக அலமாரி கள்... கல்லூரி நாட்களில் கோபிக்கும் புத்த கங்கள் என்றால் உயிர் என்பது சட்டென்று நினைவுக்கு வந்தது. அந்த லயிப்பு இன்னும் நீடிக்கிறது போலும்.

வீட்டுக்குள் சன்னமான பேச்சுக் குரல் கேட்டன. மற்றபடி நிசப்தம். கோபியின் பிள்ளை, மாட்டுப் பெண், பேரன் பேத்தி வெளியே சென்றிருக்க வேண்டும். இளைய தலைமுறையினர் இருக்குமிடம் ஜே ஜே என்று இருக்குமே!

கோபி தம் மனைவியோடு வந்தார். "விமலாவை நீ பார்த்ததில்லையே? என் "பெட்டர் ஹாஃப்!"

எழுந்து நின்று கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தார் முருந்தன். ஏறக்குறைய மைதிலியின் வயதுதான் இருக்கும். பாதிக்கு மேல் நரைத்து விட்ட தலைமுடி, வலது மூக்கில் பேஸரி, ஸ்டிக்கர் அல்லாமல் குங்குமப் பொட்டு, இவையும் மைதிலி மாதிரிதான்.

விமலா கொடுத்த காப்பி நன்றாக இருந் தது. குடித்த பின், சற்று நேரம் இருவரும் கல்லூரியில் தங்களோடு படித்த நண்பர்கள் பற்றி, பின் தத்தம் உத்தியோக வாழ்க்கைப் பற்றிப் பேசினார்கள். பேச்சுச் சத்தம் சற்று ஓய்ந்தபோதெல்லாம் வீட்டிலிருந்த நிசப் தமே எங்கும் பரவி வியாபிப்பதாக நினைத் தார் முருந்தன். ஒருவேளை தம் வீட்டில் இந்த நிசப்தத்தை அளவுக்கு அதிகமாகவே உணர்வதால் இதுவே ஒரு "காம்ப்ளெக்ஸ்" மாதிரி மனத்தில் உட்கார்ந்து கொண்டு விட்டதோ?

"உன் குடும்பத்தைப் பற்றிச் சொல், கோபி! உன் மகன், பேரன் பேத்தி எல்லோரும் வெளியே போயிருக்கிறார் களா? அவர்களைப் பார்க்க ஆசைப்பட் டேன்!"


"அது கஷ்டம், முருந்தா! அவர்கள் இருப்பது அமெரிக்காவில்!"

"என்ன? உன் மகன் உன்னோடு இல் லையா?"

"இல்லை... இங்கே இருப்பது விமலா வும் நானும்தான். ஒரு கிழவி, ஒரு கிழ வன்... இரண்டே பேர்தான்!"

கோபியின் குரலில் ஒலித்த சோர்வில் தானும் ஐக்கியமாகிப் போனார் முருந்தன். வயதான காலத்தில் பெற்றோர்கள் தனியாக இருக்கிறார்கள். ஒரே மகன் கண்காணாத இடத்தில் இருக்கிறான். ஒரு கஷ்டம், அவ சரம் என்றால் கூட விரைந்து வர முடியாத தூரத்தில்... அவருக்குத் தெரியுமே அந்த நிலை! அவருடைய நிலையும் அதுதானே!

கோபி தம் மகனைப் பற்றி விரிவாகச் சொன்னார். மருத்துவக் கல்லூரியிலேயே "ராங்க்" பெற்ற மாணவன். படிப்பு முடிந்தவுடனேயே ஒரு நல்ல பெண்ணாகப்



இவ்விரு குழந்தைகளும் ஆதரவற்ற நிலையில் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

செல்வி அம்ஜு என்று அழைக்கப்படும் குழந்தை திருவள்ளூர் இரயில் நிலையத்தில் மூன்று மாதங்கள் நிர்க்கதியாக விடப்பட்டு பின்பு சிவானந்தா ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தது.

அஞ்சலி என்று நாங்கள் பெயரிட்டு அழைக்கப்படும் மற்றொரு குழந்தை கிழக்குத் தாம்பரம் பூங்காவில் ஆதரவற்ற நிலையில் எங்களிடம் வந்து சேர்ந்து வளர்ந்து வருகிறது.

இப்படிப்பட்ட எண்ணற்ற சிறார்களுக்கு மனமகிழ்ச்சி தருவது தங்களுடைய அன்பும், ஆசியும், பொருளுதவியும்.

அவர்களுடைய தேவையான உடையும், உணவும் நாம் எவ்வளவுதான் அளித்தாலும் பெற்றோர்கள் தங்களுக்கு இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சில் இருக்கத்தான் செய்யும். அதனை போக்கத்தான் நாங்களும் அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம்.

பண்டிகைகளும், விழாக்களும் மனித வாழ்வில் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தி உற்றார் உறவினருடன் பாசத்தினை பகிர்ந்து வாழ வழிவகை செய்கிறது. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கும், நிர்க்கதியாக நிற்கும் முதியோர்களுக்கும் தாங்கள் தானே உற்றார் உறவினர்! ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி திருநாளை இச் சிறார்களுக்கு இப் பத்திரிகை மூலமாக வாசகர்களின் உதவியுடன் கொடுக்கப்படும் நிதியிலிருந்து இரண்டு ஜோடி புத்தாடைகளும், பட்டாசுகளும், இனிப்புகளும் வழங்கப்பட்டு தாழ்வு மனப்பான்மையினை போக்கி சிறப்பாக கொண்டாடுகிறோம்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் 250 ஆதரவற்ற குழந்தைகளும், மற்றும் முதியோர்களும் இந்த தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத் திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூர்ணமாக நிறைவேறும் என்பதல்லாமல் இந் நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோருக்கும் பயன் பெறும்.

பொதுமக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கு சான்றிதழ் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059. தொலைபேசி எண்கள் : 401078, 40235
என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பார்த்து மணமுடித்து வைத்தார். மேற்படிப்புக்கு அமெரிக்கா சென்றவன் சில மாதங்களில் தன் மனைவியை அழைத்துக் கொண்டான். மேற்படிப்பு முடிந்ததும் அங்கு நல்ல வேலை கிடைத்தது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாகத் தனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருப்பதாகத் தெரிவித்தான். ஒரு தடவை குடும்பத்தோடு இந்தியா வந்தான். ஒரு மாத லீவு என்றான். அதில் பதினைந்து நாட்கள் மனைவி மக்களோடு தன் பெற்றோரிடமும் பதினைந்து நாட்கள் மனைவி மக்களோடு மாமனார் வீட்டிலும் பாரபட்சமே இல்லாமல் இருந்து விட்டு அமெரிக்கா திரும்பிச் சென்றான். செல்லுமுன் தான் அங்கேயே செட்டிலாகப் போவதாகத் தெரிவித்தான்.

''இங்கே என்ன இருக்கிறது? அசுத்தம், வறுமை, வியாதி... அது குபேர பூமி... நீங்களும் இந்த ஜுஹர் காலத்து வீட்டை விற்றுத் தொலைத்து விட்டு வந்து விடுங்கள்!'' என்றான்.

சொல்லி முடித்து விட்டு கோபி மௌனமானார்.

''அவனைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. கோபி... மகன் என்பவன் முதுமையில் ஊன்றுகோல் என்பதெல்லாம் பழங்கதை...''

''ஆமாம்... ஆனால் இதில் என்ன வேடிக்கை தெரியுமா? என் சம்பந்தியும் என்னளவுதான் வருத்தப்பட்டார். அவருக்கு இரண்டு பெண்கள். மகன் இல்லை. ''பெண்ணோ பிள்ளையோ, பாசத்தைக் கொட்டி வளர்க்கிறோம். கடன் வாங்கிப் படிக்க வைக்கிறோம். ஆனால் நம்மை அநாதையாய் விட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். சுயநலம்னு வரும் போது ஆணும் பெண்ணும் சமம்!'' என்கிறார்.

''நிஜம்தான்!''

''உன் மகன் எப்படி முகுந்தா? உன்னோடுதானே இருக்கிறான்?''

தொண்டையில் சட்டென்று சிக்கிக் கொண்ட எச்சிலை விழுங்கி விட்டு அவர், ''இல்லை!'' என்றார்.

''என்ன? என் கேஸ்தானா?''

''ஏறக்குறைய அதுதான். டீடெய்ல்ஸ் கொஞ்சம் வித்தியாசம்!''

''சொல்லு!''

முகுந்தன் சொல்லலானார். அவர் மகனும் படிப்பில் புத்திசாலி. அரசாங்கப் போட்டிப் பரீட்சையில் சுலபமாகத் தேறினான். ட்ரெயினிங் சென்ற இடத்தில் தன்னோடு வேலை செய்த வேறு ஜாதிப் பெண்ணைக் காதலித்தான். ரிஜிஸ்டர் ஆபீஸில் அவளை மணம் புரிந்து கொண்டு, பின் மனைவியோடு தன் பெற்றோரைப் பார்க்க வந்தான். இத்தனை தூரம் தன்னை அவன் அந்நியப்படுத்தி விட்டானே என்று அவர் துடித்துப் போனார். அவர் மனைவி மைதிலியோ மனமுடைந்து, ''நாங்கள் உயிரோடு இருக்கிறதே உங்கள் இருவருக்கும் மறந்து போச்சா?'' என்று கேட்டாள். இதைத் தன் மீது வீசப்பட்ட பொறுக்க முடியாத அவமானமாக எடுத்துக் கொண்டாள் அவருடைய மாட்டுப் பெண். உடனேயே கோபித்துக் கொண்டு சென்று விட்டாள். ''நான் சந்தோஷமாக இருந்தால் உங்களுக்குக் கசக்கிறதா?'' என்று கேட்டு விட்டு அவள் பின்னாலேயே சென்று விட்டான் மகன்.

''இப்போது அவன் எங்கே இருக்கிறான்?'

''மாமனார் வீட்டில் சந்தோஷமாக இருக்கிறான். ஒரு மகன், ஒரு மகள்... எங்களை வந்து பார்ப்பதில்லை... ஆனால் சிநேகிதர்களுக்கு அனுப்புவதைப் போல் வருஷா வருஷம் தீபாவளி வாழ்த்து அனுப்புகிறான். கூடவே தன் குடும்பக் கலர் ஃபோட்டோ!''


''எங்கள் கேஸை விட இது இன்னும் கொடுமை, முகுந்தா!''

''ஆமாம்... ஆனால் இரண்டு கேஸிலும் முடிவு என்னவோ ஒன்றுதான். குழந்தை இருந்தும் இல்லாததற்குச் சமம். சாதாரண நாட்களில் நாங்கள் இதைப் பொருட்படுத்தறதில்லை. ஆனால் மைதிலிக்கோ எனக்கோ உடம்புக்கு வந்து உதவி தேவைப்படும்போதுதான், எப்படி அனாதைகளாய்ப் போய் விட்டோம்! என்று மனம் புலம்பிப் புலம்பி துடிக்கிறது!''

உங்கள் வீட்டில் பச்சடி செய்து பரிமாறுவதற்கு முன்பு அதில் பொரித்த (எண்ணெய் விடாமல்) ஜவ்வரிசியைப் போட்டுப் பரிமாறிப் பாருங்கள். உங்களை அனைவரும் பாராட்டும்படியாக இருக்கும் அந்தப் பச்சடி. இந்தப் பொரித்த ஜவ்வரிசியில் சிறிது உப்பும், காரமும் சேர்த்துச் சாப்பிட்டாலும் மிகவும் நன்றாக இருக்கும்.

- ஜெயந்தி





மகளிர் விடுதலையைப் பற்றிய விவாதங்கள் தொடர்ந்து நீடிக்கலாம். ஆனால் ஒனிடா தொழில்நுட்பத்தின் வாயிலாக ஒரு முடிவான கூற்று வெளிப்படுகிறது. புதிய ஒனிடா வாஷிங் மெஷினின் மறுக்க இயலாத சக்தி. அதன் தனிச்சிறப்பான 4 – வழி நீரோட்டம் மேம்படுத்தப்பட்ட சலவையை வழங்குகிறது. மென்மை முதல் கடினமான பலவகை துணிகள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் தனிப்பட்ட சலவை முறையின் அணிவரிசை. முன் ஆலோசனையுடன் பொருத்தப்பட்ட பல் வேறு புதிய வசதிகள் உங்களை கடும் உழைப்பிலிருந்து விடுதலை அளித்து மகளிர் விடுதலையைக் கொண்டாடச் செய்கிறது.

இறுதியில் தருணம் வந்து விட்டது மகளிர் விநதலையைக்

கொண்டாட.



வாஷிங் மெஷின்



இப்படிச் செய்யலாமே!

ரேடியோவில் (டிரான்சிஸ்டர் பாக்கெட் ரேடியோ) அல்லது டார்ச் லைட்டில் பாட்டரி மாற்றும் போது புது பாட்டரியின் மேல் ஊசியால் அல்லது சேஃப்டி பின்னால் வாங்கிய தேதியைக் கிறுக்கி வைத்தால் (அழகாகத்தான் எழுத முயற்சி செய்யுங்களேன்) சிறிது காலம் கழித்து பாட்டரியின் ஆயுட் காலத்தை எளிதாகக் கவனிப்பதோடல்லாமல் பாட்டரி வைத்த பொருளின் சேதத்தையும் எளிதில் தவிர்க்கலாம்.

– லந்யா ஸ்ரீதரன்

கடிகாரம் நாலடித்த போது தான் கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்தார் முகுந்தன்... ''நேரம் போனதே தெரியலே கோபி... நான் கிளம்பறேன்!'' என்று எழுந்தார்.

அப்போது தோட்டத்துக் ''க்ரில்'' கதவு ''கிளிங்'' என்ற ஒலியோடு திறந்தது. ஒரு தம்பதியர் ஹாலுக்குள் நுழைந்தனர். அவர்களைக் கண்டதுமே கோபியின் முகம் மலர்ந்தது. ''வாருங்கள், வாருங்கள்!'' என்று அவர்களை வரவேற்றவர், முகுந்தனிடம் ''என் சம்பந்தி!'' என்று அறிமுகப்படுத்தினார்... பின், சம்பந்தியிடம் ''இவர் முகுந்தன்... ஸ்கூலில், காலேஜில், இப்போதும் என் நல்ல நண்பர்!'' என்றார்.

வந்தவர் சிநேகத்தோடு முறுவலித்தார். ''ரொம்ப சந்தோஷம். கோபிநாத் சாரின் நண்பர் என்றால் எனக்கும் நண்பர்தானே!'' என்றவர், தம் பையிலிருந்து ஒரு திருமண அழைப்பை எடுத்து, கவரின் மேல், ''மிஸ்டர் அண்ட் மிஸஸ் முகுந்தன்'' என்று எழுதி, அவரிடம் கொடுத்தார். ''என் இளைய மகளுக்குக் கல்யாணம். இங்கே பக்கத்தில் தான்... நீங்களும் மாமியும் அவசியம் வரணும்!'' என்றார்.

''வருகிறோம்!'' என்றார் முகுந்தன்.

''இதில் ஆரம்பிக்கும் நம் நட்பு தொடர்ந்து நிலைக்கணும் முகுந்தன் சார். என் பெரிய பெண் அமெரிக்காவில் இருக்கிறாள். சின்னவள் கானடாவில் செட்டிலாக ஆசைப்படலாம்... குழந்தைகள் பெற்றவர்களை விட்டு விட்டுப் போய் விடும் இந்த நாளில் ஊன்றுகோலாக இருப்பது நண்பர்கள்தானே!''

''நிஜம்தான்... ஒரு பெரிய உண்மையைச் சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்! சரி, நான் வரட்டுமா?'' அவரிடமும் கோபியிடமும் விடைபெற்றுக் கொண்டார் முகுந்தன்.

கேட்டைக் கடந்து தெருவில் அடி வைத்த போது கோபியின் வீட்டிலிருந்து உற்சாகமான பேச்சுக் குரல்கள் ஒலிப்பதைக் கேட்டார்... சம்பந்தி ஜோடியின் சௌஜன்யமான சம்பாஷணை.

இவர்கள் நல்ல நண்பர்கள்... சம்பந்தி உறவின் அடிப்படையே நட்புத்தான். ''என் மகனும் உன் மகளும் தம்பதிகள். அதனால் உன் நலனில் எனக்கும் என் நலனில் உனக்கும் அக்கறை இருக்கிறது!'' என்ற நம்பிக்கை... கோபியின் மகள் தன் பெற்றோருடன் இல்லாவிட்டால் என்ன? சம்பந்திகள் நண்பர்களாக அருகிலேயே இருக்கிறார்கள்...

காதல் கல்யாணம் புரிந்து கொண்டு, அதனால் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் பெற்றோர்களைப் பிரிந்து செல்லும் குழந்தைகள், அவர்களுக்கு ஆதரவாக இருப்பதில்லை என்பதுடன், நுட்பமான மற்றொரு விதத்திலும் அவர்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய நல்ல நண்பர்களையும் பறித்து விடுகிறார்கள். தம் சம்பந்திகளை எப்போதாவது அவர் ''நண்பர்கள்'' என்று கருத முடியுமா? அவருடைய மாட்டுப் பெண்ணுக்கும் ஒரு தங்கை இருக்கிறாள். அவளுக்குக் கல்யாணமாகியிருக்கலாம். ஆனால் அவருக்குத் தெரியப் போவதில்லை. அவருக்கு யாரும் தெரிவிக்கப் போவதில்லை. அவருக்கும் அவருடைய சம்பந்திக்குமிடையே எந்தவித உறவோ நட்போ இல்லை... ஒருவருக்கொருவர் அந்நியர்கள். முழு அந்நியர்கள்.

ஒருகணம் அவருக்கு வாய் விட்டுக் கதற வேண்டும் போல் இருந்தது. 'என் மகனே! உன் இளமையின் ஆதரவை எங்கள் முதுமைக்குத் தரத்தான் மறுத்து விட்டாய்... எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய சம வயது நண்பர்களைக் கூடப் பறித்து விட்டாயே! இது எத்தகைய கொடுமை என்று உனக்கும் உன் போன்றவர்களுக்கும் எங்கே புரியப் போகிறது?'

சட்டென்று அவர் மைதிலியை நினைத்துக் கொண்டார். அவருடைய வாழ்க்கைத் துணைவி... நல்ல சிநேகிதை. கணப்பொழுதில் மனத்திலிருந்த சோர்வு கழன்று விழுவதை உணர்ந்தார். அவள் இருக்க, வாழ்வில் என்ன குறை? அவளிடம் கோபியைப் பற்றிச் சொல்ல வேண்டும்... கோபியின் சம்பந்தி வீட்டுக் கல்யாணத்துக்கு அவளுடன் செல்ல வேண்டும். தம் நண்பர்களின் வட்டத்தை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இன்று கற்ற பாடம் இது.

புது உற்சாகத்தோடு வீட்டுக்கு விரைந்தார் முகுந்தன்.


அந்த நாட்களின் தொல்லை அறவே உங்களுக்கு இல்லை



பட்டிலும் மெல்லிய முதன்மையாக
விஸ்கோஸ் இழைகள் முழுமையான சுகம்
உயர்ரகப் பருத்தியை அடுக்காக,
அமைந்த நிலை அதிகமாக உறிஞ்சும்
உறிஞ்சும் தன்மையற்ற நீலநிற
பருத்தி இழைகளினால் மூடிய
அடிப்பாகம் உள்ளாடைகள்
கறைபடாமல் பாதுகாக்கும்
நமது சிதோஷ்ண நிலைக்குத்
தகுந்தாற்போல் அமைந்திருப்பதால்
100% திருப்தியை
அளிக்கிறது.

NEW helena

ஹெலனா உங்களின் துணை!
இல்லை இதற்கு இணை!



சர்காட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்
மில்: சூரியநாராயணபுரம், ரேணிகுண்டா (A.P.)
தலைமை அலுவலகம்: 23, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 007. போன்: **6421982/6422004**

Carrying a helena is carrying confidence

ADSERVE

கலையுலக

பொதுவாக, சமூகப் படங்களில் ரொம்ப ரொம்ப சாதாரணமாக நடித்தும் சமாளித்து விடலாம். ஏனெனில் அவையெல்லாம் மனித குணத்தைச் சித்திரிக்கும் கதாபாத்திரங்கள். ஆனால் ஒரு தெய்வீக பாத்திரத்தை ஏற்று நடிப்பதென்பது சாமான்ய விஷயமல்ல. கொடுத்த செந்தமிழ் வசனத்தை அட்சர சுத்தமாகக் கம்பீரத்வனியில் பேசி முகத்தில் எந்தவொரு வேண்டாத அசைவும் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டு, ரசிகர்களின் தெய்வீகக் கற்பனைக்கு உருக் கொடுத்து நடிப்பதென்றால் சும்மாவா? இன்றைக்குத் தமிழ் திரையுலகத்திலே ஏன் தெலுங்கு மலையாள படங்களிலேயும் சரி சக்தி வேஷமா அல்லது அம்மன் பாத்திரமா கே. ஆர். விஜயா செய்தாத்தான் எடுபடும் என்று அடித்துக் கூறுகிற அளவிற்கு, தெய்வீக நடிப்பிற்கு ஒரு இலக்கணம் வகுத்தவர் திருமதி கே. ஆர். விஜயா. நவராத்திரி நேரத்தில் அவரைச் சந்தித்த போது –



"இப்பவெல்லாம் பேட்டின்னாலே ஒத்துக்கிறதில்லீங்க. ஏன்னா ஒரே விஷயத்தை திருப்பித் திருப்பிச் சொன்னா படிக்கிறவங்களுக்கு போரடிக்குமே. ஆனா டெவி போன்லே நீங்க பேசும் போது, "அம்மனாக நடிக்கும் உங்கள் அனுபவங்களைப் பற்றிக் கூறுங்கள்" என்று சொன்னவுடனே கொஞ்சம் வித்தியாசமாயிருக்குமென்று ஒப்புக் கொண்டேன்" என்று சொல்லி தன் வரிசையான பற்கள் தெரியச் சிரித்தார்.

கேள்வி : "முதன் முதலா நீங்க கடவுள் பாத்திரம் ஏற்று நடிச்ச படம் நம்ம வீட்டு தெய்வம் இல்லியா. அவ்வளவு இயற்கையா அதுல எப்படி நடிச்சீங்க?"

பதில் : "நடிப்பு இயற்கையாயிருப்பது கடவுளின் அருள்தான் என்று கூறுவேன். இன்றைக்கும்

அம்மன்...


'நீங்கள் நம்ம வீட்டு தெய்வத்தில்' வரும் என் நடிப்பை ஞாபகம் வச்சிருக்கீங்கன்னா அதற்கு என் சக நடிகர்களின் ஒத்துழைப்பு தான் காரணம். திரு முத்துராமன், பாலையா, நாகேஷ் எல்லோருமே அந்தந்த கேரக்டராகவே மாறி நடிச்சது அந்தப் படத்தின் வெற்றிக்கு ஒரு காரணம்.

மலையாளத்திலே "பழையனூர் நீலி"ன்னு வேலுமணி எடுத்த படத்தின் 'ரீமேக்' தான் நம்ம வீட்டுத் தெய்வம். ஆனால் அதுலே கதாநாயகனை ஒரு பேய் பழி வாங்கறா மாதிரி எடுத்திருந்தாங்க. ஆனால் அது தமிழ்ப் படத்திற்கு ஒத்து வராதுங்கிற அபிப்ராயத்திலே திரு லக்ஷ்மணன், வேலுமணி போன்றவர்களெல்லாம் விவாதித்து இறுதியில் பழிவாங்கும் தெய்வமாக என்னுடைய கதாபாத்திரம் தமிழில் உருவானது. "முதலில் என்னால் முடியுமா?" என்ற சந்தேகத்தில் இருமனமாக இருந்த என்னை டைரக்டர் வேலுமணி சார்தான் ஊக்கம் கொடுத்து நடிக்க வைத்தார்.

கேள்வி : "அதிகமான புராணப் படங்களில் நடித்த நடிகை நீங்க ஒருவராகத் தான் இருப்பீங்கன்னு நினைக்கிறோம். சமூகப் படங்களை விட புராணப் படங்களில் நடிப்பதென்பது சற்றுச் சிரமமான காரியம்தானே?"

பதில் : "தொழில்னு வந்திட்டா அதிலே எந்த வேஷமாய் இருந்தால் என்ன? கதையும், அதிலே நாம நடிக்கிற கதாபாத்திரம் நல்லதா, ஆழமானதாய் இருந்தால் ஒத்துக் கொண்டு விடுவேன். புராணப் படங்களில் பெரிய பெரிய கிரீடம், நகைகள் பளபளன்னு புடைவை, ஆயிரத்தெட்டு பின் கிளிப்பு இவைகளோடு நடிப்பதென்றால் கஷ்டம்தான். அதுவும் வெயில் காலத்திலே அவுட்டோர் என்றால் கேட்கவே வேண்டாம். படப்பிடிப்பு முடிந்து பிறகு நகைகளை கழட்டி வைக்கும் போதுதான் ஆங்காங்கே உடம்பில் திட்டுத் திட்டாக கரி, இரத்தம் தோய்ந்திருப்பது தெரியும். ஆனால் "அம்மா, கோவிலுக்குப் போனா உங்க ஞாபகம்தான் வருது" என்று பாமர ஜனங்கள் சொல்லும்





கடலை மாவு லட்டு

தேவையான பொருட்கள் :
கடலை மாவு - 1 கிலோ,
நெய் - 750 கிராம்,
பொடித்த சர்க்கரை - 750 கிராம்
காய்ந்த திராட்சை - 4 டேபிள் ஸ்பூன்,
வெள்ளரி விதை 2 ஸ்பூன்,

செய்முறை :

கடலை மாவை நன்றாகச் சலித்து வைத்துக் கொள்ளவும். வாய் அகலமான பாத்திரத்தில் நெய் ஊற்றி அடுப்பில் வைத்து திராட்சை, வெள்ளரி விதை சிறிதளவு நெய்யில் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

அடுப்பிலிருந்து நெய் காய்ந்த பின்பு கடலை மாவைச் சிறிது சிறிதாகத் தூவி கட்டி தட்டாமல் கிளறவும். கடலை மாவு நன்கு வெந்து நல்ல மணத்துடன் வரும்போது அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.

பொடித்த சர்க்கரை, வறுத்த திராட்சை, வெள்ளரி விதை ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கட்டியில்லாமல் கிளறிக் கொண்டு கலவை ஓரளவு சூடாக இருக்கும் சமயத்தில் லட்டுகளாகப் பிடிக்கவும்.

இந்தக் கடலை மாவு லட்டை வாரக் கணக்கில் வைத்திருக்கலாம். செய்வதும் சுலபமானது.

— மைதிலி கண்ணன்

போது, நான் பட்ட அத்தனை சிரமமும் மறந்து விடுவேன்.''

கேள்வி : ''புராணப் படங்களில் பாத்திரமேற்று நடிக்கும் போது நீங்கள் சில விஷயங்களை கடைபிடிக்கிறதா கேள்விப் பட்டிருக்கோம்?''

பதில் : ''மனதை அமைதியா வைச்சிட்டு, டென்ஷன் இல்லாம முன்னேற்பாடா இருக்கணும் அப்படிங்கிறதெல்லாம் என்னைப் பொறுத்தவரை கிடையாது. டைரக்டர் சொல்லிக் கொடுக்கிறதை ஒரு முறை மனத்திற்குள்ளே எனக்குத் தகுந்த வாறு நடித்துப் பார்த்துக் கொண்டு விடுவேன். ஆனால் தாய் மூகாம்பிகை இன்னும் சில அம்மன் படங்களிலெல்லாம் அந்தந்த க்ஷேத்திரத்தில் உள்ள கோவில் கர்பகிருஹத்திலேயிருந்தே நான் வெளியே வருவதைப் போல படப்பிடிப்பு நடந்தது. அன்றைக்கெல்லாம் நான் மாமிசம் உணவினைத் தவிர்த்து விடுவேன். நான்-வெஜ் சாப்பிட்டு விட்டு அம்பாளாக, அபிராமியாக நடிப்பது ஒத்து வராது. நடிப்பில் ஒரு தத்ரூபம் இருக்காது என்கிற மாதிரி ஒரு உணர்வு எனக்குள் உண்டு.

கேள்வி : ''படங்களில் உங்களுடைய நடிப்பினைப் பற்றி வீட்டினர் விமர்சனம் செய்வதுண்டா?''

பதில் : ''எந்த விஷயமென்றாலும் அதை நான் என் கணவருடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். நான் நடித்த எல்லாப் படங்களையும் என் கணவர் பார்த்து விடுவார். குறையிருந்தால் வெளிப்படையாக விமர்சிப்பார். மாறாக என் நடிப்பு நன்றாக இருந்தால் வாய் திறந்து பாராட்ட மாட்டாரே தவிர மனத்திற்குள்ளேயே பாராட்டுவதை அவர் முகம் காட்டிக் கொடுத்து விடும். ஆனால் என் பெண் ஹேமாவிற்கு இந்தப் பழிவாங்கும் பயங்கர கேரக்டர் எல்லாம் பிடிக்காது. 'காமெடி' ஆக இருந்தால் மட்டுமே பார்ப்பாள்.

கல்யாணம் ஆனவுடனேயே கணவரின் அனுமதியுடன் மீண்டும் சினிமாவிற்கு வந்து நடிக்கும் நடிகை நானொருத்தியாகத்தான் இருப்பேன்னு நினைக்கிறேன். அது மட்டுமல்ல. ஒரு அலுவலக வேலை மாதிரி இந்தத் தொழிலையும் மாற்றி மாதந் தோறும் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் லீவு எடுத்துக் கொள்ள ஆரம்பித்ததும் நான் தான்.''

கேள்வி : 'நம்ம வீட்டுத் தெய்வம்' படத்திலேர்ந்து இன்றைக்கு 'வரம் தரும் வடிவேலன்' வரை உங்களது புராணக் கதா பாத்திர நடிப்பில் எத்தகைய வளர்ச்சியை நீங்கள் உணருகிறீர்கள்? புராணப் பட டைரக்டர்களிலே யாரிடம் நடிக்க பெரு வாங்கறது கடினம்?''

பதில் : ''நான் பொதுவாக டைரக்டர் சொல்றதை அப்படியே செய்யறதுதான் வழக்கம். ஆனால் இதுவரை நிறையப் புராணப் பாத்திரங்கள் பண்ணினதாலேயோ, என்னவோ இப்போ இருக்கறதிலே ஏதாவது மாற்றம் செஞ்சா நல்லாயிருக்கும்னு தோன்றினால் பட டைரக்டர்களிடம் சொல்வதுண்டு.

பொதுவா புராணப் படமென்றாலே ஏ.பி. நாகராஜன் சாரைத்தான் எல்லாருக்கும் ஞாபகம் வரும். சரஸ்வதி சபதத்திற்காக அவர் கீழ் நடிச்ச பொழுது திரு சிவாஜி, பப்பிமா, தேவிகா அக்கா என சக நடிகர்கள். நான் புதுமுகமாக இருந்தாலும் திரு ஏ.பி.என். சார் உறுதுணையால் நானும் அவர்களுடன் நடிப்பில் போட்டி போட்டுக் கொண்டு நடிக்க முடிந்தது. அது மட்டுமல்ல. ஏ. பி. என். முக்கிய கேரக்

டர்லேர்ந்து தோழி கேரக்டர் வரைக்கும் யார் யார் எப்படி நடிக்க வேண்டும் என்று ஒரு சின்ன அசைவு முதற்கொண்டு சொல்லித் தருவார். கந்தன் கருணை படத்தில் மனோரமா இக்கித் இக்கிப் பேசுவாரே அது கூட அவரோட ஐடியாதான்.''

கேள்வி : ''உங்களுடைய கடவுள் பாத்திர நடிப்பிற்கு யாரையாவது முன்னோடியாகக் கருதுகிறீர்களா? இம் மாதிரி நடிப்பில் தற்போதைய நடிகைகளில் உங்களைக் கவர்ந்தவர் யார்?''

பதில் : ''சந்தேகமில்லாமல் சிவாஜி சாரையும், பப்பி அம்மாவையும்தான் நான் உதாரணமாகக் கருதுகிறேன். சகோதரி ஸ்ரீவித்யாவின் நடிப்பு எனக்கு மிகவும் பிடிக்கும்.''

கேள்வி : ''உங்க இஷ்ட தெய்வம் அம்மன்தானே? அம்மன் கோவிலைக் கூட நீங்கள் கட்டியதாக ஒரு பத்திரிகையில் வந்திருந்தது?''

பதில் : ''அம்மன், முருகன் இரண்டுமே என்னுடைய இஷ்டதெய்வங்கள்தான். போடி, மூணாறு போகிற வழியில் அதாவது தமிழ் நாடு, கேரளா எல்லையில் எங்களுக்குச் சொந்தமான இடத்தில் நிலம் வாங்கிய போது இருந்த விக்ரகங்களுக்குக் கோவில் எழுப்பி எல்லா வேளையிலும் வழிபாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். அந்த நிலம் ஏதோ ('அழகர் ராஜா' என்ற பெயருடைய) ராஜ பரம்பரை சொத்தாம். நாங்கள் சென்றிருந்த சமயம் விக்ரஹங்களின் மேல் பாம்பு படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. எனக்குத் தெரிந்து விசுவாமித்ரர் விக்ரகம் அந்த இடத்தைத் தவிர வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

மற்றொன்று 2000 வருடங்கள் கழிந்த புராதன கோயிலான ஸ்ரீ வளையநாடு க்ஷேத்திரத்திற்குக் கும்பாபிஷேகம் செய்தது. இந்த இடம் காலிகட்டில் உள்ளது. நாங்கள் அந்தப் புண்ணிய காரியத்தில் ஈடுபடக் கூடாது என்று ஒருவர் மிகுந்த தொல்லைகள் கொடுத்தார். இறுதியில் சொர்ண பிரச்சனப்படி (கோயில் ஆருடம்) நாங்கள்தான் அதற்குத் தகுதியானவர்கள் என்று தெய்வமே முடிவு பண்ணி விட்டதாக வந்தவர்கள் கூறி முறையிடவே மகிழ்ச்சியுடன் அந்தக் காரியத்தை செவ்வனே செய்தோம்.''

கேள்வி : ''உங்களுடைய மறக்க முடியாத அனுபவங்கள் இம்மாதிரி நடிப்பைப் பொறுத்தவரை?''


பதில் : ''நான் நடித்த எல்லாப் புராண பாத்திரங்களும் என்னால் மறக்க முடியாதவைதான். கல்கத்தா காளியிலிருந்து கீழே தக்ஷிண பாரதத்திலுள்ள அத்தனை அம்மன் க்ஷேத்திரங்களுக்கும் சென்று நடித்த நடிகை என்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இருந்தும் தாய் மூகாம்பிகை படப்பிடிப்பு அனுபவம் மறக்கவே முடியாது. ஒரு படஷூட்டிங்கிற்குச் சென்றிருக்கிறோம் என்கிற உணர்வே இல்லாது நான், கருமாரி, சுஜாதா, சரிதா என்று எல்லோரும் அதிகாலையிலேயே எழுந்து குளத்தில் நெடு நேரம் குளித்து விட்டு ஈரத் துணியோடு கோவிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் படப்பிடிப்பில் கலந்து கொள்வோம். அதே போல் மாலை எப்போ டைரக்டர் 'பேக்-அப்' சொல்வார் என்று காத்திருந்து மீண்டும் பழையபடியே குளத்திற்குச் சென்று விடுவோம். அந்த அமைதியான சூழ்நிலை மனத்திற்கு மிகவும் பிடித்திருந்தது.''

இன்றைக்கு நெம்பர் 1 கதாநாயகி இவர்தான் என்று முதல் நாள் பேரெடுக்கின்ற நடிகைகளெல்லாம் மறுநாளே பழம் பெரும் நடிகைகளின் லிஸ்டில் சேர்ந்து விடும் சினிமா உலகத்தில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே சீராக தன் கலையுலக வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் கலையுலக அம்மனிடமிருந்து, சாரி, கே. ஆர். விஜயாவிடமிருந்து விடைபெற்றோம்.

பேட்டி : கீதா மோஹன்

மொசைக் தரைகளில் ஏன், சாதாரண வழவழப்பான தரைகளில் சிறிய ஸ்க்ரூ, ஊசி, குண்டூசி மற்றும் சிறு முக்கிய சாமான்கள் விழுந்துவிட்டால் மற்றவர்களைத் திட்டாமல் கண்டுபிடிப்பது என்பது சுலபமல்ல. தொலைத்த நபர் தரையில் நன்றாகப் படுத்துக் கொண்டு கண்களால் சமதரையைப் பார்க்கும் போது அப்பொருளின் கனபரிமாணம் நன்கு புலப்படும். உடனே கண்டுபிடித்து விடலாம்.

- ஸத்யா ஸ்ரீதரன்






திருச்சியில்
மகளிர் விழா

மங்கையர் மலர் வெல்வெட் - கங்கா ஸ்நான் இணைந்து நடத்திய மகளிர் விழா

நமக்கு மிகவும் தெரிந்த ஊர், தெரிந்த மனிதர்கள் வீட்டுக்குப் போவதென்றால் எவ்வளவு சந்தோஷமாக, சகஜமாக பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்? அப்படித்தான் இருந்தது 'திருச்சியில் மகளிர் விழா' என்று தீர்மானித்தவுடன்.

திருச்சியில் மங்கையர் மலர் வாசகிகள் அனைவரையும் தெரியும். ஏற்கெனவே பழகியவர்கள். அப்புறம் கேட்பானேன்? மங்கையர் மலரில் திருச்சியில் மகளிர் விழா நடத்தப் போகிறோம் என்று அறிவித்தவுடன் வரவேற்றுக் கடிதங்கள் குவிந்து விட்டன. நாடகப் போட்டிக்குக் கொஞ்சம் தயங்கித் தயங்கிக் கடிதங்கள்.





✱ சந்திரா

திருச்சியின் கல்கி, மங்கையர் மலர் ஏஜெண்ட் திரு. ஆறுமுகம் இதைப் பற்றிச் சொல்லும் போது குறிப்பிட்டார், "இங்கே நாடகப் போட்டி என்பது கொஞ்சம் புதுசான விஷயம்தான். ரெகுலர் நாடகங்களே வருடத்திற்கு ஒரு தடவை நடந்தால் பெரிசு. அதனால் நீங்கள் மெட்றாசில் நடத்தும் அளவு இங்கே எதிர்பார்த்தால் கஷ்டம்தான்" என்று.

கொஞ்சம் யோசனைதான். மகளிர் விழாவிற்கு முன்னரே நம் அலுவலகத்திலிருந்து சென்ற ஜகதீசன், லக்ஷ்மி நாராயணன் அனைவரும் ஆறுமுகத்துடன் பாடுபட்டு இருக்கிறார்கள். அங்கே காலையில் போய் இறங்கினால், "நேத்து பகலிலிருந்தே விசாரித்துக் கொண்டே இருக்கிறார்கள். இருக்கிற நிலைமையைப் பார்த்தால் இடம் போதுமா என்று தெரியவில்லை" என்றார்கள்.



✱ சி.கே. ராஜ்குமார்...

✱ ஆறுமுகம்......





✱ தனலட்சுமி, வசந்தகுமாரி

எதை விடுவது, எடுப்பது?

காலை எட்டரை மணியில் இருந்து மாறுவேடப் போட்டிக்கான பதிவு ஆரம்பித்தது. பதிய ஆரம்பித்த பானுமதி ராமச்சந்திரன் அலற ஆரம்பித்து விட்டார், "இப்படி எம்மேலே வந்து குவிஞ்சுக்கிட்டா நான் எப்படி எழுதறது? வரிசையா நில்லுங்க, ஒழுங்கா நில்லுங்க..."

ம்ஹூம்... ஒன்றும் பலனில்லை. முக்கால் மணி நேரத்தில் விண்ணப்பங்கள் நூறைத் தாண்டி விட்டன. நாம் என்ன செய்யப் போகிறோம் என்று விழி பிதுங்க ஆரம்பித்து விட்டது. இத்தனை குழந்தைகளையும் இரண்டு மணி நேரத்தில் மேடையேற்றி இறக்க முடியுமா என்று புரியவில்லை. நூறோடு நிறுத்திக் கொள்ளலாம் என்றால், "அதெப்படி? நீங்க பதினோரு மணி வரை பதிவு செய்து கொள்ளலாம் என்று எழுதியிருக்கீங்களே?" என்றுடனும், கண்ணில் கெஞ்சல் பார்வையுடனும் நின்று கொண்டிருந்தார்கள்.

விழா ஆரம்பித்தது. மாறுவேடப் போட்டிக்கு நடுவர்களாக திருச்சி வானொலி நிலைய துணை நிலைய இயக்குநர் தனலட்சுமியும், காவேரி கல்லூரியின் முதல்வர் ஏ.பி. வசந்தகுமாரியும் வந்திருந்தார்கள். இரண்டு பேரும் இரண்டு மணி வரைதான் இருப்போம், அப்புறம் வேலை இருக்கிறது என்று கண்டிப்பாய்ச் சொல்லியிருந்தார்கள். நாங்கள் விழி பிதுங்குவதைப் பார்த்து அவர்களே பிறகு பரிதாபப்பட்டார்கள்.

கோலாகலமாக மாறுவேடப் போட்டி ஆரம்பித்தது. அடேங்கப்பா, இந்தப் பிஞ்சுகளுக்குத்தான் எத்தனை திறமைகள். பாரதியாரும், வீரபாண்டிய கட்டபொம்மனும், ஔவையாரும், எம்.ஜி.ஆரும், ஜெயலலி

* நாடகப் போட்டி



* மாறுவேடப் போட்டியில்....



வாதிட ஆரம்பித்தார்கள்.


"நாங்க என்ன செய்யறது? இவ்வளவு பெரிய அளவில் வரவேற்பு இருக்கும் என்று நினைக்கலையே? ஒரு குழந்தைக்கு இரண்டு நிமிடம்னா கூட நேரம் எங்கேயோ போகும். அப்புறம் வரிசையா மற்றப் போட்டியெல்லாம் இருக்கே" என எத் தனை சொன்னாலும் மசியவில்லை.

"நாங்க கொழந்தைகளை டிரெஸ் பண்ணி கூட்டிட்டு வந்துட்டோம். எப்படியாச்சும் நீங்க அனுமதியுங்க, தயவு செஞ்சு..." என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டார்கள். இதற்கிடையில் பதிவு நூற்றியைம்பதைத் தாண்டி விட்டது. கடவுளின் மேல் பாரத்தைப் போடுவது என முடிவெடுத்தோம். அப்பவும் பலரும் கையில் சீட்டு

தாவும் உலா வந்தார்கள். 'பளிச்' 'பளிச்' சென்று முகபாவம் மாற்றி என்ன வசனங்கள்...

கூட்டமோ ஹால் கொள்ளவில்லை. நிரம்பி வழிந்தது. எல்லோரும் ஆர்வமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் எத்தனை குழந்தைகள் மாறுவேடப் போட்டியில் கலந்து கொண்டார்கள், தெரியுமா? நூற்றியெண்பது பேர்! நல்ல காலமாக, அரைமணி நேரம் கூட எடுத்துக் கொண்டு இரண்டரைக்கெல்லாம் முடித்து விட்டது. நாங்க ளெல்லோரும் நிம் மதிப் பெருமூச்சு விட்டோம்.

ஆர்வத்தோடு எங்களுக்கு உதவ வந்திருந்த திருச்சி வாசகி திருமதி சந்திரா கிருஷ்ணன் 'கிடுகிடு'வென இரண்டு நீதிபதிகளின் மதிப்பெண்களையும் கூட்டிப்


VIP
Feelings



* நாடகப் போட்டியில் பரிசு



* கலெக்டர் தம்பதியர்

* அருணா ஜகதீசன்

போட்டு கொண்டு வந்து விட்டார். அழகாக போட்டி நிறைவடைந்தது.

இரண்டரை மணிக்கு மகளிருக்கான வினாடி வினா நிகழ்ச்சி. அப்போது அந்த ஹாலில் விழா ஏற்பாட்டினைச் சார்ந்த நான்கைந்து ஆண்கள் தவிர மற்றபடி முழுக்க பெண்கள் கூட்டம்தான். இருபத்தைந்து கேள்விகளுக்கும் 'கிடு கிடு'வென பதில் எழுதினார்கள். நடுவில் சில பேர் கேள்வி புரியவில்லை என சத்தம் போட்டார்கள். ஜாலியாக அந்தப் போட்டி முடிவடைந்தது.



* மாறுவேடப் போட்டியில் பரிசு

அடுத்ததாக நாடகப் போட்டி. ஏற்கெனவே ஆறுமுகம் பயமுறுத்தி வைத்திருந்தார், திருச்சி யிலே அவ்வளவு தூரம் நாடகம் பற்றிச் சொல்ல முடியாது என்று. அதற்கேற்றாற் போல இரண்டு ஐம்பதிலிருந்து 'மைக்'கில் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறோம், ஒருத்தராவது வரணுமே. மூன்று மணிக்கு முதல் மகளிர் மன்றம் வரக் காணோம். இரண்டாவது மகளிர் மன்றம் ரெடியாகவில்லை. இது ஏதடா என எரிச்சலாக வந்தது. ஒரு வழியாக மூன்றே காலுக்கு வந்தார்கள். வந்தார்களா, அடேங்கப்பா வெளுத்து வாங்கி விட்டார்கள். பிரமிப்பில் ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

பத்து மகளிர் மன்றங்கள் போட்டியில் கலந்து கொண்டன. ஒருத்தருக்காவது வசனம் திக்கியது, தமாராக நடித்தார்கள் என்று இருக்க வேண்டுமே! ம்ஹூம்... சாதாரணமாகச் சொல்லுவார்கள் 'எதைத் தேர்ந்தெடுப்பது என்றே தெரியவில்லை' என. உண்மையாகவே நடுவர்களாக இருந்த எனக்கும், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் உஷா ராணி கிருஷ்ணனுக்கும் எந்த நாடகம் சிறந்தது என்று தேர்ந்தெடுக்க முடியவில்லை. திணறிப் போய் விட்டோம். பெண்கள் பிரச்னையை மையமாக வைக்க வேண்டும் என்று எழுதியிருந்தோம். அதிலே எப்போதும் போல வரதட்சணை, மாமியார் கொடுமை என்றில்லாமல் நுணுக்கமாகப் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து இருந்தார்கள். பெண் கல்வி, வேலைக்குப் போகும், போகாத பெண்ணின் மன சஞ்சலங்கள், பெண்ணை பெண்ணே தூற்றும் கொடுமை, ஆண் பெண்ணை சல்லிசாக நினைப்பது என வெகு நுணுக்கமாக உணர்வுகளை வெளிப்படுத்தி



* வினாடி வினா போட்டியில் பரிசு பெற்றவர்கள்......





னார்கள். ஒரு வழியாகக் கூட்டிக் கழித்து நாங் களும் தீர்ப்பு சொன்னோம்.

அடுத்ததாகக் கோலாகலமான பரிசளிப்பு விழா. காலை பத்து மணிக்கே வந்த கூட்டம் ஆர்வத்தோடு உட்கார்ந்து இருந்தார்கள். வெல்வெட் ஷாம்பு நிர்வாக இயக்குநர் சி.கே. ராஜ்குமார் விழாவிற்கு முன்னதாகவே வந்து விட்டார். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. இராசேந்திரன் தன் துணைவியார் இராசாத்தியுடன் வந்தார். மாவட்ட முதன்மை சார்பு நீதிபதி அருணா ஜகதீசன் தன் கணவருடன் உள்ளே வந்த போது கை தட்டல். அருமையாக விழா தொடங்கியது.

மாறுவேடப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தைகள் தவிர, அத்தனை குழந்தைகளுக்கும் சந்தோஷமாக சான்றிதழ்களை கலெக்டர் தம்பதியினர் வழங்கினர். பிறகு ஆரோக்கியப் போட்டியில் பரிசு பெற்ற பெண்மணிகளுக்கும் பரிசுகளை வழங்கினார். நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு நீதிபதி அருணா ஜகதீசன் பரிசுகளை வழங்கினார். விழாவின் முன்னேற்பாடுகளுக்குப் பெரிதும் பாடுபட்ட ஆறுமுகத்திற்கு மாவட்ட ஆட்சியரும், விழாவில் பல்வேறு உதவிகளைச் செய்த ஸ்ரீரங்கம் ஏஜெண்ட் இராதாகிருஷ்ணனுக்கு நீதிபதியும் நினைவுப் பரிசுகளை வழங்கி மகிழ்ந்தார்கள்.

மகளிர் விழாவென்றால் முழுமையான மகளிர் விழாவாக நடந்து முடிந்தது. வினாடி-வினா போட்டிக்கு வந்த விடைத்தாள்களை எண்ணிய போது எழுநூறைத் தாண்டியிருந்தது. அப்படியென்றால் காலையில் வந்திருந்த குழந்தைகள், ஆண்களைச் சேர்த்தால்... திருச்சியில்தான் வாசகிகள் எத்தனை சந்தோஷமாக ஒத்துழைத்தார்கள். ஒரு கூச்சல், குழப்பம் இல்லை. அத்தனை பேரும் மகிழ்ச்சியாக விழாவின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சந்தோஷமாகக் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் பேசும் போது, "பெண்கள் பங்குகொள்ளும் எந்த நிகழ்ச்சியுமே சோடை போவதில்லை. அதனால் தான் அறிவொளி இயக்கம், வயது வந்தோர் கல்வித் திட்டத்திற்கெல்லாம் பெண்களை அதிகம் தேர்ந்தெடுக்கிறோம். விரைவில் பல திட்டங்கள் வரவுள்ளன. நீங்கள் சேருவீர்களா?" என வினவிய போது ஒரே சந்தோஷ ஆரவாரம்.

விழா முடிந்த போது எல்லோரும் சந்தோஷமாக விடைபெற்றோம். சந்தோஷமாக, மனம் நிறைய நிம்மதியாக சென்னை திரும்பினோம்.

அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நலமாக வாழ அம்பிகையின் அருளைப் பிரார்த்திக்கின்றோம்



■ சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்

■ சுத்திகரிக்கப்பட்ட, கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்

■ அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்ட நாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (FREE OF OIL)

OUR SPECIALITIES:

☞ புழுங்கலரிசி கை முறுக்கு, தட்டை, சீடை, மிக்ஸர் (FREE OF OIL)

☞ மைசூர் பாகு, போளி, லட்டு, கோதுமை அல்வா.


எங்களது புதிய அறிமுகம்:

★ இன்ஸ்டன்ட் மெட்ராஸ் இட்லி மிக்ஸ்

★ இன்ஸ்டன்ட் மெட்ராஸ் தோசை மிக்ஸ்

★ இன்ஸ்டன்ட் புளியோதரை மிக்ஸ்

★ இன்ஸ்டன்ட் வடை மிக்ஸ்



SUSWAAD

1/2, Venkatraman St., (Venkatrama Iyer St.)
T.Nagar, Madras-17
Phone: 8282324 p.p.

கல்யாணம் மற்றும் வைபவங்களுக்கான சீர்வரிசை பட்சணங்கள் செய்து தருகிறோம்

Also available at:
C/o. Unique Electronics
160, Royapettah High Road
(Opp. தண்ணீர்துறை மார்க்கெட்)
Mylapore, Madras-600 004. Ph: 75490.



* விழாவிற்கு வந்திருந்த வாசகிகள்...

மாறுவேடப் போட்டியில்

பரிசு பெற்றவர்கள் :

பி. நிவேதிதா (கிருஷ்ணர்) முதல் பரிசு
வந்தனா (கடற்கரை சிறுமி)
இரண்டாம் பரிசு
ஜி. கிருத்திகா (ஜப்பானிய சிறுமி)
மூன்றாவது பரிசு

ஆறுதல் பரிசு

எல். ராஜசேகர்
(ஏர் இந்தியா மானேஜர்)
கே. சபரீஷ் (துபாய் ஷேக்)
என். வெங்கட்ராமன் (ஆச்சி)
மதுரதா & கதர்லன் (மரம்)
கே. கார்த்திக் (ஆம்ஸ்ட்ராங்)

மகளிர் மன்றங்களுக்கான

நாடகப்போட்டியில் பரிசு

பெற்றவர்கள் :

முதல் பரிசு : மேற்கு அண்ணா நகர் மகளிர் மன்றம், தென்னூர், திருச்சி.

இரண்டாவது பரிசு : இந்திராகாந்தி மகளிர் மன்றம், சீனிவாசநகர், திருச்சி.

மூன்றாவது பரிசு : அபிராமி மண்டலி, ஸ்ரீரங்கம்.

ஆரோக்கியப் போட்டி

வினா-விடை -

பரிசு பெற்றவர்கள் :

முதல் பரிசு : ஜெ. ஜான் சரன், திருச்சி - 22.

இரண்டாவது பரிசு : அனுராதா ராஜாராமன், தென்னூர்.

மூன்றாவது பரிசு : என். சந்திரிகா, திருச்சி - 18.

ஆறுதல் பரிசு :

விஜயஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, வயலூர்.
சத்தியவதி கண்ணபிரான், காட்டூர்.
ஜெ. லலிதா, திருச்சி - 2.
ஜி. ராஜ்பிரபா, உறையூர்.
பாரிஜி, உறையூர்.

தொகுப்பு : மஞ்சுளா ரமேஷ்
படங்கள் : யோகா

* உஷா கிருஷ்ணன்

* ராதா கிருஷ்ணன்







ஜிங்லர்ஸ்.
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



- எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும்
- சர்வதேச தொழில் நுட்பம்
- மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம்
- 100% பருத்தியினாலான மேல்பாகம்
- காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை
- உட்புறம் சரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும்
- பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.



ஜிங்லர்ஸ் — உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.

Jinglers

India's first real/washable baby bed



Mfrs: Utility Textiles,
AH-248, 1st Street, Shanthi Colony,
Anna Nagar, Madras - 600 040.
Ph : 6211974.

Insight-UT-1876-R

Available at :
MADRAS CITY : • Children Choice, Luz; • London Stores, Mylapore/Purasawalkam/Mount Road; • Little Kingdom, Kodambakkam High Road/Kellys/Pondy Bazaar; • Murugan Dresses, T. Nagar; • Naidu Hall, T. Nagar; • Trishla, Luz; • Witco, Anna Nagar/T. Nagar; • Vilan, Luz; • Lucky Dresses, Tambaram; • Grace Furniture, Chetput; • Sri Saradha Devi Furnishing, Adyar; • Vincy, Royapuram; • Total Care, Nungambakkam. **COIMBATORE :** • Bison Showroom, Ashoka Plaza; • Grand Bazaar; • Saravanas, Lakshmi Complex; • Shobha, Big Bazaar Street; • Vandana, R.S. Puram; • Jack 'N' Jill Dresses, R.S. Puram. **CUDDALORE :** • Seematti; • Mummy Daddy; • Bharani Readymade. **CHIDAMBARAM :** • Seematti Dresses. **DINDIGUL :** • Shabnam; • Designs. **ERODE :** • Bharani Readymades; Selection, R.K.V. Road; • Thomas & Sons. **KUMBAKONAM :** • Seematti Dresses; • Mathivannnan & Company. **MADURAI :** • Instyle; • Hajee Moosa; • Mummy Daddy; • Milan; • Shabnam; • Designs. **MAYAVARAM :** • Seematti Dresses; • Tee Vee Textiles. **NAGERCOIL :** • Ganesh Plastic Centre. **NEYVELI :** • Banu Cloth Stores, Main Bazaar. **PONDICHERRY :** • Shabnam; • Selection; • Crown's; • Kids Centre. **SALEM :** • Aunty Uncle; • Golden House (Maharani); • Lavanya Shopping Paradise; • Milan; • Mummy Daddy; • Ramyas Shopping Palace. **RAMANATHAPURAM :** • Daddy Mummy. **PUDUKOTTAI :** • Pinky. **TIRUNELVELI :** • Good Luck Emporium; • Roopam. **TIRUPUR :** • Selection Centre, Kamaraj Road. **THANJAVUR :** • Maharaja Readymades. **TRICHY :** • Ananda Corporation; • Kiddies Corner; • Krishna Readymade Hall; • Ruby Readymades; • Geetha Silkol. **TUTICORIN :** • Students Readymade Emporium; • Abirami Traders. **VELLORE :** • Shabnam; • Sarkar; • Milan. **THENI :** • Milan. **DHARMAPURI :** • Parry's Corner; • Kamadhenu Agencies; • Bharani Readymades. **RAJAPALAYAM :** • Seematti Silk; • Nandhini Super Market.

பொருள் : கரகர உணவு

முதல் பரிசு ரூ. 300/-

ராயல் ரோஸ்ட்

தேவையான பொருட்கள் :
வெள்ளைப் பயறு, பாசிப் பயறு,
பட்டாணி மூன்றும் - தலா ஒரு கப்,

* எல். சாந்தி



இம்மாத இல்லத்தரசி

* கிரிஜா



பச்சரிசி - 3/4 கப்,
கடலைப் பருப்பு - 3/4 கப்,
உருளைக் கிழங்கு - 1/4 கிலோ,
பட்டை, சோம்பு, சீரகம்,
இஞ்சி, கசகசா தலா - 1 டீஸ்பூன்,
பச்சை மிளகாய் - 4,
காய்ந்த மிளகாய் - 4,
கறிவேப்பிலை, கொத்துமல்லி
- நறுக்கியது கொஞ்சம்,
உப்பு - தேவையான அளவு,
பொரிக்க ரீபைண்ட் ஆயில்
- 1/2 லிட்டர்,
கோஸ் இலை, சேம்பு இலை,
மஞ்சள் இலை (எது வேண்டு
மானாலும் மணத்துக்கும், மனதுக்
கும் பிடித்தவாறு பத்து இலை
களைக் கழுவி எடுத்துத்
துடைத்துக் கொள்ளவும்.)
கடலை மாவு 2 பங்கும்,
அரிசி மாவு 1 பங்கும்,
காரம், உப்பு, பெருங்காயம்
சேர்த்துத் தயாரித்த பஜ்ஜி மாவு.

செய்முறை :

மூன்று பயறு வகைகளையும், அரிசி, கடலைப் பருப்பு இரண்டையும் தனித் தனியே வெறும் வாணலியில் வறுத்து எடுத்தபின் கல் நீக்கி ஊறவிட்டு ஒரு மணி நேரம் கழித்து எடுத்து மற்ற பொருட்க ளுடன் சேர்த்துக் கரகரப்பாக அரைத்து எடுத்து விடவும். குக்கரில் தனியே உரு ளைக் கிழங்கை வேகவிட்டு உதிர்த்து மாவில் கலந்து கொண்டு விடவும். (மேல் மாவுக்குத் தனியே உப்பு, காரம் சேர்ப்பதால் உள் மசாலாவுக்கு ஏற்றபடி காரம், உப்பு போட்டுக் கொள்வது நல்லது. கெட்டியாக பஜ்ஜி மாவு கலந்து கொண்டு விடவும்.)

இதற்கு முன்னதாக இலையின் பின் பக்கம் நாம் கெட்டியாக அரைத்து வழித்த மாவை சமசீராகப் பூசி இலையை அப்ப டியே சுருளாகச் சுருட்டி நன்கு 10 நிமிடம் ஆவியில் வேகவிட வேண்டும். ஆறவிட்ட சுருள்களைத் தேவையான சைஸில் நறுக்கிக் கொண்டு விட்டு நாம் தயார் செய்து கொண்ட மாவில் நன்கு முக்கி எடுத்து அடுப் பில் காயும் எண்ணெயில் போட்டுப் பொன் னிறமாகப் பொரித்து எடுத்து விட வேண் டும். எண்ணெயை வடிய விட்டுச் சுடச் சுடப் பரிமாறினால் இதமான ருசியுடன் கூடிய சுவைமிகுந்த கரகர ரோஸ்ட், (சேம்பு கோஸ் இலையின் மணமும் கூட்டிக்


கொண்டு) மிகவும் அமர்க்களமாக இருக்கும்.

– கே. சரோஜா, உடுமலைப்பேட்டை.

இரண்டாம் பரிசு ரூ 200/-

மிளகுத் தட்டை

தேவையான பொருட்கள் :
ரவை - 1 கப்,
பச்சைப் பயறு - ½ கப்,
வறுத்தரைத்த உளுத்தமாவு - ¼ கப்,
தேங்காய்த் துருவல் - ¼ கப்,
மிளகு - 2 டீஸ்பூன்,
சீரகம் - 2 டீஸ்பூன்,
உப்பு - 2 டீஸ்பூன்,
நெய் - 2 டேபிள் ஸ்பூன்,
கருவேப்பிலை - 1 ஆர்க்கு,
பொரித்தெடுக்க எண்ணெய் - ¼ கிலோ.



செய்முறை :

பயறைக் களைந்து நீர் வடித்து ஒரு மணி நேரம் ஊறவிடவும். அத்துடன் தேங்காய்த் துருவல் மிளகு, சீரகம் சேர்த்து அதிகம் நீர் விடாமல் கெட்டியாக அரைக்கவும். அரைத்த விழுதுடன் உளுந்த மாவு, ரவை, நெய் கலந்து பிசையவும். கறிவேப்பிலை சேர்த்துக் கலக்கவும். இந்த மாவை நெல்லிக் காய் அளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். உருண்டைகளை எண்ணெய் தொட்டுக் கொண்டு அப்பளக் கல்லில் வைத்து ஒருமுறை நகர்த்தி சிறு தட்டை வடிவில் செய்து கொள்ளவும். தட்டைகளை எண்ணெயில் பொரித்து எடுக்கவும். இது மழைக் காலத்திற்கேற்ற மிளகுத் தட்டை. விரும்புபவர்கள் டொமாடோ சாஸ், கெச் சப் சேர்த்துச் சாப்பிடலாம்.

– கிரிஜா, பெங்களூர் – 96.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

பாகற்காய் வறுவல்

தேவையான பொருட்கள் :
பாகற்காய் - 1 கிலோ,
அரிசி மாவு - 1 கரண்டி,
மிளகாய்ப் பொடி - 6 ஸ்பூன்,
உப்புப் பொடி - தேவையான அளவு,
பெருங்காயப் பொடி - 1 ஸ்பூன்,
மஞ்சள் தூள் - 1 ஸ்பூன்,
எண்ணெய் - ½ கிலோ.

செய்முறை :

இளசான பாகற்காயை வட்ட வட்டமாய் லேசாக நறுக்கிக் கொள்ளவும். அவற்றில் உள்ள கொட்டைகள் மட்டும் எடுக்கவும். அரிசி மாவில் மிளகாய்த் தூள், உப்பு தேவைக்கேற்றபடி, மஞ்சள் பொடி, பெருங்காயப் பொடி, இவற்றை வாயகன்ற பாத்திரத்தில் சிறிது தண்ணீர் விட்டு பஜ்ஜி மாவை விட கெட்டியாய் கலக்கவும். நறுக்கி வைத்த பாகற்காய் சிப்சை, நன்றாய்க் கலந்து வைத்த மாவில் பிசிறி வைக்கவும்.

ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி நன்றாய்க் காய்ந்ததும் அதில் பிசிறி வைத்த பாகற்காயைப் போட்டு பொன்னிறமாய் வறுத்து எடுக்கவும்.



* ஜானகி

எல்லாவித சாம்பார், கூட்டு, குழம்பு இவைகளுக்குத் தொட்டுச் சாப்பிடலாம். கருசாதத்தில் நெய்விட்டு சிப்சைப் பிசைந்து சாப்பிடலாம். சர்க்கரை வியாதிக்காரர்களுக்குச் சிறந்த உணவு. மாவுக் கலவையில் கடலை மாவு சேர்க்க வேண்டாம்.

– கமலவேணி, பொள்ளாச்சி.

ஆறுதல் பரிசு ரூ 50/-

பட்டன் சீடை

தேவையான பொருட்கள் :
பச்சரிசி மாவு இடித்துச் சலித்தது - 4 ஆழாக்கு,
பொட்டுக்கடலை - 1½ ஆழாக்கு,
தேங்காய் - 1,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - வேண்டிய அளவு.

செய்முறை :

பச்சரிசி மாவை வறுத்துக் கொட்டி ஆற வைக்கவும். பொட்டுக் கடலையை மிக்ஸியில் பொடித்துச் சலித்து வைத்துக் கொள்ளவும். தேங்காயைப் பாலைப் பிழிந்து அத

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

SBF

Fully Computerised A/C Office

(கம்பெனி சட்டத்தின் பதிவு எண் : 18&24962)
பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர்,
(நாகேஸ்வரராவ் பார்க் அருகில்),
மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003 போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன்
நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படும்.
சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

1. *Prompt and satisfying service*
2. *Efficient Management*
3. *Financial strength backed by a prosperous and reputed group*
4. *Loans secured by gold and immovable assests.*
5. *No business of a speculative nature.*

இயக்குநர்கள்

பெயர்	விலாசம்	தொழில்
திரு டி.வி. சீனிவாசன்	15 லஸ் அவின்யூ மைலாப்பூர் சென்னை 600 004	நிதி ஆலோசகர் Formely SBI
திரு பி. கே. சந்திரசேகரன்	89 போயஸ் கார்டன் சென்னை 600 086	P.K. வடுவம்மாள் குருப் இரும்பு வியாபாரம்
திரு ப்ரவின் கோவிந்தராஜ்	22 போயஸ் கார்டன் சென்னை 600 086	Architect
திருமதி பி.சி. சுந்தரவதனி	89 போயஸ் கார்டன் சென்னை 600 086	வியாபாரம்
திரு கே.ஜி. கிருஷ்ணன்	Y/210, 2nd அவின்யூ, அண்ணா நகர் சென்னை 600 040	ஜெனரல் ஃபாப்ரி கேட்டர்ஸ் (பி) லிமிடெட்
திரு பி.கே.சி. ரமேஷ்	89 போயஸ் கார்டன் சென்னை 600 086	பிரசாந்த் ஸ்டீல்ஸ்
திரு பி.சி. பாஸ்கர்	89 போயஸ் கார்டன் சென்னை 600 086	சுந்தரவதனி கல்யாண மண்டபம், எழும்பூர்
திரு கே. ஆர். நிரஞ்ஜன் குமார்	1 பின்னி ரோடு போயஸ் கார்டன் சென்னை 600 086	K.V.R. பஸ் சர்வீஸ் சென்னை
திரு பி.சி. சியாம் சுந்தர்	89, போயஸ் கார்டன் சென்னை 600 086	இரும்பு வியாபாரம்

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும்

ளுடன் 3 டம்ளர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைக்க வேண்டும். பின் பேசினில் வறுத்த மாவு, பொட்டுக் கடலை மாவு உப்புப் போட்டு தேங்காய் பால் ஊற்றிக் கரண்டியால் கிளறி பூரி மாவு போல் பிசைந்து கொள்ளவும். இந்த மாவை உருண்டையாக உருட்டி அமுக்கினால் பட்டன் போல் வரும்.

இந்தப் பட்டன்களை எண்ணெயில் போட்டு வறுத்துச் சப்தம் அடங்கியதும் எடுக்க வேண்டும். இந்தச் சீடை வெடிக்குமே என்று பயப்படவே வேண்டாம். வெடிக்காது.

பி. குறிப்பு : இந்த மாவை சீப்புச் சீடைக் கட்டையில் பிழிந்து சீப்புச் சீடை செய்யலாம். காரம் போட்டு ஓட்டுப் பக்கோடா குழலில் போட்டுப் பிழியலாம். கடலைப் பருப்பை ஊறவைத்துப் போட்டு தட்டையாகத் தட்டலாம். பச்சரிசி மாவை வறுத்து வைத்துக் கொண்டால் கெடாது. வேண்டும் பொழுது தேவையானதை செய்து கொள்ளலாம்.

– எல். சாந்தி, இடப்பாடி.

ஆறுதல் பரிசு ரூ. 50/–

சேப்பங்கிழங்கு தேன்குழல்

தேவையான பொருட்கள் :

சேப்பங்கிழங்கு - 100 கிராம்,
அரிசி மாவு - 1 ஆழாக்கு,
சீரகம் - 1 டீஸ்பூன்,
உப்பு - தேவையானது,
கெட்டி நெய் - 1/4 டீஸ்பூன்,
பெருங்காயப் பவுடர் - 1/4 டீஸ்பூன்,
எண்ணெய் - 500 கிராம்.

செய்முறை :

நைஸான அரிசி மாவை வாணலியில் போட்டு, கை பொறுக்கும் அளவு சூடு வரும் வரை வறுத்து இறக்கி தாம்பாளத்தில் கொட்டி உப்பு, பெருங்காயம், சீரகம், விழுது நெய் இவற்றைச் சேர்க்கவும். சேப்பங்கிழங்கை, அதிகம் குழையாமல் வேக வைத்து, மேல் தோலை உரித்து விட்டு மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி விட்டு எடுத்து மாவில் போட்டு கெட்டியாகப் பிசையவும். அடுப்பில் வாணலியில் எண்ணெய் வைத்துக் காய்ந்த பிறகு, பிசைந்த மாவை தேன்குழல் அச்சில் போட்டுப் பிழிந்து சிவந்த பின் எடுக்கவும். இது சுவையாகவும் கரகரப்பாகவும் இருக்கும்.

– ஜானகி ராகவன்,
ஹைதராபாத் - 34.



எண்ணம் போல மலரும் வண்ணங்கள்
100% பருத்தி மற்றும் பாலியஸ்டர் துணிகளில்
நீங்கள் தேர்ந்தெடுக்க - ரூபி, லவ்லி லேடி, .: பேர் & லவ்லி
மற்றும் பிளாட்டினம் சூப்பர்.
பிரிமியர்* மில்ஸ்
ப்ளவுஸ் துணிகளில் நெ. 1

சாந்தி கோல்டு ஹவுஸ்

வழங்கும் மாதாந்திர நகை சேமிப்புத் திட்டம்.

உங்கள்

அன்பு மகளின்

எதிர்காலத்திற்கு

இன்றே

சேமியுங்கள்.



திநகரில் உள்ள கைராசியான நகைக்கடை சாந்தி கோல்டுஹவுஸ். எமது நிறுவனம் ஒவ்வொருவரும் சிரமம் இன்றி தங்க நகைகள் வாங்க மாதாந்திர நகை சேமிப்புத்திட்டம் மூலம் எளிதாக்கியுள்ளது.

தங்கம், வெள்ளி மற்றும் வைர நகைகள் குறுகிய காலத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்.

மாதத் தவணைத் தொகை	மாதங்கள்	செலுத்தும் தொகை	போனஸ்	பரிசு	தவணை முடிவில்
50	15	750	100	50	900
100	15	1500	200	100	1800
200	15	3000	400	200	3600
300	15	4500	600	300	5400
500	15	7500	1000	500	9000

Sh சாந்தி கோல்டு ஹவுஸ்

72, உஸ்மான் சாலை, தி.நகர்,
சென்னை--600 017. போன்: 441730

Image Creators

பெற்ற பிள்ளையைக் குற்றம் சொல்லாதீர்.

கீழ்கண்ட அறிகுறிகளும் காரணமாக இருக்கலாம் அல்லவா?

1. மனதில் அலைகடல் போல் நர்த்தனித்து அடிக்கடி மாறுகிறதா?
2. எத்தனை தடவை சொல்லிக் கொடுத்தாலும் அல்லது படித்தாலும் கிரகிக்க முடியவில்லையா?
3. பள்ளிக்கூடம் செல்ல குழந்தைகள் பயப்படுகிறார்களா?
4. படித்த மாணவர்கள் பரிட்சை எழுதப் பயப்படுகிறார்களா?
5. அறிமுகம் இல்லாதவர்களைக் கண்டால் வெறுப்படைகிறார்களா?
6. ஞாபகமறதி ஏற்படுகிறதா? படிக்கச் சொன்னால் தப்பித்து ஓடுகிறார்களா?
7. பெற்றோர் சொல்லுக்கு பணிக்கக் கொடுக்கிறார்களா?
8. உடம்பு வளர்ச்சியிலும் மனவளர்ச்சியிலும் பின் தங்கிக் கிடக்கிறார்களா?
9. தன்னம்பிக்கை இல்லாமல் தடுமாறுகிறார்களா?
10. எடுத்ததற்கெல்லாம் சோம்பலாக இருக்கிறார்களா?
11. வைத்த பொருளை இடம் தெரியாமல் திகைக்கிறார்களா?

மனம் உடைந்தவர்கட்கு மறு மலர்ச்சியை உண்டாக்குகிறது எது?



ANAC® அனெக்

ஹோமியோபதி மாத்திரைகள்
ஞாபக சக்தியை அதிகரிக்கிறது

சிறுவர்களுக்கு: ரூ. 15/-
பெரியவர்களுக்கு: ரூ. 20/-
ரிஜிஸ்தர் செலவு: 1 பாட்டில் ரூ. 7/-
ரிஜிஸ்தர் செலவையும் சேர்த்து M.O. செய்யவும்
உங்கள் விலாசத்தை PIN CODE உடன்
தெளிவாக எழுதவும்

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

ஹோமியோ கிளினிக் & ரிசர்ச் சென்டர்

5, சீதா நகர் முதல் தெரு. (ஸ்டர்லிங் ரோடு பஸ் ஸ்டாப்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தேவைக்கு எங்களது ஸ்டாக்கிஸ்ட்களை அணுகவும்

- கலா ஹோமியோ பார்மஸி, (சரவணா ஸ்டோர்ஸ் எதிரில்), 48, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17.
- கலா ஹோமியோ பார்மஸி 340 A, பேப்பர் மில்ஸ் ரோடு, மாதா சர்ச் எதிரில், பெரம்பூர், சென்னை-11.
- ரவி ஹோமியோ பார்மஸி, 54, கனகர் தெரு, சேலம்-1.
- ஹோமியோ பார்மசூட்டிகல்ஸ், 133, கிழக்கு வெளி வீதி, மதுரை-1. (ஐ.ஓ.பி பேங்க் அருகில்).
- ஸ்மார்ட் ஹோமியோ மெடிக்கல்ஸ், 5 B, மதுரை ரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.
- DR. P. சுப்ரமணியன், 1, காந்தி ரோடு, கள்ளக்குறிச்சி-606202.
- நேதாஜி மெடிக்கல் ஸ்டோர்ஸ், மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.
- மீனாட்சி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 69, கடைவீதி, ஸ்ரீமுஷ்ணம்-608703.
- ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 164, வாக் பஜார், (வேம்புலி" அம்மன் கோவில் அருகில்) வேலூர்-4.
- சர்வோதயா பால் கிளினிக், (கணபதி ஸ்டோர்ஸ் எதிரில்), எம்.ஜி. ரோடு, கோரேகான், (W) பம்பாய்-400063.
- டாக்டர் சித்திரைக்கண்ணு D.H.M.S., எம்.கே. புரம், 37, போலீஸ் ஸ்டேஷன் தெரு, கடையநல்லூர்-627751.
- S.S. நாதன் ஜே கவிராஜ் ஹோமியோபதி ஆஸ்பத்திரி, 93, கச்சேரி ரோடு, ஈரோடு, P.C. 638001.
- டாக்டர் P. நாராயணசாமியின் ஹோமியோ கிளினிக், 10, சுவேதா காலனி, புதுச்சேரி பஸ் ஸ்டாண்ட் அருகில், சென்னை-91.
- 'ஹானிமன் ஹோமியோ ஹால், AVN காலேஜ் ரோடு, விசாகப்பட்டினம்-530001.
- தென்றல் மெடிக்கல்ஸ், 1, சின்னகுளம் மாரியம்மன் தெரு, திருப்பத்தூர்-631601.
- உபேந்திரா அண் கோ, மெயின் ரோடு, குண்டூர்-(AP) 522003.
- விமலா மெடிக்கல்ஸ் ஹால், 15, எம் எம் தெரு, காரைக்குடி - 623 001.

AAR JEE

பொம்மைகள்

பொலிவுடன் திகழ...

'ரெடிமேடாகக் கிடைக்கும் ஸ்டீல் கொலுப்படியை வாங்கினோமா, நவராத்திரியின் போது பெட்டியிலிருந்து பொம்மைகளை எடுத்து அதில் அடுக்கி பிறகு மீண்டும் எடுத்து வைத்தோமா' என்ற வகையைச் சேர்ந்தவரல்ல திருமதி பிரேமா நாராயணன். விதவிதமான பொம்மைகளைப் பார்த்துப் பார்த்து வாங்குவதோடு மட்டுமில்லாமல் தானாகவே பலவித பொம்மைகளைச் செய்யும் திறமையும் பெற்றவர் இவர். கொலு வைக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு இவரது அனுபவங்களும் யோசனைகளும் நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

"ஆறேழு வருடங்களுக்கு முன் கூடை பின்னும் ஒயரில் பூ ஜாடிகள் செய்யத் தொடங்கினேன். நிறைய வேலைப்பாடுகளும் செய்ததால் அதற்கான நேரம், முயற்சிகளும் அதிகமாயின. என்றாலும் கடைசியில் அவை உருவான நேர்த்தியைப் பார்த்து மற்றவர்கள் பாராட்டிய போது, பட்ட சிரமங்களெல்லாம் பறந்து போய் விட்டது.




நவராத்திரிக்காகவே இவற்றைச் செய்தேனென்றாலும் ரொம்பப் பெருமையுடன் நவராத்திரி முடிந்த பின்பும் அவற்றை கூடத்தில் தொங்க விட்டேன்.

ஆனால் அந்தப் பெருமை சில மாதங்கள்தான் நீடித்தது. அந்த ஒயர் ஏதோ எலி கடித்துப் போட்டது போல் தானாகவே அறுந்து போய் பிய்ப்பியாக விழுந்து விட்டது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. பிறகு சூட்சுமத்தைத் தெரிந்து கொண்டேன். ஒயரை வாங்கும் போது பள பள வென்று பட்டையாக விற்கும் ஒயரை வாங்கி பொம்மைகள் செய்தால் அது நீடித்திருக்கும் என்பது புரியவந்தது. இதற்கு சாட்சி நான்கு வருடங்களுக்கு முன் நான் செய்து இப்போதும் பளிச்சென்று காட்சி யளிக்கும் மீன், கிளி, மரங்கள் (இதில் கம்பி, ஒயர் ஆகியவற்றோடு சின்னச் சின்ன மணிகளையும்

பொருத்தமாகக் கோக்க வேண்டும்) ஆகியவை. மண் பொம்மைகளைப் பொறுத்தவரை நான்கைந்து ஆண்டுகளுக்காவது அவற்றின் பெயிண்டிங் பற்றி கவலைப்படாமல் இருக்கலாம். அதற்குப் பிறகு பொம்மை சாயம் இழக்கத் தொடங்கினால் வீட்டில் அதற்குப் பெயிண்ட் அடிப்பதை விட இதுபோன்ற புது பொம்மையை வாங்கி விடுவது தான் பெரும்பாலும் சிக்கனமாக இருக்கும். அழகு செய்யும் சாக்கில் வேண்டுமானால் கொஞ்சம் வண்ணம் போன பொம்மைகளுக்கு அங்கங்கே எடுப்பை உண்டாக்கலாம். உதாரணமாக கிருஷ்ணன் பொம்மைக்கு உதட்டுக்கு லிப்ஸ்டிக், நெற்றிக்கு நாம பெயிண்ட் போன்றவற்றை நான் அடிப்பதுண்டு. ராஜஸ்தான் பொம்மை என்று நடைபாதைகளிலும், வீடு வீடாக வந்தும் விற்கிறார்கள். பணத்திற்குப் பதிலாக துணிகளைக் கூட பண்டமாற்றாக வாங்கிக் கொள்கிறார்கள்.

‘‘இந்த வருட கொலுவுக்கு இதை வைத்தால் போதும்’’ என்றோ, ‘‘ஒரு ஏழைக் கைவினைக் கலைஞருக்கு உதவுகிறோம்’’ என்றோ எண்ணினால் மட்டுமே இவற்றை வாங்குவது உசிதம். நான் இந்த வகையில் வாங்கிய ராதா கிருஷ்ணன் பொம்மை ஏனோ ஓரிரு மாதங்களிலேயே வண்ணமிழந்து அசிங்கமாகக் காட்சியளித்தது. எனக்குத் தெரிந்தவர்கள் வீட்டிலும் இதுபோன்ற பொம்மைக்கு இதே கதிதான். மர பொம்மைகள் வாங்கினால் பிரச்னையே இல்லை. குறளகம், காதி போன்ற பல இடங்களில் கிடைக்கும் மரத்தினாலான நடராஜர், அஜந்தா ஓவியச் சிலை போன்றவற்றை வெறுமே அவ்வப்போது துடைத்து விட்டாலே



போதும். அன்றுதான் வாங்கியது போல் பளிச்சென்று இருக்கும். மேலும் பளிச்சென்று இருக்க வேண்டுமானால் ஒரு கோட்டிங் வார்னிஷ் அடிக்கலாம்.ஸ்பாஞ்சில் வெட்டி, ஒட்டி, சம்கிகள் பொருத்தி உருவாக்கிய சிறுமி பொம்மை அற்புதமாக வந்திருந்தது. ஆனால் என்னதான் நவராத்திரி முடிந்தவுடன் ஷோ-கேஸில் வைத்து மூடி மூடி வைத்திருந்தாலும், வெண்மையான ஸ்பாஞ்ஜ் பழுப்பு நிறமடைவதைத் தடுக்க முடிவதில்லையே என்று மனம் குமைய வேண்டாம். அரை பக்கெட் சோப்பு நீரில் இது போன்ற பொம்மைகளை சுமார் அரை மணி நேரம் ஊறப் போடுங்கள். பிறகு அரை பக்கெட் நல்ல நீரில் பதினைந்து நிமிடங்கள் வைத்திருங்கள். (சம்கிகள் பதிக்கப்பட்டிருக்கிறதே என்ற கவலை வேண்டாம். ஒன்றும் ஆகாது.) பிறகு அப்படியே அறைக்குள்ளேயே காய வைத்தால் போதும். ஸ்பாஞ்ஜ் பழைய நிறம் பெறும். முக்கியமான விஷயம் பொம்மையின் எந்தப் பகுதியையும் பிழிய வேண்டாம். அப்படிச் செய்தால் பொம்மை மீண்டும் பழைய ஷேப்பெறாது. பேப்பர் பல்ப்பில் பெரிய அளவில் பொம்மைகள் வருகின்றன. பார்க்கவும் பளிச்சென்று இருக்கின்றன. ஆனால் இவற்றில் தூசி படிந்தால் அவஸ்தை. அழுத்தித் துடைத்தால் அந்தப் பகுதி லேசாக உடைந்து போய் வெள்ளையாகத் தெரியும். பயனில்லாத டூத்-பிரஷ்ஷைப் பயன்படுத்தி தூசிகளைத் துடைக்கலாம். கறுப்பு வண்ண பேப்பர் பல்ப் பொம்மைகளில் கறை பட்டிருந்தால் மெல்லிய துணியை எண்ணெயில் நனைத்து அந்த

இடத்தை லேசாக ஒற்றி எடுத்தாலே போதும். பொதுவாகவே பேப்பர் பல்ப் பொம்மைகளை கொலுவில் வைப்பதற்கு முன் அவற்றின் மேல் சிராக தேங்காய் எண்ணெயைத் தடவினால் பளபளவென்று இருக்கும். கறுப்பு எமல்ஷன் பெயிண்ட்டையும் லேசாக உதிர்ந்து போன இடங்களில் அடிக்கலாம்.

மண், பேப்பர் பல்ப் பொம்மை ஆகியவற்றில் ஏதாவது பாகம் உடைந்து போனால் இருக்கவே இருக்கிறது பெவிகால் போன்ற பசைகள். இவற்றால் பெரும்பாலும் உடைந்தது தெரியாமலேயே பொம்மைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வரலாம். ஆனால் ஒன்று. உடைந்த பகுதிகளைப் பொருத்தும் போது ரொம்ப கவனத்துடன் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் ஏதாவது சின்னப் பகுதி நீட்டிக் கொண்டு குட்டை வெளிப்படுத்தி விடும்.

பொம்மைகளைப் பேக் செய்து உள்ளே வைக்கும் போது சில விஷயங்களைக் கவனத்தில் கொள்வது நல்லது.

★ நைலக்ஸ் துணிகளால் பொம்மைகளைச் சுற்றி வைப்பதைத் தவிர்ப்பது நல்லது. ஏனென்றால் இப்படி வைக்கப்பட்ட பொம்மைகள் மீண்டும் வெளியே எடுக்கப்படும் போது அவற்றின் கலர் ஃப்ரெஷ்ஷாக இருப்பதில்லை.

★ பழைய சாக்ஸ்கள், பனியன்கள் ஆகியவற்றை நன்கு துவைத்து அவற்றை பொம்மை வைக்கப் பயன்படுத்தலாம். சாக்ஸ்களுக்கு உள்ளேயே சிறு பொம்மைகளைப் போடலாம்.


★ பொம்மைகளை அளவுக்குத் தகுந்தபடி அடுக்கும் அதே நேரத்தில் பேப்பர் பல்ப் பொம்மைகளின் மீது வெயிட் எதையும் வைக்கக் கூடாது.

★ பொம்மைகளில் குழிவான பகுதிகள் இருக்கலாம். உதாரணமாக ஒரு கிராமிய நடனமணியின் பொம்மையில் 'பம்'மென்று பாவாடை விரிந்து இருக்கலாம். அல்லது இரு கைகளையும் மேலே தூக்கி வணங்குபவரது பொம்மையில் கைகளுக்கும் தலைப்பகுதிக்குமிடையே இடைவெளி இருக்கும். இது போன்ற பகுதிகளில் சிறு பேப்பர் பிட்களை (அச்சுக் கூடங்களில் ஏராளமாகக் கிடைக்கும்) நிரப்பி வைத்தால் பொம்மைகள் ஒன்றோடொன்று உராயும் போதும் உடையாது.

★ மிகச் சிறிய மண் பொம்மைகள் என்றால் சிறு பெட்டிகளில் பஞ்சைப் பரப்பி அவற்றின் மீது அந்த பொம்மைகளை வைத்து மேற்புறமும் பஞ்சைப் பரப்பலாம்.

★ சிறு அட்டைப் பெட்டிகளில் பொம்மைகளைப் போட்டு மூடினால் அவற்றைச் சுற்றி கத்தரிக்கப்பட்ட சிறு பேப்பர் துண்டுகளை நிறையப் போட்டு வைப்பது பொம்மைகளுக்குப் பாதுகாப்பு. பெரிய பொம்மைகளைச் சுற்றி வைக்கோல் பரப்பி வைக்கலாம்.

– ஜி.எஸ்.எஸ்.



மிளகு அப்பளத்தை எண்ணெய் தடவி தோசைக் கல்லில் போட்டு எடுத்தால் மொறுமொறுவென்று சுவையாக இருக்கும். எண்ணெய் செலவும் அதிகம் இல்லை. உடம்புக்கும் நல்லது. டால்டா அல்லது நெய் தடவியும் செய்யலாம்.

– மாலினி ரவி

உச்சிதனை முகர்ந்தால்

9

வெந்த உருளைக்கிழங்கை தோல் உரித்துக் கொண்டிருந்தாள் சரண்யா. மிக்ஸியில் தேங்காய் அரைத்துக் கொண்டிருந்தாள் பத்மா. அடுப்பில் வாணலியைப் போட்டு தாளித்துக் கொண்டிருந்தாள் பிருந்தா.

பேச்சும் சிரிப்புமாய் கலகலவென்று சமையல் ஆகிக் கொண்டிருந்தது.

''நா எங்க ஆபீஸ்ல எல்லார்கிட்டயும் சொல்லிட்டேன். எங்க ஆபீஸ்ல ஒரு முப்பது பேர் டெபனட்டா வாங்கிக்கறோம் இன்னிக்கு எங்கயும் வெளில போக மாட்டோம்னு சொல்லிட்டாங்க. அது தவிர பக்கத்து ஆபீஸ்ல ஒரு நாலஞ்சு பேர் வாங்கிப்பாங்க. சுமாரா ஒரு நாப்பது பேர் சாப்ட்றா மாதிரி ப்ரிப்பேர் பண்ணினா போதும்'' என்று சொல்லி இருந்தாள் சரண்யா.

முதலில் பாத்திரம் பண்டம் எதுவும் சரியாக இல்லை. பெரிசு பெரிசாய் கொஞ்சம் பாத்திரங்கள் வாங்க வேண்டும் என்று வாஞ்சியிடம் சொல்லியிருந்தாள் பிருந்தா.


வாஞ்சி தன் பர்ஸிலிருந்து பணத்தை எடுத் துக் கொடுத்தான்.

''எதுக்கு வாஞ்சி இவ்ளோ பணம்? நா பணம் கேக்கலையே.''

''சரி! உங்கிட்ட பணம் இருக்கா அப்பொ?''

பிருந்தா தலைகுனிந்தாள்.

''நீ ஆரம்பிக்கப் போற தொழிலுக்கு என்னோட அன்பளிப்பா இதை வெச்சுக்கோ பிருந்தா. உன் வியாபாரம் நல்லா நடந்தா இனிமே நீ என்கிட்டேர்ந்து பணம் வாங்குவியா. நீ இல்ல எனக்குக் குடுப்பா?''



வாஞ்சி தந்த பணத்தில் உடனடியாகப் போய் தேவையான பாத்திரங்களை வாங்கி வந்தாள் பத்மாவையும் துணைக்கழைத்துச் சென்று.

''மொதல் நாள் சமையலை நாங்களும் வந்து பண்றோம்'' என்றாள் பத்மா. சரண்யா மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டாள். இருவரும் லீவு போட்டு விட்டு காலையிலேயே வந்து விட்டார்கள்.

வீட்டைப் பார்த்த பத்மா, ''இப்போ

தைக்கு இந்த இடம் போதும். ஆனா வாடிக்கையாளர்கள் ஜாஸ்தி ஆய்ட்டா இந்த இடமும் வசதியும் போதவே போதாதே'' என்றாள்.

''அதுக்கும் நா ஒரு ஐடியா வெச்சிருக்கேன் எங்க பாங்க்குக்கு பக்கத்தடி தள்ளி ரொம்ப நாளாவே ஒரு கார் ஷெட் பூட்டியே கிடக்கு. அது யாருது என்னன்னு விசாரிக்க அதை வாடகைக்குப் பிடிச்சு க்ளீன் பண்ணிட்டா போதும். அந்த எடத்துல இந்த சமையல் வேலையெல்லாம் வெச்சுண்டா அங்கேர்ந்து சப்ளை பண்றதுக்கும் ஈஸியாக்கும். எங்க வாட்ச்மேன்கிட்ட அதைப் பத்தி விசாரிக்க சொல்லியிருக்கேன்'' என்றாள் சரண்யா.

-வித்யா சுப்ரமணியம்

''உருளைக்கிழங்குக்கு உப்பு போதுமா பாரு பிருந்தா.''

''என்ன ரெடியா'' என்றபடி உள்ளே வந்தான் வாஞ்சி.

''வண்டி வந்தாச்சா?''

''போன் பண்ணினா வந்துடும். ரெடியான்னு பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்.''

''ரெடிதான் இன்னும் கால் மணி நேரத்துல ரெடியாய்டுவோம்.''

''டேய் சம்பத் வாடா உள்ளே'' என்று அழைத்தான் வாஞ்சி.

யாரது சம்பத் என்று எல்லாரும் திரும்பினார்கள். பதிமூன்று பதினாலு வயசில் பளிச்சென்ற நிக்கர் சட்டையில் ஒரு பையன் நெற்றியில் பளீரென்று விபூதி இட்டிருந்தான்.

''உனக்கு ஒத்தாசைக்குத்தான் கூட்டிக்கிட்டு வந்தேன். உன்னால முடிஞ்ச



சம்பளத்தைக் கொடு. மூணு வேளை சாப்பாடுதான் அவனுக்கு முக்கியம். டேபிள் டேபிளா நீ அலைய வேண்டாம் எடுத்துக் குடுத்தா இவன் கொண்டு போய் குடுத்துட்டு காசு வாங்கிண்டு வந்துடுவான். என்னடா செய்வயா?''

பையன் தலையாட்டினான்.

''சரி அப்ப நான் போன் பண்ணிடவா?''

'ம்' என்றார்கள்.

வாஞ்சி வெளியேறினான்.

வியாபாரம் சூடுபிடித்து விட்டது. நிறைய பேர் வாடிக்கையாளர்களாக ஆனார்கள். கடக்கட டேபிளுக்கே வரும் சுவையான உணவை யார்தான் விரும்ப மாட்டார்கள். வீட்டில் சுத்தமாய் தயாரித்த உணவு, விலையும் நியாயமாய் இருந்ததால் ஒருவர் சொல்லி மற்றொருவர் என்று வளர்ந்து பிருந்தாவால் சமாளிக்க முடியுமா என்ற பிரமிப்பு எழுந்தது.

வாட்ச்மேன் கார் ஷெட் பற்றி விசாரித்து வந்தான். அது யாரோ ஒரு எம்.எல்.ஏ. உடையதாம். வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு, கார் ஷெட்டை மட்டும் பூட்டி வைத்திருக்கிறாராம், அவருடைய சொந்த உபயோகத்துக்காக. ஆனால் உபயோகிப்பதும் இல்லை. கேட்டால் வாடகைக்கு விடுவாரா என்று தெரியவில்லை.

பத்மாதான் சொன்னாள். ''ஏன் சரண் மாத்யூஸ்கிட்ட கேட்டா என்ன? அவ அந்த எம்.எல்.ஏ.கிட்ட ஈஸியா பேசி உடனே வாங்கிடுவான்னு நம்பறேன்.''

சரண்யா யோசித்தாள். அன்று நந்தகோபாலின் மூக்கை அறுத்து விட்டு வந்த பிறகு மாத்யூஸை பார்க்கவேயில்லை. பாவம் மாத்யூஸ். நந்தகோபாலால் அவளும் சேர்ந்து வருத்தப்படவேண்டிய நிலையில் இருக்கிறாள். அதற்காக இவளுக்காக நந்தகோபாலை அப்பா என்று அழைத்து விட முடியுமா என்ன? அப்போது அவர்களை அவமானப்படுத்தி விட்டு இப்போது உதவி என்று எப்படி போய் நிற்பது என்று யோசித்தாள்.

பத்மாவுக்குப் புரிந்து விட்டது. ''நீ போக வேணாம் சரண். நா வேணா போய் கேக்கட்டா?''

''வேணாம்மா. நானே போறேன்'' என்றாள் சரண்யா.

''மிஸ் சரண்யா உங்களுக்குப் போன்.''

லெட்ஜரை மூடி விட்டு எழுந்து டெலிபோனருகில் சென்றாள் சரண்யா.

''நா மாத்யூஸ் பேசறேன் சரண்.''


சரண்யா திகைத்தாள். இன்னும் சிறிது நேரம் கழித்து மாத்யூசுக்கு அவளே போன் பண்ண வேண்டும் என்றிருந்தாள். இப்

நலம் காண நன்னாளில்

சேரனின் நல்வாழ்த்துக்கள்!







புதிய சீட்டு குரூப்புகள் விஜயதசமி முதல் ஆரம்பம்!

வகை	தவணையும் மாதமும்	சீட்டின் மதிப்பு
1	500 × 50 1,000 × 25 1,250 × 20	25,000
2	1,000 × 50 2,000 × 25 2,500 × 20	50,000
3	2,000 × 50 4,000 × 25 5,000 × 20	1,00,000

வகை	தவணையும் மாதமும்	சீட்டின் மதிப்பு
4	8,000 × 25 10,000 × 20 5,000 × 40	2,00,000
5	7,500 × 40 10,000 × 30	3,00,000
6	20,000 × 25 10,000 × 50	5,00,000
7	20,000 × 50 40,000 × 25	10,00,000

அறிமுகம்செய்வோருக்கும் உறுப்பினர்களுக்கும் அற்புதப் பரிசுகள்!
1.10.93 முதல் 25.10.93 வரை!

பதிவு மற்றும் தலைமை அலுவலகம் :

சேரன் சிட் பண்ட்ஸ் (பி) லிமிடெட்

'சேரன் டவர்ஸ்', 73-83, அரசு கலைக்கல்லூரி சாலை,
கோயம்புத்தூர் - 641 018. போன் : 216197, 217658, 217690

விபரங்களுக்கு :

- சென்னை : எண் 15, 3வது மாடி, ராஜா அண்ணாமலை பில்டிங்ஸ், 19, மார்ஷல்ஸ் ரோடு, போன் : 8273538, 8277965
- மதுரை : 3வது மாடி, K.J.R. காம்ப்ளக்ஸ், 16, வடக்கு வெளி வீதி, போன் : 37276
- திருச்சி : 'ஸ்ரீ காம்ப்ளக்ஸ்' எண் : 3D பிளாக், தரை தளம், 18 & 21, மதுரை ரோடு, போன் : 48210 (PP)
- ஈரோடு : திருக்குமரன் பில்டிங்ஸ், 11-F, மேட்டூர் ரோடு, போன் : 77636
- திருப்பூர் : முதல் மாடி, பிரிமியர் பிளாசா, குமரன் ரோடு போன் : 25000
- சேலம் : கைலாசம் காம்ப்ளக்ஸ், எண் : 80, J.K. செட்டி ரோடு, ஃபாரஸ்ட் ஆபிஸ் எதிரில்



பதமாக பாலைக் காய்ச்சிட
மிருதுவான இட்லிக்கு
சுத்தமான, சுகாதாரமான குடிநீருக்கு
Murugan
10
இணையற்ற எமது மற்ற தயாரிப்புகள்
* தோசை திருப்பி * குழிக்கரண்டி
* சாஸ்ஃபான் * அன்னவெட்டி
* சட்டுவம்
அனைத்து முன்னணி பாத்திர விற்பனையாளர்களிடம் கிடைக்கும்
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3. போன்: 582182



எதுமாதிரியுமில்லாத
புதுமாதிரியா
அஸ்மாஸ்
நேதாஜி ரோடு, மதுரை
சர்ட்டிங், சூட்டிங், ரெடிமேட், சாரீஸ்
மற்றும் அனைத்து ஜவுளிகளுக்கும்

போது மாத்யூஸ் முந்திக் கொண்டிருக் கிறாள்.

''சொல்லுங்க ஆண்ட்டி.''

''ஏன் சரண் கோவமா என் மேல. வீட் டுக்கும் வரதில்ல போனும் பண்றதில்ல?''

''அப்படியெல்லாம் இல்ல. இப்ப நானே உங்களுக்கு போன் பண்றதாத்தான் இருந்தேன். அதுக்குள்ள நீங்க பண்ணிட் டீங்க.''

''என்ன விஷயம் சரண்?''

''நீங்க இப்ப ஃப்ரீயா? நா நேர்ல வந்து சொல்றேனே. ஒண்ணுமில்ல ஒரு சின்ன ஆப்ளிகேஷன்.''

''ஓ.கே. வர்றியா?''

''சரியா ஆறு மணிக்கு வந்துடறேன்'' - சரண்யா டெலிபோனை வைத்தாள்.

பாங்க் முடிந்து புறப்பட்டு சரியாய் ஆறு மணிக்கு மாத்யூஸ் வீடு போய் சேர்ந்தவளை வாசலிலேயே காத்திருந்து வரவேற்றாள் சரண்யா. வாஞ்சியையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் சரண்யா வின் எண்ணம். வாஞ்சிக்கு எதிரில் மாத்யூஸ் வேறு எதுவும் பேச மாட்டாள் என்று நினைத்தாள். நினைத்ததும் வாஞ்சிக்குப் போன் பண்ணிப் பார்த்த போது இல்லை என்று பதில் வந்தது. ஏதோ பேட்டிக்காக போயிருக்கிறானாம். ஏமாற்றத்துடன் டொக் என்று போனை வைத்தாள்.

''வா சரண்'' என்று அழைத்துச் சென் றாள். ''என்ன சாப்பிடறே?''

''காப்பி போதும்.''

''என்ன அப்ளிகேஷன்?''


''ஒண்ணுமில்ல. வாஞ்சியோட ரிலேட் டிவ் லேடி ஒருத்தி இருக்கா. புருஷனை விட்டுட்டு தனியா மூணு குழந்தைகளோடு வேலை எதுவும் கிடைக்காம கஷ்டப்பட றாங்க. படிப்பும் இல்ல. கடைசில சொந்த மாவே தொழில் செஞ்சு சம்பாதிக்கலாம்னு முடிவு பண்ணி ஆபீஸ் போறவங்களுக்கு மத்தியானம் சூடா டெஸ்க் லன்ச் பண்ணி குடுக்கறாங்க. அவங்க இருக்கற எடத்து லேர்ந்து எங்க ஆபீஸ் இருக்கற ஏரியாக்கு தினம் எடுத்துட்டு வர முடியலை. அத னால...''

அந்த கார் ஷெட்டை பற்றியும் அதை வாடகைக்கு பெற்றுத் தரும்படியும் மாத்யூ சிடம் சொல்லி முடித்தாள் சரண்யா.

''செஞ்சுட்டா போச்சு. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. அந்த எம்.எல்.ஏ. நல்ல மாதிரிதான். நீங்க நேராவே போய் கேட்டிருந்தா கூட உடனே சரின்னு சொல்லி யிருப்பார். பரவால்ல நானே கேட்டு வாங் கித் தரேன். அவ்ளோதானே போதுமா?''

சரண்யாவால் பேச முடியவில்லை. கண்கள் பளபளத்தது. ''தேங்க் யூ ஆண்ட்டி...'' என்று தடுமாறினாள்.

மாத்யூசின் பெருந்தன்மை அவளைக் கவர்ந்தது.



எங்கே கீறல்?

கட்டில், தேக்கு மர பர்னிச்சர்களில் கீறல்கள் விழுந்து விட்டால், அதேநிற பூட்பாலிஷால் அந்த இடத்தை நன்றாகத் தேய்த்து உலர விடவும். கீறல் எங்கே என்று பூதக் கண்ணாடி கொண்டுதான் தேட வேண்டும்.

- உஷா

''உங்களுக்கு... உங்களுக்கு வருத்தம் தானே என் மேல.''

மாத்யூஸ் சிரித்தாள். ''மொதல்ல கொஞ்சம் வருத்தமாத்தது. இப்பச் சரி யாய்ட்டேன். என்கிட்ட இதே போல பழகி னாலே போதும்னு தோணிடுத்து.''

''ஆண்ட்டி...''

''அம்மான்னு கூப்பிட மாட்டாயா சரண்?''

''நா அப்படி யாரையாவது கூப்பிட்டா எங்கம்மாவால தாங்க முடியாது ஆண்ட்டி. அவளுடைய உலகமே நான்தான். அவ ளோட மூச்சுக் காற்று கூட சரண் சரண்னு தான் சத்தம் போடும். அம்மான்னு கூப்பிட் டாத்தான் பாசம்னு அர்த்தமா?''

''ச...ரண்...'' மாத்யூஸ் கண்கலங்க அவளை அணைத்துக் கொண்டு அவளது உச்சியில் முத்தமிட்டாள்.

''அப்பொ நான் கிளம்பறேன்'' என் றாள் சரண்யா மெதுவாக.

வேலைக்காரன் காப்பி கொண்டு வந்தான்.

குடித்து விட்டு புறப்பட்டாள். வாச லுக்கு வந்து மொபட்டைக் கிளப்பும் போது வாஞ்சியின் ஞாபகம் வந்தது. அவன் வீட் டுக்கு இன்று போய் பார்த்தால் என்ன தோன்றியது. டைரியைப் புரட்டி விலாசம் பார்த்துக் கொண்டு வண்டியைக் கிளப்பி னாள்.

போர்டிகோவில் சிகப்பு நிற மாருதி நின்றிருந்ததைக் கண்டதும் மனசுக்குள் ஒரு மகிழ்ச்சி அலை பரவியது.

காலிங்பெல்லை அழுத்தி விட்டு ஐந்து நிமிடம் காத்திருந்த பிறகு மெதுவாக தாழ்ப் பாள் விலகும் ஓசை கேட்டது.

தட்டுத் தடுமாறியபடி நிலைக்கதவைப் பிடித்துக் கொண்டு யாரது என்று கேட்பது... இதுதான் வாஞ்சியின் அம்மாவோ.

''மிஸ்டர் வாஞ்சி இருக்காரா? என் பேர் சரண்யா. அவருக்குத் தெரிஞ்சவ.''

''உள்ளே வாம்மா! எனக்குக் கண்ணு சரியாத் தெரியாது. சோபாவில வந்து உட் காரு. குளிக்கண்டிருக்கான். போய்ச் சொல் றேன்.''

''அவசரமில்லே'' - சொல்லி விட்டு மனசுக்குள் பக்கென்று சிரித்துக் கொண்டாள்.

'யாரு சரண்யாவா? மைகாட்! என்ன திடீர்னு வீடு வரைக்கும் வந்திருக்கா?' வாஞ்சிக்கு பாத்ரூமில் கைகால் மனசு எல்லாம் சிறகடித்துப் பறந்தது. அவசர அவசரமாய் சோப்பைக் குழைத்துத் தேய்த்துக் கொண்டு ஷவரைத் திறந்து விட்டான். குளித்துத் துடைத்து டிரெஸ் பண்ணிக் கொண்டு வெளியில் வந்தவனைக் கண்டு ஏமாந்து போனாள் சரண்யா.

'என்ன இந்த ஆள்! வீட்ல கூட பைஜாமா ஜிப்பாதானா? லுங்கி பனியனில் பாத்துச் சிரிக்கணும்னு நெனச்சா...? ச்சீச்சீ என்ன பெண் நான்! இவன் எந்த உடையில் இருந்தால் எனக்கென்ன?'

''வாங்க! என்ன வீடு வரைக்கும் சர்ப்ரைஸ் விசிட்!''

''ஏன் வரக் கூடாதா இந்த அரண்மனைக்கு?''

''அப்படியில்ல... இருங்க கிச்சன் வரை போய்ட்டு வரேன். காப்பியா, கூல்ட்ரிங்கா?''

''காப்பியே போதும். நீங்களா போடப் போறீங்க.''

''எஸ் நான்தான். அம்மாவால முடியாது. இங்க குக் யாரும் இல்ல.''

''உங்கம்மாவை தனியா விட்டுட்டா போறீங்க.''

''அதுக்கு மட்டும் ஒரு பொண்ணை வேலைக்கு வெச்சிருக்கேன். ஆறு மணியானா அவளும் போய்டுவா. காலைல பத்து மணிக்கு வருவா. பேரு அபிராமி. வயசு பதினேழு. தப்பா நினைக்கலைன்னா... உங்களை விடக் கொஞ்சம் அழகாவே இருப்பா. பயங்கர கறுகறுப்பு! மூளை இருக்கே... டிட்டோ கற்பூரம்தான். வசதி மட்டும் இருந்திருந்தா இந் நேரம் ஐ.ஏ.எஸ். ஆகியிருப்பா.''

''ச்சொ ச்சொ ச்சொ...! கொஞ்சம் மூச்சு விட்டுக்கங்க. மொதல்ல காப்பியை போட்டுட்டு அப்புறம் அபிராமி அந்தாதி பாடலாம்...''

ஏனோ அந்த அபிராமியை பார்க்க வேண்டும் போல் தோன்றியது. பாவி இப்படி புகழ்கிறானே! வேண்டுமென்றா, நிஜமாகவா? அது சரி இவன் யாரைப் புகழ்ந்தால் எனக்கென்ன? வந்த காரியம் பற்றிப் பேசாமல் எதற்கு வெட்டிச் சிந்தனை?

''இன்னிக்கு உங்களைப் போன்லட்ரை பண்ணினேன். மாந்தூலை பிருந்தா விஷயமா பார்க்கக் கூட்டிட்டு போலாம்னுதான். கடைசில நா மட்டும் பார்த்து சொல்லிட்டு வந்தேன்.''

''என்ன சொன்னாங்க?''

''எம்.எல்.ஏ.கிட்ட பேசி ஒரு நியாயமான வாடகைக்கு அந்த இடத்தை வாங்கித் தரேன்னு சொன்னாங்க.''

''கரெக்ட் பிருந்தா. அந்த எடத்துல டெஸ்க் லஞ்ச் பண்ண ஆரம்பிச்சுட்டா வாஞ்சிக்கும் மத்தியானம் சாப்ட்டுட்டு போக வசதியாயிருக்கும். கல்யாணம் பண்ணிக்கற வரை சாப்பிடலாம்.''

''கல்யாண ஆசை வந்தாச்சா வாஞ்சிக்கு?''

''ஏன் வாஞ்சிக்குக் கல்யாண ஆசை இருக்கக் கூடாதா என்ன? அது இருக்கட்டும். ஆமா உங்க கல்யாணத்தைப் பத்தி பேசவே மாட்டேன்றீங்க. எப்பொ இன்விடேஷன் தரப் போறீங்க?''

''தந்துட்டா போச்சு. வாஞ்சியே கல்யாணம் பண்ணிக்கும் போது சரண்யா பண்ணிக்க மாட்டாளா என்ன?''

''அதான்! எப்படிப்பட்ட வரன் வேணும்னு சொன்னா வாஞ்சி க்யூல கொண்டு நிறுத்திடுவான்...''

''வாஞ்சிக்கு புரோக்கர் வேலையும் பழக்கம் போலிருக்கு! எங்க பாங்க்ல கிஷோர்னு ஒரு யங் சாப்! அடடா என்ன ஸ்மார்ட்டுன்றீங்க! சும்மா பஞ்சு மிட்டாய் மாதிரி ரோஸ் கலரா, அழகான கிராப் அண்ட் அழகான மீசை ப்ரில்லியண்ட். பண்ணிண்டா அந்த மாதிரி ஆளைத்தான் பண்ணிக்கணும். அந்த ஆளுக்கு முக்கியமான ப்ளஸ் பாயிண்ட் என்ன தெரியுமோ? சோடா புட்டி கண்ணாடி இல்லை. ஜிப்பா போட்டுக்கற ஆசாமியில்லை. எனக்கு இந்த ஜிப்பா போடறவங்கள கண்டா என்னமா எரியுதுன்றீங்க. ஓ சாரி நீங்க கூட சோடா புட்டி... ஜிப்பா... சாரி நா உங்களை கவனிக்கவேயில்ல. பொதுவா சொன்னேன். அப்ப வரேன் டைமாயிடுத்து!''

வாஞ்சி அசடு வழிய பிரமித்து நிற்கும் போதே திருப்தியுடன் மொஃபட்டை கிளப்பி கையாட்டி விட்டுச் சென்றாள்.

(தொடரும்)



குஜராத்தில் தீபாவளி அன்று விடியற்காலையில் ஏழைக் குழந்தைகள் வீட்டின் கதவைத் தட்டி உப்பைக் கொடுத்து, பதிலுக்கு ரூபாய் வாங்கிக் கொள்வார்கள். தீபாவளி அன்று உப்பு வாங்கினால் லக்ஷ்மியே வீட்டுக்கு வருவதாக ஐதீகம். இதனால் செல்வமும் பெருகும் என்ற நம்பிக்கை.

- சாந்தா

வாழைப்பழம் சாப்பிடுங்கள்

பழங்களிலேயே, மிகப் பிரபலமானது வாழைப்பழமே. எல்லாப் பருவங்களிலும் கிடைக்கக் கூடியது. உடலுக்குச் சக்தியைக் கொடுக்கவல்லது. திசுக்களைப் புதுப்பிக்கவும், மேலும், புரோட்டீன், வைட்டமின்கள் கொடுக்கவும் வல்லது.



பழங்களிலேயே மிகவும் சுத்தமானது. ஏனென்றால் அது கெட்டியான தோலுக்குள் இருப்பதால், பாக்டீரியாவினால் பாதிக்கப்படுவதில்லை. முதன் முதலில் இந்தியாவிலும், மலேயாவிலும் விளைந்தது. வாழைப்பழமும், மரம் இரண்டும் மிக விசேஷமாகக் கருதப்படுகிறது. பண்டிகை, திருமணம் போன்ற விசேஷ நாட்களில் வாயிலில் வாழைமரம் கட்டுகிறோம். புராண காலத்தில், ஐரோப்பாவில் வாழைப்பழம், 'சொர்க்கத்தின் ஆப்பிள்' என்று அழைக்கப்பட்டது.

மிகவும் அதிக சத்துக்கள் நிறைந்தது. கலோரிகள் நிறைந்தது. மற்ற பழங்களை விட இதில் நீர் அம்சம் குறைவு. ஒரு பெரிய வாழைப்பழம் 100 கலோரிகள் அடங்கியது. எளிதில் செரிக்கக்கூடிய சர்க்கரைச் சத்து நிறைந்தது. எனவே, உடலுக்கு நிறைய சக்தியைக் கொடுக்கும் தன்மையுடையது. களைப்படைந்து, சோர்வாக இருக்கும் போது உட்கொண்டால், களைப்பு பறந்து விடும்.

100 கிராம் உரித்த வாழைப்பழத்தில் உள்ள சத்துக்கள் :

	(அளவு சதவீதத்தில்)
ஈரப்பசை	70.1 மி.கி.
புரோட்டீன்	1.2 மி.கி.
கொழுப்பு	0.3 மி.கி.
தாதுக்கள்	0.8 மி.கி.
நார்ச்சத்து	0.4 மி.கி.
கார்போஹைட்ரேட்டுகள்	27.2 மி.கி.
கால்சியம்	17 மி.கி.
பாஸ்பரஸ்	36 மி.கி.
இரும்பு	0.9 மி.கி.
கரோட்டீன்	78 மி.கி.
தயமின்	0.05 மி.கி.
ரிபோஃப்ளேவின்	0.08 மி.கி.
நியசின்	0.5 மி.கி.
வைட்டமின்	7 மி.கி.

மேலும் மிகச்சிறிய அளவில் வைட்டமின் ஏ,ஈ,ஜி, மக்னீசியம், கந்தகம், தாமிரம் கிடைக்கிறது. வாழைப்பழம் நிறையச் சாப்பிடுபவர்கள் இளமையாகவே இருக்க முடியும் என்று கூறப்படுகிறது. எளிதில் ஜீரணிக்க உதவுகிறது. உடலிலுள்ள திசுக்கள் வளர உதவியாக இருக்கும். கால்சியம், பாஸ்பரஸ், நைட்ரஜன் போன்றவற்றை உடலில் தங்க வைக்கிறது.

குடல் கோளாறுக்கு :

மிகவும் மிருதுவானதால் குடலுக்கு மிகச் சிறந்தது. குடலில் அல்சர் ஏற்படாமல் இருக்க உதவுகிறது. வயிற்றுச் சுவர்களைக் கெட்டிப்படுத்துவதின் மூலம் அல்சரால் ஏற்படும் தொந்தரவைக் குறைக்கிறது. நன்றாகப் பழுத்த பழம் குடல் புண்ணுக்கு மிகவும் நல்லது.

மலச்சிக்கலுக்கு, பேதிக்கு:

நீர் உறிஞ்சும் தன்மையுள்ள பெக்டின் என்ற சத்து நிறைந்துள்ளதால் மலம் எளிதாக வெளியேற உதவுகிறது. குடலிலுள்ள கெடுதி விளைவிக்கும் பாக்டீரியாக்களை, நன்மைதரும் பாக்டீரியாக்களாக மாற்றவல்லது.

இரத்த பேதி:

சிறிது உப்பு சேர்த்துப் பிசைந்த வாழைப்பழம் மிகவும் நல்லது. நன்றாகப் பழுத்த பழம், சிறிது புளி, சிறிது உப்பு மூன்றும் சேர்த்துச் சாப்பிட்டால் பேதி கட்டுப்படும்.

மூட்டுக்களில் எரிச்சல், வலி ஏற்படும் போது :

மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு வெறும் வாழைப்பழத்தையே உண்ண சரியாகும். ஒரு நாளைக்கு 8 அல்லது 9 வாழைப்பழங்கள் உண்ண வேண்டும்.

அனீமியா :

வாழைப்பழத்தில் இரும்புச் சத்து மிகுந்துள்ளதால் அனீமியா எனப்படும் இரத்த சோகையைக் குணமாக்கவல்லது. இரத்தத்தில் ஹீமோகுளோபினை அதிகரிக்கச் செய்கிறது.

சிறுநீரகக் கோளாறு :

வாழைப்பழத்தில் புரோட்டீன், உப்பு குறைவாகவும், கார்போஹைட்ரேட்டுகள் அதிகமாகவும் இருப்பதால், சிறுநீரகக் கோளாறுக்கு மிகவும் நல்லது. சிறுநீரகம் சரியாக வேலை செய்யாமலும், மூத்திரத்தில் இரத்தம் போவதுமாக இருக்கும் போது, வாழைப்பழம் மிக நல்லது.

காசநோய்க்கு :

வாழைப்பழ ரசம், காசநோயைக் குணமாக்குவதில் அற்புதமானது.

மாதவிலக்குக் கோளாறுகள் :

நன்கு சமைக்கப்பட்ட வாழைப்பூவை தயிருடன் கலந்து உண்டு வந்தால், வலியுடன் வெளிப்படும் மாதவிலக்கு, அதிக இரத்தப்போக்கு உடனே கட்டுப்படும். வாழைப்பூவுக்கு, புரோஜெஸ்ட்ரோன் எனும் ஹார்மோனை அதிகரிக்கச் செய்யக் கூடிய தன்மை இருப்பதால், அதிகமான இரத்தப்போக்கு குறைகிறது.

தீக்காயம் :

நன்றாகப் பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து தீக்காயத்தின் மீது பரப்பி, சுத்தமான துணியில் கட்டினால், உடனே எரிச்சல் குறைந்து குணம் தெரியும். இளம் வாழை இலையும் தீப்புண் எரிச்சலுக்கு மிக நல்லது.

– ராஜி

சுவை அதிகரிக்கும், ஆரோக்கியம் மேம்படுத்தும்





கோத்ரெஜ் அல்ட்ரா ரிஃபைண்ட் ஸன்ஃப்ளவர் எண்ணெய்

அன்னையின் ஒரே அக்கறை தன் குழந்தைகள் நன்றாக ஊட்டச்சத்து மிக்க உணவை உண்ண வேண்டும்; அவர்களின் விருப்பு-வெறுப்பை அறிந்து கவனம் செலுத்துதல் போன்றவைகளாகும். இந்த முக்கியமான பண்பாட்டு கொள்கையை கோத்ரெஜ் நிறுவனம் நன்கு உணர்ந்தவர்கள். கோத்ரெஜ் அல்ட்ரா ரிஃபைண்ட் ஸன்ஃப்ளவர் எண்ணெய் தெரிந்தெடுக்கப்பட்ட சூரியகாந்தி விதைகளினால் பிழிந்து எடுக்கப்பட்டது. இது ஜீரணமாவதற்கு எளிதானது, வைட்டமின்களின் களஞ்சியம். சமையல் எண்ணெயில் அன்னையின் அன்பு நாடுவதெல்லாம் கோத்ரெஜ் ரிஃபைண்ட் ஸன்ஃப்ளவர் எண்ணெய்தானே. நம்பிக்கைக்குப் பாத்திரமானது கோத்ரெஜ் அல்ட்ரா ரிஃபைண்ட் ஸன்ஃப்ளவர் எண்ணெய்.

கோத்ரெஜ்


ஸன்ஃப்ளவர் எண்ணெய்


வீட்டிற்கு வருக
கர்லான் சுகத்திற்கு
வீட்டிற்கு, சுகத்திற்கும், பரவசமூட்டுவதற்கும்
ஏற்றவாறு பிரத்தியேகமாக வடிவு
அமைக்கப் பட்டது கர்லான் சாதனங்கள்.
உங்கள் வீட்டிற்குக் கொண்டு
செல்லுங்கள் கர்லான். நீடித்த சுகத்தைப்
பெறுங்கள். கர்லான் சாதனங்களைத்
தேர்ந்தெடுங்கள்.
Kurl-on®
• மெட்ரஸஸ் • குஷன்ஸ்
Kurlopillo®
• பில்லோஸ் • போல்ஸ்டர்ஸ்
Kurlomat
• டோர்மேட்ஸ் • கார்மேட்ஸ்
Karnataka Consumer Products Ltd.,
Offices in Tamil Nadu: *Madras ☎: 831710; *Madurai ☎: 30564 (PP); *Coimbatore ☎: 34361.


"ராணி சாரீஸ்" சுங்குடிப் புடவைகள்
அகில இந்தியாவிலும் பிரசித்தி பெற்றது !
சாயத்திற்கு உத்திரவாதம் வழங்குவது !!
"ராணி சாரீஸ்" சுங்குடிப் புடவைகள்
போன்
26295
தந்தி
"RANISAREES"
RANEE SAREES
R.S.K
MADURAI.20
Rani. V. SUNDAR RAO
FOUNDER OF
RANEE SAREES
லேபிளையும், RVS ஸ்டிக்கரையும்
பார்த்து வாங்கவும்
ராணி சாரீஸ்
ராணி சு. கிருஷ்ணமூர்த்தி
திருமலை நாயக்கர் மஹால் நேர் பின்புறம் 12, மஹால் 4வது தெரு, மதுரை-625001.
சென்னையில் கிடைக்குமிடங்கள் :
◆ ரெங்காச்சாரி க்ளாத் ஸ்டோர், மயிலாப்பூர். ◆ குமரன் சில்க் டிரேடர்ஸ், தி. நகர்.

நவராத்திரின்னா எங்களுக்கும் ஆசைதான், ஆனால்...

நவராத்திரி ஒன்பது நாட்களும் பெண்கள், தங்களை ஒவ்வொரு வகையில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். பெரியவர்கள் பூஜை, புனஸ்காரத்திற்கு, ஜபங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சிறு வயதினர் தங்கள் துணிமணிகளுக்கும், அலங்காரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால், டீன் ஏஜ் குமரிகள்? இவர்களுக்கு இப்படிபட்ட பண்டிகைகளில் ஆர்வம் இருக்கிறதா? மீனாட்சி கல்லூரி மாணவர்கள் நான்கு பேர் இதைப் பற்றிப் பேசுகிறார்கள்....



படம் : சி. பி. ராமச்சந்திரன்

கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் : அபர்ணா, ப்ரியா, சுமித்ரா, வித்யா.

ப்ரியா : நான் சின்னவளாக இருந்த பொழுது நவராத்திரி என்றால் சின்னக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சமமாக பங்கேற்று வயது வித்தியாசம் பாராட்டாமல் எல்லோர் வீடுகளுக்கும் சென்று வருவோம். ஆனால் இப்பொழுது நம் போன்ற கல்லூரிப் பெண்களால் அந்த அளவு



அடைக்கு அரைக்கும்போது அரிசி, பருப்பு வகைகள் ஊற வைக்கும்போது, அதனுடன் கொண்டைக் கடலையையும் சேர்த்து ஊற வைத்து அரைத்து, அடை சுட்டால் ருசியாகவும் குழந்தைகளுக்குச் சத்தான ஆகாரமாகவும் அமையும்.

- கன்னியாகுமரி

ஈடுபட முடியவில்லை. இதற்கு என்ன காரணம்?

அபர்ணா : நம்மால் ஈடுபட முடியாத காரணம் மிகுந்த வருத்தத்தைத் தான் கொடுக்கிறது. காலம் காலமாக கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி ஒரு பழமை வாய்ந்த சிறப்பான பண்டிகை. முன் காலத்தில் அதாவது நம் பாட்டிமார் காலத்திலிருந்து துர்கையின் வெற்றியைப் போற்றும் இந்துப் பண்டிகை என்கிற எண்ணத்தில் இந்துக்களின் வீடுகளில் மட்டுமே கொண்டாடப்பட்டு வருகிறது.

ப்ரியா : இந்துக்களின் வீடுகளில் மட்டும்தான் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது உண்மைதான். ஆனால் நாம் குழந்தைகளாக இருந்த நாட்களில் இந்துக்களை மட்டும்தான் கொலுவுக்கும் அழைப்போம். ஆனால் இப்பொழுது மாற்றம் இருக்கிறது இல்லையா?

சுமித்ரா : நிச்சயமாக. 'காஸ்மோபாலிடன் அவுட்லுக்' என்று சொல்கிறார்களே! அதை நமது சமுதாயத்தில் முழுமையாக செயல்படுத்தவில்லை என்றாலும் ஓரளவு நடைமுறையில் செயல்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

வித்யா : ஆம். இன்றைய நாட்களில் இந்துக்கள் அல்லாதவர்களையும் நாம், கொலுவை வந்து பார்க்கும்படி அழைப்பு விடுக்கிறோம். அவர்களும் மிக சந்தோஷத்துடன் கலந்து கொள்கிறார்கள்!

அபர்ணா : காலம் மாறிக் கொண்டிருக்கும் இந்நாட்களில் நம்முடைய டிரஸ் விஷயத்தில் மட்டும் அதாவது இந்த நவராத்திரி நாட்களில் சொல்கிறேன் : இன்னும் கொஞ்சம் பழமை ஒட்டிக் கொண்டிருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

ப்ரியா : நீ சொல்வது முற்றிலும் உண்மை. பாட்டிகள் இருக்கும் சில வீடுகளில் நம் போன்ற காலேஜ் பெண்களை உடை விஷயத்தில் அவர்கள் இஷ்டத்திற்கு உடுத்திக் கொள்ள அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள்.

அபர்ணா : ஆம். 'தாவணிதான் கட்டிக் கொண்டு போக வேண்டும். சுடிதார் போட்டுக் கொண்டு போகக் கூடாது' என்று நம்மை தடை செய்வது மனதுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

சுமித்ரா : ஒழுக்கத்தைப் போதிக்கும் கல்லூரிக்கே நாம் சுடிதாரில் போகிறோம். அது ஒரு உடல் தெரிகின்ற ஆபாசமான உடை என்றால் கல்லூரியில் தடை விதிக்க மாட்டார்களா?

வித்யா : தாவணி அல்லாத வேறு உடை என்றால் அதற்காக நாமும் ஒரு மிடியிலோ, மாக்சியிலோ ஒரு வீட்டிற்குப் போய் நிற்கப் போவ தில்லை. உடல் தெரியாமல், அடுத்தவர்கள் பார்வைக்கு அசிங்கமில்லாமல் நமக்கு சௌகர்யமான ஒரு உடையை அணிந்து கொள்ளலாம் இல்லையா?

அபர்ணா : அதுமட்டுமல்ல. போகும் ஒவ்வொரு வீட்டிலும் பாடச் சொல்லி வற்புறுத்துவது மிகவும் தர்ம சங்கடமான ஒரு காரியமாக இருக்கிறது.

ப்ரியா : ஆம். எல்லோரும் வீட்டில் தங்கள் குழந்தைகளுக்கு வாய்ப்பாட்டு கற்று வைத்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் நாட்டியம், அல்லது இன்ஸ்ட்ருமெண்டல் என்று கற்றுக் கொள்ளும் பொழுது, எல்லோருக்கும் பாடத் தெரியும் என்று சொல்லி விட முடியாது.

சுமித்ரா : அவர்கள் பாடச் சொல்ல, பாடத் தெரிந்தவர்கள் பாடி விடுகிறார்கள். பாடத் தெரியாதவர்கள், அவர்கள் வற்புறுத்தும் பொழுது பாடத் தெரியாது என்று கூறி அசடு வழிந்து விட்டு, அவர்கள் வீட்டு சுண்டலை மட்டும் வாங்கிக் கொண்டு வருவது மிகவும் வெட்கமான செயலாகத்தான் இருக்கிறது. ஆகையால் 'தெரிந்தது ஏதாவது ஒன்றைப் பாடித்தான் ஆக வேண்டும்' என்று வற்புறுத்துவதைத் தவிர்க்கலாம்.

வித்யா : சுண்டல் என்று சொன்னவுடன் ஒன்று நினைவுக்கு வருகிறது. நவராத்திரி ஒன்பது நாட்களும் ஒவ்

இப்போது

மகப்பேறினால்



நீங்கள் மிக அதிக

பரவசத்தை அடைவீர்கள்!

வாருங்கள், விப்ரோ பேபி ஸாஃப்ட் கிளப்பில் சேருங்கள்

அபரிமிதமான நற்பயன்கள்

- இலவச குழந்தை பாதுகாப்பு உத்திகள் மற்றும் தகவல்
- தரமான குழந்தை தயாரிப்புகள் மீது கவர்ச்சிகரமான தள்ளுபடி
- குழந்தைப் போட்டிகள், குழந்தைக் காட்சிகள், குழந்தை போனன்ஸாக்கள்.

முந்துங்கள்! உடனே எழுதுங்கள்

மற்றும் ஒரு எதிர்பாராத வெகுமதியைப் பெறுங்கள்!

இலவச உறுப்பினர்

குழந்தைகள் (6 மாதங்கள் வரை) உள்ள தாய்மார்களுக்காக மற்றும் மகப்பேறு எய்தும் தாய்மார்களுக்காக (3 மாதங்களுக்குள்)

கீழ்கண்ட கூப்பனை நிறைவு செய்து விப்ரோ பேபி ஸாஃப்ட் கிளப், த.பெ. எண் 2243, அண்ணா சாலை ஹெட் பி.ஓ., சென்னை 600 002, என்ற முகவரிக்கு அனுப்பவும்.

அன்னையின் பெயர் ....

முகவரி ....

....

நகரம் .... பின் .... தொ. பேசி ....

குழந்தையின் பெயர் ....

குழந்தை பிறந்த தேதி ....

M M

வாருங்கள் வந்து சேருங்கள்

விப்ரோ

பேபி ஸாஃப்ட்

கிளப்

everest/93/WL/82-M-tm

வொரு வீடாகச் சென்று, கொலுவைப் பார்த்துவிட்டு, சுண்டலை வாங்கிக் கொண்டு வருவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அபர்ணா : சாயந்திரம் நீட்டாக டிரஸ் செய்து கொண்டு, ஒரு புடைவைக் கவரைக் கையிலெடுத்துக் கொண்டு வீடு வீடாகப் போவது என்பது ஏதோ சுண்டல் கலெக்ஷன் செய்கிறாற்போல் இருக்கிறது. இந்த மாதிரி சுண்டல் கொடுப்பதையோ, வாங்கிக் கொள்வதையோ, அசிங்கம் என்று சொல்லவில்லை. ஆனாலும் வெட்கமாகத்தான் இருக்கிறது. கொலுவிற்குக் கூப்பிடுபவர்கள் அந்த ஒன்பது நாட்களில் ஓரிரு குறிப்பிட்ட தேதிகளை முன்கூட்டியே சொல்லி கூப்பிட்டுவிட்டால், நம் வீட்டிற்கு வருபவர்களை நாம் கவனிக்கவும், அடுத்த வீடுகளுக்குப் போகவும் நமக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே எளிதாக இருக்கும்.

ப்ரியா : நம் போன்ற காலேஜ் பெண்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த சில சங்கங்கள் போட்டிகள் வைக்கலாம். அப்பொழுது எல்லா மதத்தினரும் கலந்து கொண்டு, நவராத்திரியைப் பற்றிய பெருமைகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். மேலும் தமிழ் நாட்டிலிருந்து பிரபலமாகிய நவராத்திரி, கர்நாடக மாநிலம் மைசூரில் '*தசரா*' என்கிற பெரிய பண்டிகையாக கொண்டாடப்பட்டு மிகவும் பிரபலமாகி இருக்கிறது. இது நங்கையர் மட்டும் போற்றும் நவராத்திரியாக அல்லாமல் நாடே போற்றும் நவராத்திரியாக மாற வேண்டும்.

அபர்ணா : நவராத்திரியை நாம் நங்கையருக்காக என்ற அளவில் பார்ப்பதை விட சமூக நோக்கோடும் பார்க்க வேண்டும். எத்தனையோ பேர்களுக்கு இக் குடிசைத் தொழில் மூலம் வாழ்வு அமைகிறது என்பதை நினைவுகூர வேண்டும்.

சுமித்ரா : அதுமட்டுமல்ல. இன்றும் கும்பகோணம் என்கிற ஊரில் நவராத்திரி நாட்களில் மட்டும் புராதன பொம்மைகள் பொது மக்களின் பார்வைக்காக் வைக்கப்படுகிறது. நம் நாட்டினர் அல்லாது வெளிநாட்டினைச் சேர்ந்த சில வல்லுனர்கள் அதன் வேலைப்பாட்டையும், அழியாது நிற்கும் வண்ணத்தையும் கண்டு ஆச்சர்யப்பட்டு ஆராய்ச்சி கூட மேற் கொள்கிறார்களாம்.

வித்யா : இவ்வளவு சிறப்பும் மேன்மையும் வாய்ந்த நவராத்திரியில் நாமெல்லாம் இன்னும் சிறப்பாக பங்கேற்க வேண்டும். பெரியவர்கள் சொல்லும் சில நிபந்தனைகளால், மாணவிகளாகிய நாம் ஒதுங்கி விடக்கூடாது. நம் பக்கம் சிறிய தவறுகளையும் பரிசீலனை செய்து, நாம் திருத்திக் கொள்ள வேண்டும். அதே போல் பெரியவர்களும் நம் விருப்பங்களுக்கு விட்டுக் கொடுத்து செயல்பட்டால் இன்னும் சிறப்பாக அமையும் என்று நம்புகிறேன்.

அபர்ணா : நாம் இப்பொழுது விவாதித்த சில விஷயங்கள் கூட யாரையும் நோகடிப்பதற்காகவோ, உதாசீனப் படுத்துவதற்காகவோ சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம், தற்கால காலக்கட்டத்தில், மிகவும் பிரபலமாக பேசப்பட வேண்டிய ஒரு புனிதமான பண்டிகை காரணமில்லாத சில காரணங்களுக்காக, நம் போன்ற மாணவிகளால் புறக்கணிக்கப்பட்டு விடக் கூடாதே என்கிற எண்ணத்தில் தான் சொல்லப்பட்டது.

பெண் விடுதலை, பெண் சுதந்திரம் என்று பேசும் நாம் பெண்களால், பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த ஒன்பது நாள் நவராத்திரியைச் சிறப்பாகக் கொண்டாடவில்லையென்றால், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தை நாமே இழக்கிறோம் என்றல்லவா ஆகிறது!

தொகுப்பு : மாலதி சந்திரசேகரன்
அட்டை வண்ணப்படம் : யோகா

காராமணி பயிறை 2 மணி நேரம் ஊற வைத்து, வெங்காயம், பச்சை மிளகாய், சிறிது சோம்பு, சிறிது லவங்கம், உப்பு தேவையான அளவு போட்டு அரைத்து வடை சுட்டு சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். இதனைச் சூடாக சாப்பிட வேண்டும். - கன்னியாகுமரி



ஸ்ரீமஹாமேரு

– அம்பாளின் வடிவம்

**ஸ்ரீ சக்கரம் போன்ற யந்திரங்களைப் பெண்களை வைத்துப் பூஜை செய்யலாமா?
ஸ்ரீமஹா மேரு என்று எதைக் குறிப்பிடுகிறார்கள்?
ஸ்ரீமஹா மேருவை நம் இல்லங்களில் வைத்துப் பெண்மணிகள் தாங்களே பூஜை செய்யலாமா? - போன்றவைகள் பற்றிய விவரங்களை அறிய ஸ்ரீவித்யா உபாசகர் திரு. முருக பூஷணம் அவர்களைச் சந்தித்தோம்.**

திரு முருக பூஷணம் அவர்கள் கன்னியாகுமரி அம்மனுக்குக் கிரீடம் செய்து தந்தவர். திருச்சி செல்வ மாரியம்மன் கவச திருப்பணியையும் தன்கைகளாலேயே செய்தவர். மலேஷிய நாட்டில் 'இல்லாங்' என்ற ஊரில் ஓராண்டு காலத்திற்கு மேல் தங்கி இருந்து ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோவிலில் உள்ள அனைத்து தெய்வ மூர்த்திகளுக்கும் கிரீடங்களும், கவசங்களும் செய்து கொடுத்தவர். இவர் காலஞ்சென்ற இசைமேதை திரு எம்.கே. தியாராஜ பாகவதரின் மைத்துனராவார்.

''1974 வரை ஸ்ரீமஹா மேரு என்றால் எனக்கு என்னவென்றே தெரியாது. ஒரு நாள் கடையில் இருந்தபோது இரண்டு பெண்கள் என்னைத் தேடி வந்து ஸ்ரீமஹா மேரு செய்து தர வேண்டும் என்று கேட்க, ''அம்மா எனக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. கும்பகோணம் போனால் செய்து தருவார்கள்'' என்றேன். அப்பெண்களும் தொடர்ந்து இரண்டு முறை வந்து விடாப் பிடியாக என்னைக் கேட்க - எனக்கு என்ன செய்வது எனப் புரியாத நிலை. அவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருவதாகச் சொல்லிச் சென்றனர்.

இரவு வீடு திரும்பிய பின்பு எப்படி ஸ்ரீமஹா மேருவைச் செய்யலாம் என நான் வரைந்து பார்த்துக் கொண்டே



அப்படியே நாற்காலியில் தூங்கிப் போய் விட்டேன். இரவு சுமார் 2 மணியிருக்கும் - ஒரு வட்ட வடிவமான ஒளி அதன் நடுவில் ஒரு குழந்தையின் பாதங்கள் கூத்தாடியது. உடனே எழுந்து பூஜை அறையில் போய் வணங்கினேன். ஸ்ரீ மேருவை வரையத் தானாக வந்தது. அதைச் செய்து எடுத்துக் கொண்டு காஞ்சி மாமுனிவரைத் தரிசிக்கக் கலவை சென்றேன். அவர் மௌன விரதத்தில் இருக்க - ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், நான் உருவாக்கிய ஸ்ரீமேருவை ஆசிர்வதித்துக் கொடுத்ததுடன் - அதுவரை ஸ்ரீமேருவைச் செய்து கொண்டிருந்தவர் காலமாகி விட்டதாகவும், அவர் விட்ட பணியை என்னைத் தொடரும்படியும் அருளிச் செய்தார். அன்று முதல் அவர் கட்டளையைச் சிரமேற் கொண்டேன்.

ஸ்ரீமஹா மேரு என்பது சிவலிங்கம் போன்றது. சிவலிங்கம் எப்படி ஸ்வாமியின் அரூப வடிவமோ அதே போல ஸ்ரீ மஹாமேரு தேவியின் அரூபத் திருமேனி. பிரமிடு போன்ற இதன் அமைப்பில் ஒன்பது பகுதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு ஆவரணம் எனப்படும். அம்பாள் வழிபாட்டிற்கு ஒரு முக்கிய சாதனம் - ஸ்ரீ மஹாமேரு. ஸ்ரீ சக்கரம் எனப்படும் யந்திரமும், ஸ்ரீ மஹா மேருவும் ஒன்றுதான். ஸ்ரீ சக்கரத்தின் கன பரிமாண உருவம்தான் ஸ்ரீ மஹா மேரு. ஒவ்வொரு ஆவரணத்திற்கும் தனியான பெயர் உண்டு. ஆவரணங்கள் ஒவ்வொன்றிலுமே பல தேவியர்கள் வீற்றிருந்து அன்னையின் கட்டளையைச் சிரமேற் கொள்கிறார்கள்.



''நவாவரண பூஜை'' என்பது ஸ்ரீ மஹா மேருவுக்கு மட்டுமே உரிய சிறப்பான பூஜையாகும். ஸ்ரீஹயக்கிரீவர், துர்வாசர், அகஸ்தியர், ஆதிசங்கரர், பாஸ்கர ராயர், சர்ஜான்வுட்ராஃப் போன்றவர்களால் பல்வேறு காலகட்டங்களில் இந்த வழிபாடு வெகு பிரகாசமாக வெளிக் கொணரப்பட்டது.

9 கோணங்களில் 5 கோணங்கள் சக்தி கோணமாகவும் 4 கோணங்கள் சிவ கோணமாகவும் வழிபடப்பட்டு வருகிறது. ஸ்ரீமஹாமேருவை யார் வேண்டுமானாலும் வீட்டில் வைத்து வழிபடலாம். ஆனால் இதற்கென ஒரு சின்ன விதி மட்டும் உண்டு. இல்லறத்தில் உள்ளவர்கள் 5 கோணமுள்ள சக்தி கோணத்தைத் தங்களைப் பார்க்கும்படி வைத்துப் பூஜை செய்ய வேண்டும். இது குடும்பத்திற்கு வேண்டிய சகல சௌபாக்கியங்களையும் கொடுக்கும். துறவிகளும், இல்லறத்தில் ஈடுபடாதவர்களும் நான்கு கோணங்கள் கொண்ட சிவ கோணத்தைத் தங்களைப் பார்க்கும்படி வைத்து அந்தரங்க சுத்தியுடன், உடல் மன ஒருமைப்பாட்டுடன் பூஜை செய்தல் வேண்டும். இப்படிப்பட்டவர்கள் செய்யும் பூஜையின் பலனாக உலக க்ஷேமத்துடன் - பூஜை செய்பவரும் பிறவிப் பிணி நீங்கி ஜீவன் முக்தியைப் பெறுவர்.

நித்திய பூஜைகளில் 'ஸ்ரீவித்யா உபாசனையாக' ஒரு குரு உபதேசம் பெற்று பூஜைகள் செய்வது ஒருவகை. அவகாசமில்லாதவர்கள் ஒரு சிறிய ஸ்ரீமேருவை அல்லது ஸ்ரீசக்ரத்தை வைத்து தேவி கட்கமாலா, லலிதாதிரிசதி, ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம், தேவி போன்றவைகளைப் பாராயணம் (அபிஷேகம், அர்ச்சனைகள், ஆராதனைகள்) செய்தும் பலன் பெறலாம்.

''நவாவரண பூஜை'' செய்ய விரும்புவோர் நிச்சயம் ஒரு குருவிடம் தீட்சை பெற்ற பின்பே செய்ய வேண்டும். பண்ருட்டி கண்டிகையில் (தாம்பரம் - படப்பை வாலாஜாபாத் மார்க்கத்தில் உள்ளது) ஸ்ரீநகரம் என்னுமிடத்தில் ஸ்ரீமஹாமேரு தியான நிலையத்தில் இந்தத் தீட்சையும், உபதேசங்களும் விரும்பி வருகின்ற அனைவருக்குமே வழங்கப்படுகின்றன. இந்தத் தியான நிலையத்தில் முக்கிய சிறப்பு

9 ஆவரணங்களும் - அதன் பூஜா பலன்களும்

முதல் ஆவரணம் "த்ரைலோக்கிய மோகன சக்ரம்" எனப்படும். இதை வழிபடுவதால் மூவுலகுமே வசப்படும் என்பார்கள். இச்சக்கரத்தின் முதல் ரேகையில் அஷ்டமாசித்திகளும், இரண்டாவது ரேகையில் அஷ்டமாதாக்களும், மூன்றாவது ரேகையில் பத்து முத்ரா தேவிகள், சர்வ ஸம்க்ஷோபிணி முதல் சர்வ திரிகண்டா வரை அமர்ந்துள்ளனர். இதைப் பூஜிப்பவன் மகாபெரிய சக்திகளை அடைகிறான். ஸ்ரீ பிராம்மி அவனது நினைவாற்றலைப் பெருக்க, கௌமாரி ஆளுமை தர, மஹாலட்சுமி பெரும் செல்வம் தர - மாஹேஸ்வரி நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்கிறாள்.

இரண்டாவது ஆவரணம் பதினாறு இதழ்கள் கொண்ட தாமரையின் உருவிலிருக்கும் - "சர்வாசா பரிபூரகம்" எனப்படும். தீய புத்தி அகற்றி நல்ல புத்தியைத் தருகின்றது இந்த ஆவரண பூஜை.

எட்டு தளங்களுடன் கூடிய தாமரையின் வடிவிலிருக்கும் மூன்றாவது ஆவரணம் "ஸர்வஸம்க்ஷோபணம்" எனப்படும். காமாதி இச்சைகளிலிருந்து விடுபட்டுத் தேவி பூஜை, தியானம் இவைகளில் ஈடுபட இந்த ஆவரண தேவதைகள் உதவுகின்றனர்.

நான்காவது ஆவரணம், "ஸர்வஸௌபாக்கிய தாயகம்" எனப்படும். இதில் சந்திரனின் வடிவில் அமைந்துள்ள தேவி சாதகனுக்கு உலகிலுள்ள சகல சௌபாக்கியங்களையும் தந்து காத்து - பின்பு ஆன்மாவை விடுதலை செய்து, தன்னடியில் சேர்த்துக் கொள்கிறாள்.

ஐந்தாவது ஆவரணமான "ஸர்வார்த்த ஸாதகத்தில்" திருமாலின் 10 அவதாரங்களுமே நிலை பெற்றுள்ளன. சாதகனுக்கு தேக, மனோ, ஆத்ம பலன்களையும் தந்து மோட்சம் பெற இந்த ஆவரண தேவிகள் துணை செய்கின்றனர்.

ஆறாவது ஆவரணமான "ஸர்வரக்ஷாகரத்தில்" தேவி சூரியனின் வடிவமாகக் காட்சி தருகிறாள். தீயகுணங்களை அழித்து மனக் கட்டுப்பாட்டையும் தருகிறாள்.

"ஸர்வரோகஹரம்" எனப்படும் ஏழாவது ஆவரணத்தில் 8 வாக்கு தேவதைகள் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்கள். தேவியின் அம்சமாக இங்கே இருப்பவர் புத பகவான்.

எட்டாவது ஆவரணம், "ஸர்வஸித்திப்ரதம்" எனப்படும் இந்தப் பூஜை மூலத்திரிகோணத்தில் செய்யப்படுகிறது. பாசம், அங்குசம், கரும்புவில், பாணம் ஆகிய அம்பாளின் 4 ஆயுதங்களும் இங்கு வழிபடப்படுகின்றன. தேவி இங்கு கேது வடிவில் இருக்கிறாள். வளைந்து நெளிந்து சலனப்படும் மனத்தை கரும்புவில் - தேவியின் வழிபாட்டில் நிலை நிறுத்துகிறது. பாணம் மன்மதனின் காம சக்தியை அழிக்கிறது. அங்குசம் தீமைகளை அகற்றி நல்வழிப்படுத்த - பாசம் - மனத்தை உலகியல் கவர்ச்சிகளிலிருந்து விடுபட்டு அன்னை வழிபாட்டில் ஈடுபட வைக்கிறது.

எல்லா ஆனந்தங்களுக்கும் இருப்பிடமான 9 - வது ஆவரணம் "ஸர்வானந்தமய சக்ரம்" எனப்படும். இதில் அம்பாள், ஈஸ்வரனுடன் இணைந்து "அர்த்த நாரீஸ்வரனாகக்" காட்சி தந்து சாதகனுக்குப் பேரின்பமளித்து பிரம்ம நிலையில் ஒன்ற வைக்கிறாள்.

முக்கோணவடிவமாக அமைந்துள்ள இதில் அன்னையைச் சுற்றிலும் பக்கத்திற்கு 5 தேவிகளாக 15 நித்யா தேவிகள் ஏவல் செய்கின்றனர். 16 - ஆவதாக ஸ்ரீ மஹா நித்யாவும் படைத்தலைவியாக ஸ்ரீ வாராஹியும், மந்திரியாக ஸ்ரீ ஸ்யாமளாவும் அன்னையின் ஆணைகளை நிறைவேற்றக் காத்து நிற்கின்றனர்.

அம்சம் இங்கு விக்ரகங்களே கிடையாது. சக்தியை தந்திர சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடி யந்திரங்கள் அமைத்து மந்திர ரூபமாகவே இங்கே வழிபாடு செய்யப்படுகிறது.

ஸ்ரீசக்கரம் போன்ற இயந்திரங்களை ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருமே செய்யலாம் ஆத்மாவிற்கு ஏதுவேற்றுமை? அது அனைவருக்குமே ஒன்றுதானே? கணவன், மனைவி இருவருமே தம்பதிகளாக அமர்ந்து பூஜை செய்வது மிகவும் விசேஷம். அதிலும் இருவருமே தீட்சை பெற்று பூஜை செய்வது மிகவும் விசேஷம். வீட்டில் விக்ரகங்களை வைத்துக் கொள்வோர் மிகவும் முக்கியமாக ஒன்றை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் வைக்கும் விக்ரகங்களின் உயரம் 7 அங்குலங்களுக்கு மேல் போகக் கூடாது" என முடித்தார் ஸ்ரீவித்யா உபாசகர் ஸ்வாமி முருக பூஷணம் அவர்கள்.

சந்திப்பு : வைதேகி தேசிகன்



லோ கேலரி ப்ரை

பொன்னிறமாக வெங்காயத்தை வதக்க அதிக எண்ணெய் சேர்க்க வேண்டாம். சிறிது எண்ணெயில் வதக்கிவிட்டு அதில் கொஞ்சம் தக்காளிச் சாற்றைச் சேர்த்து நன்கு வதக்கவும். பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். சுவையும் கூடும். உடலுக்கும் அதிக எண்ணெயைச் சேர்ப்பதால் ஏற்படும் தீமை தவிர்க்கப்படும்.

- உஷா ஸ்ரீகுமார்

இந்த மாதம் எப்படி?

அக். '93



மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

மாதத்தின் முதல் பத்து நாட்களுக்குச் சாதாரணமான பலனே நடக்கும். எனவே புதிய முயற்சி எதையும் செய்யாமல் இருக்கலாம். பிறகு ஏற்படும் குரு பெயர்ச்சி நல்ல நிலையை உருவாக்கும். சுபநிகழ்ச்சிக்கு இடமுண்டு. வீடு, வாகன யோகம் நன்றாக உள்ளது. எழுத்தாளர்களுக்கு ஏற்றதொரு சூழ்நிலை உருவாகும். அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே நல்லதொரு காலகட்டம் ஆரம்பமாகிறது. என்றாலும் 4ம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சற்றுக் கூடுதலான நன்மை உண்டு. மற்றபடி தரணி ஆளத் தகுந்த பரணி நட்சத்திரக்காரர்களும், கிருத்திகை 1-ம் பாதத்தில் பிறந்தவர்களும் கடந்த 10 மாதங்களில் பெற்றிருந்த மனக்குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். அரசுப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. இலாப ஸ்தானத்தில் உள்ள சனி உங்களுடைய தொழில், மற்றும் வியாபாரம் ஆகியவைகளில் நஷ்டம் ஏற்படாது பார்த்துக் கொள்ளுவார். ஆனால் நிதிப் பொறுப்பில் உள்ளவர்கள், மற்றும் இயல்பாகவே முன்கோபத்தன்மையுடையவர்கள் ஆகியோர் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பொருளிழப்புக்கும், பொல்லாப்புக்கும் ஆளாகும் விதத்தில், கேதுவின் சஞ்சாரமும், உடல்நலக்குறைவு ஏற்படும் வகையில் இராகுவின் சஞ்சாரமும் அமைந்துள்ளன. எனவே கணபதியைத் தொழுவது நல்லது. துர்க்கைக்குரிய ஸ்லோகங்களையும் படிக்கலாம்.

ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 - ஆம் பாதங்கள்.

சனீஸ்வரன் பத்தாம் இடத்தில் இருப்பினும், இந்த இராசிக்காரர்களுக்கு, அவர் தரும் கருமாதிபதி யோகத்தைத் தரவல்லவர் என்பதால் உங்கள் தொழில், மற்றும் வியாபாரம் நல்ல நிலையிலேயே இருக்கும். ஆயினும் ஆறாமிடத்தில் குரு மறைவதாலும், ராசிநாதன் சுக்கிரன் முதல் வாரத்திற்குப் பின் நீச்சம் பெறுவதாலும் சிற்சில பிரச்னைகள் உருவாகலாம். அது தாம்பத்ய உறவிலும் ஏற்படலாம். காவல் துறையினருக்குப் புகழ் சேர்க்கும் மாதமாக இருக்கும். மாமனார் மற்றும் தாய்வழி உறவினர்களினால் சுப நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடாகும். அது திருமண நிச்சயமாகவும் இருக்கலாம். அல்லது வீடு, வாகன, நில சம்பந்தமான இலாபமுமாகவும் அமையலாம். அரசியலில் உள்ளவர்களுக்கு அலைச்சல் தரும் மாதமாக அமையும். பதவி மாற்றமோ, அல்லது இறக்கமோ கூட ஏற்படலாம். மாதத்தின் பிற்பகுதியில் ஆதித்தனால் கலைஞர்களுக்கும் எழுத்துலக மேதைகளுக்கும் பரிசுகளும், பட்டங்களும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இந்த ராசிக்காரர்களுக்கு இந்த மாதத்தின் இரண்டாம் வாரம் முதல் குருவின் பார்வை ஏற்பட்டு இதுவரை இருந்த ஏற்றத் தாழ்வுகள் குறையலாம். மற்றும் குடும்பத்தில் மாதம் பூராவும் மகிழ்ச்சியான சூழ்

நிலை இருக்கும். சுபநிகழ்ச்சி ஒன்று நடை பெறும். ஆனால் நீச்ச சூரியனும், புதனும் மாதத்தின் பிற்பகுதியில் சில பிரச்னைகளை உருவாக்கலாம். எந்த நிலையில் உள்ளவர் களுக்கும் இது பொருந்தும். ஆயினும் குரு பார்ப்பதால் பாதிப்பு அதிகமிருக்காது. தாயார் வழி பாட்டனாருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்படும். வீடு வாங்கும் யோகம் சிலருக்கு ஏற்படும். குலுக்கல் முறையில் ஒதுக்கப்படும் அரசு வீடுகளில் ஒன்று உங்க ளுக்குக் கிடைக்கலாம். கடன் தொல்லை குறைந்து, நகை முதலானவை வாங்கும் யோகமும் படிப்படியாக உண்டாகும். நகைச்சுவை நடிகர்களுக்கு நல்லதொரு யோக காலம் ஆரம்பமாகும். குடும்பத்தில் அமைதியும் ஒற்றுமையும் நிலவும். கலைப் பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கு இலாபம் கூடும். ஆட்சியில் உள்ள சனீஸ் வரனை குரு பார்ப்பதால் எதிரிகள் அடங்கி இருப்பர். தசாபுத்தி சரியில்லாதவர்களுக்கு இடமாற்றத்திற்கு வாய்ப்பு உண்டு.

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

அஷ்டமத்தில் சனி இருக்கிறாரே என்று வேதனைப்பட்டவர்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி சாதகமான சூழ்நிலையை உரு வாக்கும். உங்களுக்கு ஏற்பட்ட சோதனை கள் விலகி சாதனை புரியும் நிலை ஏற்படும். முதலிரண்டு வாரங்களுக்கு சுக்கிரனால் சுக முண்டு. சுபநிகழ்ச்சிகளுக்கும் இடம் உண்டு. வீடு வாங்க வேண்டுமா? நகை களைச் செய்ய வேண்டுமா? அனைத்திற்கும் அசுர குருவும், தேவகுருவும் ஆசி புரிய இருக்கிறார்கள். குழந்தைகளின் கல்வி நலன் நன்றாக அமையும். நீச்ச சூரியன், ஒரு பெண் மூலம் கலகம் உண்டாகக் காரணமாக இருக்கலாம். எனினும் வினைதீர்க்கும் விநாயகனின் அருளும் கேதுவின் மூலம் கிடைக்க இருக்கிறது. புதிய திட்டங்களைப் போடலாம். முடக்கப்பட்ட தொழில் மீண் டும் ஆரம்பிக்கலாம். அதற்கான உதவிகள் கிடைக்கும். மாதத்தின் பிற்பகுதியில் தந்தை யின் உடல்நிலை சற்று பாதிப்புக்கு ஆளாக லாம். கண் சம்பந்தமாகக் கூட அப்படிப் பட்ட நிலை ஏற்படலாம். மனைவியின் உடல்நிலை கூட சற்று கவலையைக் கொடுக்கும். மற்றபடி அன்றாடப் பணிகள் அதிகம் பாதிக்கப்பட நியாயமில்லை.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம்.

உள்ளபடியே சிம்ம ராசிக்காரர்கள் அரச யோகத்துடன் வாழப் பிறந்தவர்கள். குறிப் பாக மகத்தை நட்சத்திரமாகக் கொண்டவர்





கள் ஜகத்தை ஆளப் பிறந்தவர்கள்தான். கன்னியில் குரு இருந்தவரை இந்த இராசிக்காரர்களுக்குப் புகழும் இருந்தது. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளும் நடந்திருக்க வேண்டும். நினைத்தது நடந்திருக்கும். ஆனால் தற்போது நடைபெற இருக்கும் குருபெயர்ச்சி எந்தக் காரியத்திலும் தடையை ஏற்படுத்தும். பதவி மாற்றமோ, தற்காலிக நீக்கமோ அல்லது இடமாற்றமோ ஏற்பட்டு இவர்களுக்கு மனச் சஞ்சலம் ஏற்படும் வாய்ப்பு அதிகம் தெரிகிறது. உங்கள் செல்வாக்கிற்கு சவால் விடும் ஆண்டாக அமையும். எனினும் சுக்கிரன் உங்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிப்பார். எதை எங்கு யாரிடம் பேசினாலும், அன்புடனும் நிதானித்துப் பேசுங்கள். மாதத்தின் முற்பகுதியில் கெடுக்க நினைக்கும் கதிரவன், பிற்பகுதியில் உங்களுக்குத் தேவையானதைக் கொடுக்கவும் செய்வார். எனவே அரசுத் துறையினர், வங்கித் துறையினர் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் அனைவருமே ஆதித்ய ஹிருதயஸ்தோத்திரத்தைப் படியுங்கள். அல்லது கேசட்டு மூலம் கேளுங்கள். சூரிய நமஸ்காரம் செய்யத் தெரிந்தவர்கள் முறைப்படி காலையில் ஏழு முறை செய்து வாருங்கள். குறிப்பாக மாதத்தின் பிற்பகுதியில் அரசியல் துறை, பத்திரிகைத் துறையில் உள்ள இந்த இராசிக்காரர்களின் சொல்லும், செயலுமே இவர்களுக்கு எதிரிகளை உருவாக்கி விடும். தோல்வியைத் தழுவும்படி செய்து விடும். வாக்குஸ்தானத்தில் சுக்கிரன் நீச்சமடைந்துள்ளதை மறந்து விடக் கூடாது.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

இராகுவும், சுக்கிரனும், சனியும் தவிர மற்ற கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக இல்லை. எனவே மேலதிகாரிகளைப் பார்ப்பது, உறவினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் உதவிகள், வேலை மாற்றம் சம்பந்தமான வேண்டுகோள் போன்ற எதையும் கூடிய வரை ஒத்திப் போடுவது நல்லது. கேட்டுக் கிடைக்கவில்லை என்றால் தன்மானத்திற்குத் தலைகுனிவு ஏற்படத்தானே செய்யும். செய்யும் தொழில் சிரத்தையுடன் செய்து வாருங்கள். சனீஸ்வரனும், இராகுவும் பக்க பலமாக இருப்பதால் அன்றாடப் பணிகளுக்குத் தடை ஏற்படாது. தாம்பத்திய உறவு முதலிரண்டு வாரங்கள் சீராக இருக்கும். ஆனால் 11-ந் தேதியிலிருந்தே சிறு சிறு சச்சரவுகள் ஆரம்பிக்கலாம். எனவே அதற்கேற்ப எதையும் தாங்கும் இதயத்துடன் இருங்கள். வார்த்தைகளை விட்டு விடாதீர்கள். வாயிலிருந்து வெளிவந்த சொல், வில்லிலிருந்து விடுபட்ட அம்பு, நழுவ

விட்ட வாய்ப்பு, கடந்த காலம் ஆகிய இவை நான்கும் திரும்பி வராதவை, என்பர். எனவே கலைத் துறையினர் வங்கித் துறையில் பணிபுரிபவர் மற்றும் வாகனத் துறையில் பணிபுரியும் இயக்குனர்கள், உயர் பதவிகள் உள்ளவர்கள் அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் குழப்பமடைய வேண்டி இருக்கும். சுக்கிரன் துலா ராசிக்குச் சென்றதும், இந்த ஆண்டு முழுவதுமே மகோன்னதமாக அமைந்து விடும். அதன் பிறகு இவர்களுக்கு இராஜயோகம்தான்.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசிநாதனாகிய சுக்கிரன் மாத ஆரம்பத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சியை தர இருக்கிறார் என்றாலும், இதர கிரகங்கள் சரியான நிலையில் சஞ்சரிக்கவில்லை. சுக்கிர தசை அல்லது உச்ச சனிதிசை, மேஷத்தில் ராகு இருந்து தசை நடப்பவர்களுக்கு நல்லன நடக்கும். கோசாரம் பற்றிய கவலை தேவையில்லை. மற்றவர்கள் மிகவும் கவனத்துடன் தன் கடமைகளைச் செய்ய வேண்டும். இது எத்துறையினர்க்கும் பொருந்தும். அடுத்த மாத ஆரம்பம் நன்றாக அமையலாம். தாம்பத்திய உறவில் மாதத்தின் பிற்பகுதியில் நீச்ச சுக்கிரனால் சிறு சிறு பிரச்னைகள் உருவாகும். குருவும் செவ்வாயும் சேர்ந்திருப்பதால் குரு மங்கள யோகம் உண்டு. அதனால் நில சம்பந்தமான விஷயங்களில் நன்மை ஏற்படும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்ளுங்கள். கோளறு பதிகம், நவக்கிரக ஸ்தோத்திரம் இவைகளைப் படிப்பது நல்லது. பெண்கள் லலிதா சகஸ்ரநாமம் அல்லது லக்ஷ்மி ஸ்தோத்திரம் படிப்பது, அல்லது பிறர் சொல்லக் கேட்பது நல்லது.

> சோயா பீன்ஸ் ஊற வைத்து ப்ரிஜ்ஜில் வைத்துக் கொள்ளுங்கள். தினமும் குக்கரில் சாதம் பருப்பு வைக்கும் போது சின்னக் கிண்ணத்தில் ஒரு பிடி ஊற வைத்த சோயா பீன்ஸ் போட்டு வேக விடவும். பிறகு இதனை சாம்பாரில் அல்லது காய்கறியுடன் சேர்த்து விடுங்கள். உங்கள் குடும்பத்துக்குத் தேவையான புரதச் சத்தை எளிதில் பெறலாம்.
>
> – ராஜலக்ஷ்மி



விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

சுமாரான மாதம் என்றுதான் கூற வேண்டியுள்ளது. மாதத்தின் முதலிரண்டு வாரங்களில் சூரியன் உதவும் நிலை தென்படுகிறது. அதனால் கலைத்துறையினருக்கு யோகம் உண்டு. தந்தை வழியில் பணமோ, நிலமோ கிடைக்கும். அரசுத் துறையில் உள்ளவர்களுக்கும் ஆதாயம் உண்டு. பதவி உயர்வுக்கு வழியுண்டு. எழுத்துத் துறையினர் ஏற்றம் பெறுவர். ஆனால் மாதத்தின் பிற்பகுதியில் அத்தகைய ஆதாயங்களை எதிர்பார்க்க இயலாது. விரயபாகத்தில் நான்கு கிரகங்கள் - அவைகளிடையே கிரக யுத்தங்கள் - குரு கூட இருப்பதால் அன்றாடப் பணிகளில் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. எனவே இந்த கால கட்டத்தில் எந்தப் புது முயற்சியையும் ஆரம்பிக்க வேண்டாம். திருமண நிச்சயம் ஒன்று கை கூடி வரும் சமயம், ஒரு பெண்ணால் தடை செய்யப்படலாம். இது போலவே மற்ற எந்த முயற்சியிலும் ஏதாவது தடங்கல் வரலாம். அதனால் ஆன்மிகத்துறையில் ஈடுபடுவது நல்லது. செந்தூர் முருகனையும், கற்பக விநாயகனையும் மனதாரத் தொழுங்கள். பிரச்னைகள் தானாக விலகிவிடும்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

மாதம் பூராவும் ஆதித்தனின் ஆசிகள் உண்டு. ராகுவைத் தவிர மற்ற அனைத்து கிரகங்களும் உங்களுக்கு உதவியே நீருவது என்று உலா வருகிறார்கள். பின் ஏன் தயக்கம்? முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டியது தானே? பதவி உயர்வில் தடங்கலா? படவுலகில் வாய்ப்பு குறைந்துள்ளதா? தொழிலில் தேக்கமா? எதுவானாலும் பரவாயில்லை. பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டியதைக் கேட்டுப் பெற வேண்டியதைப் பெற்றிடுவீர்கள். இந்த மாதம் தயக்கம் காட்டினால் வாய்த்த தருணத்தை நழுவ விட்டு விடுவீர்கள். இது எத்துறையினர்க்கும் பொருந்தும். புனித யாத்திரை ஒன்றும் சுபநிகழ்ச்சி ஒன்றும் உங்களுக்கு சுப விரயத்தை அளித்தாலும், அதற்குரிய ஆதாயமும் கிடைத்து விடும். செந்திலாண்டவனும் தட்சிணாமூர்த்தியும், திருமாலும் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள். எனவே இவர்களில் எவரையேனும் ஒருவரையாவது சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள். ஆனால் கொடுக்க வேண்டிய இடத்தில் சிக்கனத்தைக் கையாண்டு விடாதீர்கள். திருமணத்திற்குக் காத்து இருப்பவர்களுக்கு மண

மேடை ஏறத்தக்க வாய்ப்பினை குரு ஏற்படுத்துவார் - நல்லதொரு மாதம்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

இந்த இராசிக்காரர்களுக்கு ஏற்றத் தாழ்வு நிறைந்த மாதம்தான். சூரியன் பிற்பகுதியில் கீர்த்தியைத் தருவார். இராகுவால் நன்மை உண்டு. புதன் சுகத்தைத் தருவார். சுக்கிரனும் உதவும் நிலைதான். எனவே தாம்பத்திய உறவிலோ, நிதி வசதியிலோ பிரச்னைகள் ஏற்படாது. ஆனால் பிறரின் மறைமுக எதிர்ப்புகள் உங்களைப் பாதிக்கலாம். குழந்தைகளின் குணநலன்களிலும், கல்வியின் முன்னேற்றத்திலும் கண்டிப்புடன் கூடிய அன்பு முறையில் கவனம் தேவை. ஐந்தாமிடத்து கேது அந்தகைய நிலையை உருவாக்கலாம். கருப்புக் கல், நிலக்கல் வியாபாரிகளுக்குக் கூடுதல் இலாபம் ஏற்படும். அரசியலில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத மாற்றமும், அதன் பயனாக ஆதாயமும் உண்டு. இரசாயனத் துறை எரிபொருள் துறையினர்க்கு ஏற்றமுண்டு. ஆசிரியைகள் பட்டமேற்படிப்புக்கு முயலலாம். ஆயினும், எந்த விஷயத்திலும் சற்று தடங்கல் ஏற்பட்டே பிறகு கைகூடி வரும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசியில் உள்ள ஆட்சி சனிக்கு தேவ குருவின் பார்வை உள்ளது. இதுவரை இருந்த சிரமங்கள் குறையும். 9-ம் இடத்தில் உள்ள கிரகங்களின் சேர்க்கை சஞ்சலத்தையும் சங்கடத்தையும் உண்டாக்கப் பார்த்தாலும், குருவின் பார்வையும், சேர்க்கையும் மற்ற கிரகங்களை கட்டுப்படுத்தி வைக்கும். தொழில்துறையில் சற்று தடங்கல் ஏற்படலாம். குறிப்பாக அஷ்டமத்தில் அமரும் நீச்ச சுக்கிரன் தாம்பத்திய வாழ்க்கையில் அமைதியைக் குலைத்தாலும், குரு கவனித்துக் கொள்ளுவார். அதாவது உங்களுக்கு நிதானமாக நடந்து கொள்ளும் ஞானத்தை வழங்குவார். அலுவலகப் பெண்டிர், அரசியல் துறையினர் மற்றும் காவல் துறையினர் கவனமுடன் செயலாற்றுங்கள். மனதில் குழப்பம் ஏற்படும் போது ஆழ்நிலைத் தியானத்தை மேற்கொள்ளுங்கள். ஆத்திரம் வரும் கோபமும் உண்டாகும். வார்த்தைகளும் வேகமாக வெளியேறும். இவைகளைத் தடுக்கத்தக்க ஞானம், தியானத்தின் மூலம் தான் பெற முடியும். முடிந்தால் நீலக்கல் மோதிரம் ஒன்று அணியலாம். கல்லை வீட்டில் ஒரு வாரம் வைத்து, ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அதை மோதிரமாகக் கட்டி உபயோகிப்பதோ, அல்லது மீண்டும் பொட்டலம் கட்டி வாங்கிய இடத்திற்கே திருப்பி அனுப்புவதோ செய்யலாம். சனீஸ்வரப்ரீதி, தோத்திரம், எண்ணெய் விளக்கு இவைகளை பரிகாரமாகச் செய்து பாருங்கள்.

மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

இயற்கையிலேயே மீனராசிக்காரர்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவார்கள். பணிவும் பண்பும் உடையவர்கள். அத்தகையவர்களுக்கு $7\frac{1}{2}$ சனி - இதுவரை இருந்த குருவின் பார்வை மாறிய நிலை. சற்று மனநிலை, உடல்நிலை இரண்டும் இராகுவால் பாதிக்கப்பட்டாலும், 3-ம் இடத்துக் கேது அதை மாற்றி அமைதியையும், மகிழ்ச்சியையும் தர இருக்கிறார். எனவே விநாயகப்புராணம் படிக்கவும். அவலங்கள் அகலும். ஆற்றல் அதிகமாகும். சோம்பித் திரியும் நிலை மாறும். இலாபாதிபதியான சனி விரையத்தில் இருந்து கொண்டு, $7\frac{1}{2}$ சனியின் முதல் பாகத்தில் உங்கள் இராசியைப் பிடித்துள்ளார். அஷ்டமத்தில் குரு. எனவே தக்ஷிணாமூர்த்திக்கு அர்ச்சனையும், செந்தில் முருகனுக்குச் செம்பருத்திப் பூவால் அர்ச்சனையும் செய்து, லலிதா சகஸ்ரநாமத்தையும் படித்து வாருங்கள். அலுவலகம் செல்லும் பெண்களின் அன்றாடப் பணியில் ஏற்படும் பாதிப்பும் குறையும். நீச்ச சுக்கிரனால், காதல் விஷயத்தில் ஈடுபட்டவர்களிடையே மோதல் ஏற்படலாம். எனவே எச்சரிக்கையுடன் பழகுங்கள். இல்லாவிட்டால் உறவில் பிளவு ஏற்பட்டு விடும். திருமணத்திற்குத் தற்போது வாய்ப்பு இல்லை.

– ஜெயலட்சுமி கிருஷ்ணன்

காலி பால் பைகள், எண்ணெய் பைகளைத் தூர எறிந்து விடாதீர்கள். எண்ணெய் டப்பாக்கள், டின்கள், தூக்குகளுக்குப் பாதியளவு உறைகள் மாதிரி போட்டு வைத்தால் கப்போர்டுகள், அலமாரிகளில் எண்ணெய்ப் பிசுக்கு பிடிக்காது.

– விஜயகீதா



மேகலா

விற்பனையாகும் அக்டோபர் 1-15 இதழில்...!

தேவிபாலா

எழுதிய



நானிருப்பேன் நதிக்கரையில்

- நயமான நாவல்

விலை ரூ: 4

ஒவ்வொரு 16 ஆம் தேதி இதழிலும் நாவல் எழுதும் பாலகுமாரன்...

அக்டோபர் 16-31 இதழில்...! எழுதும் நாவல்

ஒரு பொல்லாப்புமில்லை!

இதழுக்கொரு பத்திரிகையாசிரியர்

ராஜம்: சந்திரா ராஜசேகர்



குமரன் ஸ்டோர்ஸ் வழங்கும் பட்டுப்புடவை

பட்டர்ஃபிளை வழங்கும் பிரஷர் குக்கர் பரிசுகள்.

★ 'என்ன ஆச்சு தெரியுமா?'வில் ஆந்திரப் பெண்ணின் மாட்டுச் சம்பவத்தைப் படித்ததும் மூன்று மாட்டு சிரிசிரி என்று சிரித்து விட்டேன்.
சேலம் - 1, ரவி பாலாஜி.

★ எங்கள் திருவண்ணாமலையில் இருந்து கொண்டு கருணையின் உருவமாக அருளாட்சி செய்து வரும் மகான் யோகிராம் சுரத்குமார் அவர்களுக்குக் காணிமட மந்த்ராலயம் "எழுப்பிய பணியில் முன்னே நின்ற வழக்கறிஞர் பொன். காமராஜ் அவர்களைப் பற்றி அறிந்த போது "தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் அரிதே" என்ற வரிகள் என் நினைவுக்கு வந்தன...
திருவண்ணாமலை, என். சண்முகம்.



★ தனது கவலையும் வேதனையும் பார்த்துத் தளர்ந்து விடாமல், தங்கள் குழந்தையைப் போல ஹீமோபிலியா நோயால் பாதிக்கப்பட்டு, பிரச்னைக்குள்ளாகி வேதனைப்படுபவர்களைத் தேடிப் பிடித்து, மற்றவர்களின் துன்பத்தையும் கரைத்து விட நினைக்கும் உயர்ந்த உள்ளம் லட்சத்தில் ஒருத்தருக்குத் தான் உண்டு. அவ்வகையில் திருமதி. உஷா பார்த்தசாரதி அவர்கள் போற்றுதற்குரியவர்.
பரமக்குடி, பா. உஷாராணி.

★ 'என்கிட்டே ஏன் சொல்லலை?' என்ற சிறுகதையைப் போலவே அக் கதைக்கு ஸ்யாம் வரைந்திருந்த ஓவியம் அழகாகவும், அருமையாகவும் இருந்தது. நோவை ஓவியத்தில் சிறிது நேரம் பார்த்து ரசித்தேன்!
மாணாம்பதி, பா. பகபதி.

★ மாடித் தோட்டம் பற்றிய கட்டுரை புதிய செய்திகளைக் கொண்டு பசுமைப் புரட்சிக்குத் தூண்டுகோலாகவும் இருந்தது.
திண்டுக்கல், கண்மணி ஜெகநாதன்.

★ 'மயக்கும் மழலை எதுவரை' என்ற கவர் ஸ்டோரியில் நாம் இதுவரை நினைத்துப் பார்க்காத, கேள்விப்படாத புதுப்புது விஷயங்களை டாக்டர் மனோகர் பேட்டியின் மூலம் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆறு வயதான குழந்தை இனி மழலை பேசினால் அதைக் கேட்டு மகிழும் பெற்றோருக்கு இது ஒரு எச்சரிக்கையும் கூட!
சென்னை - 44, கே. சுந்தரா.

★ ஆண்களைப் புரிந்து கொள்வோம் கட்டுரைக்குப் பதிலாக ஆண்கள் எழுதியவை அனைத்தும் வித்தியாசமாகவும் அதே சமயம் நியாயமாகவும் இருந்தன.
திருச்சி - 14, ராஜிராதா.

★ உணவுத் துறை வல்லுநர் தந்த "சிறப்பு உணவுப் பக்கங்கள்" சிறப்பாக இருந்தன. என்ன... எனக்கு வேலைப் பளுவை கொஞ்சம் கூட அதிகமாக்கி விட்டது. இருந்தாலும் குழந்தைகள், வயதானவர்கள், கணவர், உடல்நலம் இல்லாதவர்கள் - என அனைவரையும் திருப்திப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது.
பொள்ளாச்சி, என். சித்தாலட்சுமி.

★ நீரைச் சிந்தினாயோ - சீரைச் சிந்தினாயோ? கட்டுரை, சென்னை நகரவாசிகள் இன்று அனுபவித்து வரும் தண்ணீர் கஷ்டத்தினிடையே கடைபிடிக்க வேண்டிய சிக்கன முறைகளை தெளிவாகவும் பயன்படும் முறையிலும் எடுத்துக் கூறியிருந்தது.
சென்னை - 78, மேகலா மாணிக்கம்.

★ 1.9.9.3 சாவி வார இதழில் வெளியாகியிருக்கும் தமயந்தி எழுதிய நெருஞ்சிப் பூ கதை அப்படியே அப்பட்டமாக அச்சுப் பிறழாமல் அதே தமயந்தி என்பவர் மங்கையர் மலருக்கும் எழுதி அனுப்பியிருக்கிறார். இது மாதிரி இரண்டு பத்திரிகைகளுக்கு ஒரே கதையை அனுப்புபவரை எப்படிக் கவனிக்க வேண்டுமோ அப்படி கவனியுங்கள்.
மதுரை - 16, ஆர். பத்மா.

அன்புள்ள ஆசிரியருக்கு,
இது தமயந்தி! ஸாரி... இது மட்டுமே சொல்ல இயலுகிறது. சாவிக்குக் குறுநாவல்

சொல்ல விரும்புகிறோம்!

அனுப்பி விட்டு, தொலைபேசி மூலம் முடிவு கேட்ட போது, 'நிராகரிக்கப்பட்டது. வேறு குறுநாவல் அனுப்புங்கள்' என்றவுடன் அந்தக் குறுநாவலை உங்களுக்கு அனுப்பினேன். அது இந்த மாதம் பிரசுரமாக மிக மகிழ்ந்தேன். ஆனால் சாவியிலும் பிரசுரமாகி இருப்பதை அறிந்து அதிர்ந்தேன். நிராகரிக்கப்பட்டது என்று அவர்கள் சொன்னதை மலை போல் நம்பியே நான் உங்களுக்கு அந்தக் குறுநாவலை அனுப்பினேன். எழுத வந்த இந்த ஐந்து வருடத்தில் இதுபோல் ஆனதில்லை. என்னால், 'மங்கையர் மலருக்கு' ஏதேனும் களங்கம் வந்திருப்பின் கரம் கூப்பி மன்னிப்புக் கோருகிறேன்.

– தமயந்தி

★ 'ஹீமோஃபீலியா' நோயை எதிர்த்துப் பாடுபடும் திருமதி. உஷாவின் விலாசம் கேட்டு நிறைய பேர் எழுதுகிறார்கள். அவர்களுக்காக :-

திருமதி. உஷா பார்த்தசாரதி,
A-10, சாந்தி பிளாட்ஸ்,
ராக்கியப்ப முதலி தெரு,
மைலாப்பூர், சென்னை – 4.
போன் : 847973

திருமண மலர்

மணமகள் தேவை

★ ஐயர், வடமாள், நைத்ருவ காசியப கோத்திரம், கிருத்திகை (ரிஷப ராசி), 32, 165, 4000 மத்திய அரசு பணி (பம்பாய்) வரனுக்குப் பார்த்த மாற்றத்தக்க வேலையிலுள்ள/வேலைக்குப் போகும் விருப்பமுள்ள மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10468

★ ஐயர், வடமாள், கௌசிக கோத்திரம், திருவோணம் நட்சத்திரம், வயது 28, உயரம் 5'8", D.M.E., D.MQ.M., (M.Com) TVS Group- MA Executive Officer ஆக பணிபுரியும் வரனுக்கு, 26 வயதுக்குள் Bank/LIC/Central Govt ல் வேலை பார்க்கும் மாற்றலாகக்கூடிய பெண் தேவை. பையனின் மாத வருமானம் ரூ 4800/- பெட்டி எண் : 10521

★ மத்வா, தேஷஸ்தா, பூசம், கடகம், பி.காம்., 24/182 செ.மீ., சொந்தமாக சொத்து உள்ளது. வேலை செல்ல அல்லது தொழில் செய்ய உத்தேசம். நல்ல நிறம். அழகான மணமகனுக்கு அதே இனத்தில், பிரிவில் 18 முதல் 23 வயதுள்ள வசதியான குடும்பத்திலிருந்து மணமகள் தேவை. ஜாதகம், அவசியம். பெட்டி எண் : 10522

* Alliance invited for Madva, Kannada boy 31/164/BE Uthiratadi Harisya Gothra from girl with degree decent family employed/unemployed. Contact Box No. 10523

★ பிரஹசரணம், கௌதம கோத்திரம், அய்யர், 39, எம்.காம்., உத்திரம், உயரம் 5'11", கல்கத்தா பல்கலைக் கழகத்தில் ஆடிட் அஸிஸ்டெண்ட், ரூ.2500/- நிரந்தர வேலையுள்ள வரனுக்கு, குடும்பப்பாங்கான வேலைக்குப் போகும்/போகாத பட்டதாரிப் பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10524

* Iyengar Boy Kousika/33/175cms/LME/BA/Rs.4000/- Steel Plant, Visakapatnam seeks alliance from fair girls employed Bank/Insurance/Government. Sub-sect no bar. Reply to Box No. 10525

* Alliance invited from graduate girls below 26 years for Vadama, Koundinya, Pooram, 31 years, State Govt. employed graduate boy. Subsects no bar. Reply with horoscope & details to Box No. 10526

* Alliance invited for Vadama, Bharatwajam, Iyer slim and medium colour rich Respectable family boys aged 32, Sathayam and 29 Revathy stars employed in Private Company from parents of employed girls. no dowry. Box No. 10527

* Vadagalai, Bharatwajam, Iyengar boy passed +2 & Stenography employed in Central Govt. age 29 ht. 6'1" drawing 2700/- pm seeks suitable employed girl (preferably Bombay based) please reply with horoscope & family particular to Box No. 10528

* Palghat Iyer, Vadamal, Viswamitra, Krithigai 42 Bank Officer seeks good-looking preferably graduates decent family girls around 35 to Box No. 10529

* Faith to god, broad-minded, good looking, Iyengar boy, 32/165/1000/belongs to well placed family, seeks deaf & dumb or blind or any physically handicapped or widow from any very well placed family. He ready to settle his life at brides residance, at any where in the world. Full details reply (english or tamil) note : first preference to Brahmins. Box No. 10531

★ அய்யங்கார், வடகலை, நைத்ருவ காஸ்யப உத்திரம் நான்காம் பாதம், வயது 30, +2, நல்ல நிறம், களையான தோற்றம், உயரம் 171 செ.மீ. மதுரையில் கீர்த்தி வாய்ந்த போக்குவரத்து ஸ்தாபனத்தில் வேலை. மாதம் 2400, போனஸ். பெட்டி எண் : 10532

* Telugu Brahmin, IAS, Handsome 27/163 invites proposals from affluent cultured very fair, beautiful girls, below 24/163 post graduate/professional, interested in Carnatic music, employment Not essentail. Send full particulars, horoscope to Box No. 10533

★ சௌராஷ்டிர குலம், சாலிய ரிஷி கோத்திரம், வயது 25, படிப்பு B.E. (Mech.) சென்னை தனியார் கம்பெனியில் இன்ஜினியராக பணிபுரியும் வரனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த 23 வயதிற்கு மேற்படாத பட்டதாரி மணமகள் தேவை. ஜாதக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10534

